ஆப்கன் படையினர் 12 பேர் கடத்திச் சுட்டுக் கொலை
பக்கம் 14-15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 197 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 28, வெள்ளிக்கிழமை 10.06.2016

## நெல்சிப் ஊழல், மோசடி அதிகாரிகள் மீது வழக்கு

### அடுத்த வாரம் தாக்கலாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட நெல்சிப் திட்டத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுவரும் நிலையில் இதனுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அதிகாரிகளுக்கு எதிராக அடுத்த வாரம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக, வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அலுவலகம் தெரிவித்தது.

வடக்கு மாகாணத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் நெல்சிப் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் வரை ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக அரசியவாதிகள் குற்றச்சாட்டு பக்.25

## இரணைமடுக் குடிதண்ணீர் திட்டத்தை அரசு கைவிடாது

### சபையில் அறிவித்தார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 10

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்குக் குடிதண்ணீரைக் கொண்டும் செல்லும் திட்டத்தைக் கைவிடும் எண்ணம் அரசுக்குக் கிடையாது என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

ஓர் இடைக்காலத் தீர்வாகவே, கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். அதனைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் பக்.25

## மகிந்த பெற்ற ட்ரில்லியன் டொலர் கடன் குறித்து பிரதமர் பாய்ச்சல்

### நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரைப் பார்த்துக் கேள்வி

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்றத்தின் அனுமதி பெறாமல், வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட 1.2 ட்ரில்லியன் ரூபா கடன் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் ஜனாதிபதியாகவிருந்தமையால், உங்களால் பேச முடியவில்லை. இன்று நல்லாட்சியில் பேச முடிகின்றது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க பக்.24

## நிதி அமைச்சருக்கு எதிரான பிரேரணை 94 மேலதிக வாக்குகளால் தோற்கடிப்பு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 10

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவைப் பதவியிலிருந்து நீக்கும் நோக்குடன், மகிந்த ஆதரவு அணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 94 மேலதிக வாக்குகளினால் ஆளும் தரப்பினால்



நேற்று நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டது. ஆதரவாக 51 வாக்குகளும் எதிராக 145 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

பிரேரணைக்கு ஆதரவாக மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் விடுதலை பக்.24

## நாடாளுமன்றில் சம்பந்தன் நேற்று அறிவுரை

கொழும்பு, ஜூன் 10

நாம் ஒவ்வொருவரும் தூய்மையான முறையில் பொதுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். ஏனையோர் மீது குற்றம் சுமத்துவதற்கு முன்னர், நாம் முன்மாதிரியானவர்களாக இருக்கின்றோமா எனப் பார்க்க பக்.24

## இராணுவம் முழுவதும் வெளியேறினால் பொலிஸார் எமது பாதுகாப்பை கவனிப்பர்

### இப்படிப் பதிலடி கொடுக்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இராணுவம் போர் முடிந்து 7 வருடங்களின் பின்னரும் இங்கு தரித்து நிற்பதே எமது பிரச்சினை. எங்கள் காணிகளை எடுத்துள்ளனர். வீடுகளை எடுத்துள்ளனர். வளங்களைப் பாவிக்கின்றனர்.

வணிகத் தொழில் பக்.24

## மாவட்டச் செயலர்களும் மாகாண நிர்வாகத்துக்குள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

மாவட்டச் செயலாளர்கள் கூட, மாகாண சபையின் கட்டுப்பாட்டின் கீழ் வெகு விரைவில் கொண்டு வரப்பட இருக்கின்றார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண பக்.24

## 18ஆம் திகதி செய்மதி ஊடாக யாழ்ப்பாணத்தில் மோடி உரை

கொழும்பு, ஜூன் 10

புனரமைக்கப்பட்டுள்ள துரையப்பா விளையாட்டரங்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எதிர்வரும் 18ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விசேட பக்.25

## 5 வயது சிறுவன் மூச்சுத் திணறிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

5 வயதுச் சிறுவன் சுவாசிக்க முடியாது மூச்சுத் திணறி உயிரிழந்தான். சுவாசப்பைக்கு அருகில் வளர்ந்து வந்த நீர்க்கட்டி சுவாசப்பையை அமுக்கியதால் இந்த இறப்பு நிகழ்ந்ததாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தாவடி தெற்கு பக்.25

## கடமை நிறைவேற்று அதிபர்களுக்காக தகுதியானவர்களை தூக்கியடிப்பீர்களா?

### வீதியில் இறங்கிப் போராட வேண்டிவரும் என அதிபர்களாக பொறுப்பேற்க உள்ளவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கடமை நிறைவேற்றும் அதிபர்களைக் காப்பாற்றுவதற்காக, முழுமையான தகுதியுடன் பதவி வழி வந்தவர்களை ஓரம் கட்டலாமா? என்று கேள்வி எழுப்பியுள்ள பாதிக்கப்படக் கூடும் என்று அஞ்சப்படும் - தெரிவு செய்யப்பட்டு தற்போது பயிற்சியிலுள்ள தரம் 3 அதிபர்கள், தமக்கு நீதியான தீர்வு கிடைக்கத் தவறின் வீதியில் இறங்கிப் போராடுவதும், நீதி மன்றத்தை பக்.25

## மயிலிட்டி ஆயுதக் கிடங்கும் வெடித்தால் எல்லாம் பாழ்

### கூறுகிறார் முதலமைச்சர் விக்கி

வவுனியா, ஜூன் 10

கொஸ்கமவில் ஏற்பட்ட ஆயுதக் கிடங்கு வெடிப்புச் சம்பவம் வருந் தத்தக்கது. இது நல்லதொரு படிப்பினை. யாழ்ப்பாணத்தில் பலாலியை அடுத்துள்ள மயிலிட்டி ஆயுதக் கிடங்கிலும் இவ்வாறான விபத்து ஏற்பட்டால், எங்கள் இடங்கள் எல்லாம் பாழாய்ப் போய்விடும். பக்.23



வர்தன
ரன்வரம
தங்க நகை அடகுச் சேவை



தங்க நகைகளுக்காக அதிக பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்
• நவீன தொழில்நுட்பத்தில் நகைகள் பரிசிக்கப்படும்
• பூரண இரகசியத்தன்மை பேணப்படும்
• கடனை சிறிது சிறிதாக செலுத்தி நகைகளை மீட்கலாம்

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு
73/5, காலி வீதி, கொழும்பு 03 Web : www.dfcc.lk
துரித அழைப்பு: (011) 2 350 000

Digitized by Noolaham Foundation.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குளப் புனரமைப்பு முறைகேடு குறித்த அறிக்கை சமர்ப்பிப்பு

## பேரவைச் செயலகத்திடம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
முல்லைத்தீவில் இரு குளங்களின் புனரமைப்பின்போது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அறிக்கை, பேரவைச் செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விசாரணை அறிக்கை மீதான நடவடிக்கை மாகாண சபையாலேயே தீர்மானிக்கப்படவுள்ளது என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணிமுறிப்பு மற்றும் உடையார்கட்டுக் குளங்கள் மக்கள் மீள்குடியமர்வின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டன. இதன்போது தரமற்ற வேலைகளும், முறைகேடுகளும் இடம்பெற்றுள்ளன என்று அந்தப் பகுதி விவசாய அமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

அதனடிப்படையில் இந்த விடயம் வடக்கு மாகாண சபையின் 25ஆவது அமர்வில் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தலைமைச் செயலாளரால் விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அதன் அறிக்கை வடக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டது.

மாகாண சபையின் தீர்மானத்துக்கு அமைவாக தலைமைச் செயலாளரால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நீண்ட காலம் இழுத்தது.

அதனால் தலைமைச் செயலாளர், அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கடிதம் மூலம் குழுவிடம் கேட்டுக் கொண்டார்.

இந்த அறிக்கை தற்போது வடக்கு மாகாண பேரவைச் செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாகாண சபையில் இந்த அறிக்கையின் தொடர் நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (ந-ஜ-5)

# முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு அடுத்த அமர்வில்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபை அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கு கடந்த 2014ஆம் ஆண்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய நியதிச் சட்டம் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியால் அதற்கு ஒப்புதல் வழங்கப்படவில்லை.

முதலமைச்சர் நிதியம் உருவாக்குவதற்கு சட்ட ஏற்பாடுகள் இல்லை என்று அதன்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதனால் நியதிச் சட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் மீளவும் புதிய முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதலாம் வாசிப்பு மாகாண சபையின் கடந்த அமர்வில் இடம்பெற்றது. இரண்டாம் வாசிப்புக்காக நியதிச் சட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள சபை அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ந-ஜ-5)

# ஆறு மாதங்களாக தேடப்பட்டவர் கைது

## தண்டனை முடிந்து வந்து மீண்டும் குற்றமிழைத்தாராம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
குற்றம் புரிந்து 3 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர் தண்டனை முடிந்து வெளியே வந்து மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாயைச் சேர்ந்த யோதீஸ்வரன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் பூசகர் ஒருவரது வீட்டிலும் கொள்ளையடித்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் அவர் மேலும் பல திருட்டுக்களில் தொடர்புபட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அதன்படி குறித்த நபரைக் கைது செய்யுமாறு நீதிமன்று பிடியாணை பிறப்பித்திருந்தது.

அவர் சுமார் 6 மாதங்களாகத் தலைமறைவாகியிருந்த நிலையில், தற்போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதுதவிர, மற்றொரு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சீக்கியன் என்றழைக்கப்படும் யோகேஸ்வரன் என்ற ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனறும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-ஜ-4,26

# 5 மாணவிகள் துன்புறுத்தல்: ஆசிரியருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 10
திருகோணமலை - புல்மோட்டை பிரதேசத்திலுள்ள சிங்கள பாடசாலையின் ஐந்து மாணவிகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்று சந்தேகிக்கப்படும் ஆசிரியரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குச்சவெளி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் பொன்னண்டோ நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

புல்மோட்டை பிரதேச பாடசாலையில் 14 மற்றும் 15 வயது மாணவிகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினர் என்று பெற்றோர்கள் மூலம் மாணவர்கள் புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டையடுத்து பொத்துவில் பகுதியைச் சேர்ந்த ஜானதிலக கருணாசேன (வயது-40) என்ற ஆசிரியர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக இது வரை 5 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், இன்னும் சில மாணவர்கள் பெற்றோர்கள் ஊடாக முறைப்பாடுகளை வழங்கி வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-ஜ-5)

# பாரதி வீதி புனரமைப்புக்கு ரூபா 4 மில்லியன் ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஜூன் 10
அளவெட்டி கிழக்கு பாரதி வீதி புனரமைப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா தனது பன்முகப்படுத் தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து 40 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அளவெட்டி கிழக்கு பாரதி வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. வலி. வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அளவெட்டி கிழக்குப் பாரதி சனசமூக நிலையை மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் இந்தக் கோரிக்கையை அடுத்து 900 மீற்றர் நீளமான மேற்படி வீதியைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபையினரே இந்த வீதிப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. (ந-ஜ-25)

# காலாவதியான பொருள்கள் விற்பனை: 26 லட்சத்து 90 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களின் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையை நீடித்து விற்பனை செய்தமை உட்பட காலாவதியான பொருள்களை விற்பனை செய்த விற்பனையாளர்களிடம் இருந்து 26 லட்சத்து 90 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்தசேகரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் சுப்பர் மார்க்கெட்டுக்களில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 5 மாதங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள 5 நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் சுப்பர் மார்க்கெட்டுக்கள் மீது 345 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 5 நீதிமன்றங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் கடந்த ஜனவரி மாதம் 62 வழக்குகளில் 7 லட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபாவும், பெப்ரவரி மாதம் 86 வழக்குகள் 8 லட்சத்து 94 ஆயிரமும், மார்ச் மாதம் 65 வழக்குகளில் 4 லட்சத்து 17 ஆயிரத்து 500 ரூபாவும், ஏப்ரல் மாதம் 68 வழக்குகளில் 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், மே மாதம் 64 வழக்குகளில் 2 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாவும் என 26 லட்சத்து 90 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

7 சுப்பர் மார்க்கெட் மற்றும் 7 பார்மசி, 9 பல நோக்கு கூட்டுறவு சங்கம், 3 உற்பத்தி நிறுவனங்கள் உள்ளிட்டவை காலாவதியான பொருள்களை விற்பனை செய்துள்ளன.

வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்களை நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்கு அதிகமான கால எல்லையை நிர்ணயித்து விற்பனை செய்துள்ளன.

இவ்வாறு விற்பனை செய்த 3 சிகை அலங்கரிப்பு நிலையம் மற்றும் வெதுப்பகங்களும் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றால் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது என்றும் வசந்தசேகரன் குறிப்பிட்டார். (ந-ஜ-106)

தேசிய போசணை மாதம் - ஜூன் - 2016

✦ உள்ளூர் உணவுகளை மீள அறிமுகப்படுத்துவோம்.
பதனிடப்பட்ட உணவுகளை தூர விலக்குவோம்.

✦ பள்ளிச் சிறார்களுக்கு துரிதமாகத் தயாரிக்கும் உணவுகள், உணவுவேளைகளைத் தவிர்த்தல் என்பன பாரதூரமான போசணைக் குறைபாடுகளை ஏற்படுத்தி மூளையின் திறனை மந்தப்படுத்தும்.

# கிராம உத்தியோகத்தர் இராணுவத்தால் தாக்கப்பட்டதைக் கண்டித்து போராட்டம்

கொழும்பு, ஜூன் 10
மட்டக்களப்பு - கிரான் பிரதேசத்திலுள்ள புலாக்காடு கிராம உத்தியோகத்தர் சண்முகம் குரு இராணுவத்தால் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து, கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


மட்டக்களப்பு - மண்முனைமேற்கு, வவுணதீவு பிரதேசத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 31 ஆம் திகதி கிரான் பிரதேச கிராம உத்தியோகத்தர் இராணுவத்தால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு, இதற்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட கிராம உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

மண்முனை மேற்கு, பிரதேச செயலாளர் எஸ். சுதாகரிடம் கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் மனு ஒன்று கிராம உத்தியோகத்தர்களால் கையளிக்கப்பட்டது. (ந-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலில் திருடிய அலுப்பில் அயர்ந்து உறங்கிய திருடன்

## தட்டியெழுப்பிக் கைது செய்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கோயில் உண்டியலை உடைத்து பணம் திருடினார் எனக் குற்றஞ் சுமத்தப்படும் ஒருவர் பணப் பையுடன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த அச்சுவேலிப் பொலிஸார் இவரைத் தட்டி எழுப்பிக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தூர் வீரவாணி பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடந்துள்ளது.

பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் வாதரவத்தை வீரவாணி சப்தகன்னிமார் நாச்சிமார் ஆலயத்தின் உண்டியலை உடைத்து அதில் இருந்த பணத்தைத் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

பின்னர் மோட்டார் சைக் கிளை வீதியோரமாக நிறுத்திவிட்டு அருகில் உள்ள பற்றைக் குள் அயர்ந்து தூங்கியுள்ளார்.

அந்த நேரம் அதிகாலை வீதிச் சுற்றுக் கடமையில் ஈடுபட்டிருந்த அச்சுவேலிப் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் வீதியில் தரித்து நின்ற மோட்டார் சைக் கிளை அவதானித்துள்ளனர்.

உரிமையாளர்கள் எவரும் இல்லாததால் அருகில் உள்ள பற்றைகளுக்குள் தேடுதல் நடத்திய போது உரப்பை ஒன்றைத் தலையணையாக வைத்துக் கொண்டு ஒருவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டனர்.

அவரைத் தட்டி எழுப்பிய பொலிஸார் விசாரித்துச் சோதனை செய்தனர். அவர் தலையணையாக வைத்திருந்த உரப்பையில் பணம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-ஐ-4,107)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது என்று பாடசாலை அதிபர் திருமதி க.கிருஸ்ணபிள்ளை அறிவித்துள்ளார்.

அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-ஐ-ரி)

## கருங்குளவி கொட்டி மூவர் பாதிப்பு

விநாயகர் சதுர்த்திப் பூசையில் கலந்து கொண்ட மூவரை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் துரத்தித் தாக்கின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை கச்சாய் வடக்கில் இடம்பெற்றது.

குளவிகளால் தாக்கப்பட்ட இதே இடத்தைச் சேர்ந்த மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ந-ஐ-9)

## பல்லியுடன் விழுந்த கள்ளை விற்றோருக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 10

சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் பல்லி விழுந்த கள்ளை வழங்கிய தவறணைக் கிளைகளின் முகாமையாளர்களுக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

தென்மராட்சி பகுதிகளில் உள்ள தவறணைகளில் கடந்த சனிக்கிழமை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையில் கள் விநியோகிக்கும் பாத்திரத்துக்குள் (பெரல்) இறந்த நிலையில் பல்லி காணப்பட்டது. கள் சுகாதாரப் பகுதியால் எடுக்கப்பட்ட புகைப் படங்களின் ஆதாரத்துடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, கிளை முகாமையாளர்கள் இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, திகதி காலாவதியான அப்பளம் மற்றும் பிஸ்கட் என்பவற்றை விற்பனைக்கு வைத்திருந்த வரணிப் பிரதேச வர்த்தகருக்கும் 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.

(ந-ஐ-9)

## சங்கானை மீன் சந்தை விசமிகளால் சேதம்

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

சங்கானை புதிய மீன் சந்தை உடைக்கப்பட்டமை தொடர்பாக நேற்று வியாழக்கிழமை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.

வழமையாக இந்தச் சந்தை பிற்பகல் 2 மணியுடன் பூட்டப்பட்டுவிடும். கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சந்தை பூட்டப்பட்ட பின்பு இனந் தெரியாத நபர்களால் யன்னல் கண்ணாடிகள் மற்றும் மலசல கூட கதவுகள் என்பவை சேதமாக்கப்பட்டுள்ளன.

நாளாந்தம் மிகவும் துப்புரவாகவும், கழிவுகள் அகற்றப்பட்டும் சுத்தமாகப் பேணப்படும் இந்த மீன் சந்தையின் செயற்பாடு பிடிக்காத விசமிகளால், இந்த வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பொது மக் கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

“சந்தை சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த திங்கட்கிழமை சேதமாக்கப்பட்ட சந்தையை நேரில் சென்று பார்த்தபோது கண்ணாடி யன்னல் மற்றும் கதவுகள் உடைக்கப்பட்டிருந்தன. இது தொடர் பாக நேற்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது- என்றார் பிரதேச செயலர். (ந-ஐ-ரி,29)

## போதையில் சாரத்தியம்; சாரதி அனுமதிப் பத்திரம் தடுப்பு

சாவகச்சேரி, ஜூன் 10

காப்புறுதிப் பத்திரம், வாகன வரி ஆகியவை இன்றி மது போதையில் வாகனம் செலுத்தியவரின் சாரதி அனுமதிப் பத்திரம் ஆறு மாதங்கள் சாவகச்சேரி நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான், சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன், சாரதி அனுமதிப் பத்திரத்தை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் என்பவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

அத்துடன் வாகனத்தை வீதிப் போக்குவரத்துப் பரிசோதனையில் ஈடுபட்ட பொலிஸா[illegible] நிறுத்துமாறு சமிக்ஞை காட்டிய போது அதனை மீறிச் சென்ற சாரதிக்கு 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தமது சமிக்ஞையை மீறிச் சென்ற வாகனத்தைத் துரத்திப் பிடித்த பொலிஸார் சோதனையிட்ட போது, சாரதிய அனுமதிப் பத்திரம் இல்லாத நிலையிலும், மதுபோதையிலும் காணப்பட்டதையடுத்து மூன்று குற்றச்சாட்டுக்களுடன் சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சாரதி இந்தக் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்[illegible]பட்டது. (ந-ஐ-9)

## முத்தமிழ் அரங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய தமிழ்ச் சங்கம் வழங்கும் முத்தமிழ் அரங்கம் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை தலைமை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செல்வி க.சுஜீவா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண தமிழ் உதவிக் கல் விப் பணிப்பாளர் கௌரி முகுந்[illegible]னும், சிறப்பு விருந்தினராக முன்னாள் உப அதிபர் மு.பேரின்பமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ந-ஐ-ரி)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

**வீடு விற்பனைக்கு**

இல.33 பழைய பூங்காவீதி, கொய்யாத் தோட்டம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: ந.சிவகுமார்
021 224 1374, 076 726 6775

**காணி விற்பனைக்கு உண்டு**

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின் றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

**பெயர்மாற்றம்**

தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த கார்த்திகேசு குணரத்தினம் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து கார்த்திகேசு குணரட்ணம் என மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

கார்த்திகேசு குணரட்ணம்.

**பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்**

**பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நிரந்தர வைப்பிலிடுதல் தொடர்பானது**

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடைமுறைப்படுத் தப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கும் பூநகரி வாடியடி எரிபொருள் நிலைய கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இதனை விரைவில் முடிவுறுத்துவதற்கு அவசியமாக நிதி தேவைப்படுவதால் சங்கத்தின் அங்கத்தவர்களிடமிருந்தும் நலன் விரும்பிகள். பொது அமைப்புக்களிடமிருந்தும் 12 வீத வட்டி அடிப்படையில் நிரந்தர வைப்பில் வைப்பிலிட விரும்புவோர் சங்கத்தின் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு வைப்புச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம்.மேற்படி வைப்புச் சான்றிதழை வருட முடிவில் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும். இத்திட்டமானது 05.06.2016 இல் ஆரம்பிக்கப்பட்டு 05.07.2016 இல் முடிவுறுத்தப்படும். எனவே இவ்விடயம் தொடர்பாக வாடியடி, பூநகரியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 021 206 0852, 077 246 3027

து.இரத்தினசிங்கம்,
தலைவர்.

ம.ஜெயகுமார்
பொதுமுகாமையாளர்.

**சமரச சுத்த சன்மார்க்க ஞானக்குடில் அங்குரார்ப்பண அழைப்பு**

காலம் -
12.06.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை - 7.00- பிற்பகல் 4.00 மணிவரை
இடம் -
இல.25, நக்கா வீதி (புனித யோன் பொஸ்கோ வித். முன்பாக)
மேற்படி நிகழ்வு
திரு.முத்துவேலு இராஜேந்திரன்
(ஸ்தாபகர், சமரச சுத்த சன்மார்க்க ஞானக்குடில்)
தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தகவல்: திரு.முத்துவேலு இராஜேந்திரன்
- 077 762 1644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்புப் பிராணி ரயிலுடன் மோதினால் வளர்த்தவருக்கு எதிராக நடவடிக்கை

ரயில் சேவைப் பொதுமுகாமையாளர் அறிவிப்பு

> ரயிலில் வளர்ப்புப் பிராணிகள் மோதுவதால், ரயிலின் இயந்திரம், பெட்டிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதோடு, ரயில் சென்றடைவதில் தாமதமும் நிலவுகிறது.

வளர்ப்புப் பிராணிகள் ரயிலுடன் மோதினால், வளர்ப்புப் பிராணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைப் புகையிரத சேவைப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை யாழ்.மாவட்டச் செயலாளர் ஊடாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளார். ரயிலில் வளர்ப்புப் பிராணிகள் மோதுவதால், ரயிலின் இயந்திரம் மற்றும் பெட்டிகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுவதோடு, ரயில் சென்றடைவதில் தாமதமும் நிலவுகிறது. அதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே வளர்ப்புப் பிராணிகளை வளர்க்கும் உரிமையாளர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்கப்படுகின்றனர்.

அவ்வாறு கவனம் செலுத்தத் தவறிய வளர்ப்புப் பிராணிகள் ரயிலுடன் மோதும் சந்தர்ப்பங்களில், அதன் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது முகாமையாளரின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-4)

### கஞ்சா விற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்குப் புன்னாலைக்கட்டுவனில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வயாவிளான் சுதந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் படி சந்தேகநபரைத் தேடிப் பொலிஸார் அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் தலைமறைவாகியிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4,107)

### பட்டிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம் - 05 பட்டிமன்றம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சாவகச்சேரி தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'பெருமைமிகு தமிழ்க்கவிதை மரபை இன்றைய சினிமாக் கவிதைகள் சிறப்பித்து வருகின்றன மற்றும் சீரழித்து வருகின்றன' எனும் தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறவுள்ளது. (ற-ஐ-ரி)

## பல்கலை மரங்கள் வெட்டிச் சரிப்பு; விளக்கம் கோருகிறது பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் கோயிலைச் சுற்றியுள்ள பயன்தரு மரங்கள் வெட்டப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு நல்லூர் பிரதேச சபை கோரியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றிக் குறித்த மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அவ்வாறு செய்தமை தவறு என்று கூறப்பட்டுள்ள நிலையில், என்ன அடிப்படையில் அவை வெட்டப்பட்டன என்று யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திடம் பிரதேச சபை நேற்று விளக்கம் கோரியுள்ளது.

ஆனால் குறித்த கோயில் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் உள்ளடங்கவில்லை என்றும், மரங்கள் தறிப்பது தொடர்பில் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ள பல்கலைக்கழக நிர்வாகம், அதற்குப் பரமேஸ்வரன் கோயில் நம்பிக்கை நிதியமே பொறுப்பு என்றும் பதிலளித்துள்ளது. இதனால் நம்பிக்கை நிதியத்திடம் விளக்கம் கேட்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

முன்னாள் பேராசிரியர் ஒருவரே தன்னிச்சையாகச் செயற்பட்டுக் குறித்த மரங்களை வெட்ட அனுமதித்துள்ளார் என்றும், அது தொடர்பில் ஆலோசனைகூட நடத்தியிருக்கவில்லை எனவும் பல்கலைக்கழகத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆலோசனை கூறிய சிலரையும் அந்தப் பேராசிரியர் அவதூறாகப் பேசியுள்ளார் என்றும் கவலை தெரிவிக்கப்பட்டதோடு, தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுள்ளார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு மரங்கள் வெட்டப்பட்டுள்ளபோதும், அவை நேற்றும் அகற்றப்படவில்லை. அந்த இடத்திலேயே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. (த-வ-4)

## மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் கத்தியுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

பாசையூரில் மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாப்பாட்டுக் கடை ஒன்றில் இரு தரப்பினருக்கு இடையில் முறுகல் நிலை தோன்றியிருந்தது. அதன் தொடர்ச்சியாக பாசையூர் அந்தோனியார் வாசிகசாலையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சிலர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

13 பேர் இணைந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் அனைவரும் பணத்துக்காக அடிதடியில் ஈடுபடும் குண்டர்கள் எனத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பலர் ஊரைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கும் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தனர். (ற-ஐ-4,107)

### விபத்தில் குடும்பஸ்தர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 10

வீதியின் குறுக்கே நாய் ஓடியதால் வேகமாக இரு திசைகளிலிருந்தும் வந்த மோட்டார் சைக்கிள்கள் கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் குடும்பத்தலைவர் ஒருவர் காயமடைந்தார். சம்பவம் நேற்று கைதடியில் இடம்பெற்றது. கைதடி மத்தியைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ற-ஐ-9)



சாவகச்சேரி - பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்

2016 மஹோற்சவ நிகழ்வுகள்

கொடியேற்றம் - 11.06.2016 சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு

சப்பறத் திருவிழா - 18.06.2016 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு

தேர்த்திருவிழா-19.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு

தீர்த்தத் திருவிழா - 20.06.2016 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு

பூங்காவனம் - 21.06.2016 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு

நிகழ்வுகள் குறிப்பிட்ட நேரத்துக்கு நடைபெறும்.

(C/21845)
(11,18)

ஆலய தர்மபரிபாலன சபை.

## மரக் கடத்தலில் ஈடுபட்டேனா?

சாந்தி எம்.பி விளக்கமளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 10

மணல் மற்றும் மரக் கடத்தலில் ஈடுபடுகிறேன் என இணையத்தளங்களிலும், முகநூலிலும் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. செய்திகளை வெளியிடும்போது அதனுடன் தொடர்புடையவர்களிடமும் கேட்ட பின்னரே ஊடகங்கள் செய்தியை வெளியிட வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

அண்மையில் ஒட்டுசுட்டானில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா சட்டவிரோத மண் கடத்தல்களில் ஈடுபடுகின்றார் என்றும், வனவளத் துறையால் அவருக்குச் சொந்தமான வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் கடந்த வாரம் இணையத்தளங்கள் சிலவற்றிலும் முகநூலிலும் செய்திகள் வெளிவந்திருந்தன.

அவை தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேஸ்புக் என்று கூறப்படுகின்ற முகப்புத்தகத்திலும், இணையத்தளங்களிலும் பிழையான அல்லது பொய்யான செய்திகள் வெளிவருவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

எனது மகனால் வங்கி ஒன்றில் லீசிங் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட யே.சி.பி. வாகனத்தின் மூலம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சலுகை அடிப்படையில் அவர்களுக்குக் காணிகளை துப்புரவு செய்து கொடுக்கிறோம். அபிவிருத்தி வேலையிலும் உதவி செய்வது வழமையாக நடந்துகொண்டிருக்கிறது.

அந்த வகையில் கடந்த வாரம் மல்லாவியில் பாலசுப்பிரமணியம் என்பவருடைய காணியில், குறித்த வாகனம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அவரது காணி எல்லையிடப்படாமையால் பக்கத்தில் உள்ள வனவளத்துறையினரின் காணியில் 100 மீற்றர் காணியும் தவறுதலாகத் துப்புரவு செய்யப்பட்டது. அங்கு வந்த வனவளப் பிரிவினர், துப்புரவுப்பணியில் ஈடுபட்ட வாகனத்தைக் கைப்பற்றி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பாரப்படுத்தினர். இதுதான் உண்மை.

இதனைத் திரிபுபடுத்தி மணல் கடத்தல், மரம் கடத்தல் போன்ற தவறான வேலைகளில் ஈடுபடுகிறேன் என முகநூலிலும் இணையத்தளங்களிலும் உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியாகி உள்ளது.

இந்தச் செய்தி என்னை மிகவும் பாதித்துள்ளது. இந்தச் செய்தியை வெளியிட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தங்கள் முடிவுற்றதும் அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஒருவருடைய மதிப்பையும், மரியாதையையும் பாதிக்கும் வகையில் உறுதிப்படுத்தாது செய்திகளை தயவு செய்து வெளியிட வேண்டாம் என அனைத்து ஊடகங்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

-என்றார். (ற-ஐ-21,ரி,506)

சேவைநலன் பாராட்டு



எமது பாடசாலையில் 01.01.2009இல் இருந்து ஆசிரியராகக் கடமையாற்றி இன்று (10.06.2016) வெள்ளிக்கிழமை சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது சிரேஷ்ட ஆசிரியர்

சைவப்புலவர்

திரு.குமாரசாமி சுஜமுகலிங்கம்

(M.A., Dip.in. Ed)

அவர்களது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/92)
(11.6)

வாழ்த்துவோர்:

அதிபர், ஆசிரியர் நலன்புரிகழகம்

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.-மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிகளுக்குச் சத்துணவு வழங்கப்படுவதில் தாமதம்

## வவுனியாவில் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 10
வவுனியாவில் கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவுகளைத் தாமதிக்காது வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் கோருகின்றனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள 42 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள கர்ப்பிணிகளுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தை சமூக சேவைகள் அமைச்சு வவுனியா பிரதேச செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தி வந்தது.

கேள்வி அறிவித்தல் மூலம் பிரதேச செயலகம் பொருள்களை வழங்கும் உரிமையை வியாபார நிலையம் ஒன்றுக்கு வழங்கியிருந்தது. எனினும் அந்த வியாபார நிலையம் பொருள்களை வழங்குவதை மட்டுப்படுத்தி வருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. சிலருக்குப் பொருள்கள் வழங்குவதில்லை. கேட்கும் போது, பொருள்கள் முடிந்து விட்டன என்றும், அடுத்தமுறை வந்து சத்துணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் பதிலளிக்கப்படுகின்றது என்றும் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதையடுத்துக் கர்ப்பிணிகளுக்கான சத்துணவுப் பொருள்களைத் தாமதமின்றி வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச செயலகத்திலிருந்து உத்தியோகத்தரை அனுப்பி குறித்த விடயத்தை ஆராய்ந்து வருகின்றோம்" - என்றார் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா.

(ற-ஜ-21)

## விவாத அரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10
அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் விவாத அரங்கு நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலைச் செயலாளர் செ.பிரசாத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் "இன்றைய தமிழினத் தலைமைகளுக்குப் பெரிதும் வழிகாட்டக்கூடிய தலைவன்" என்னும் பொருளில் விவாத அரங்கு நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரீ)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் ஜூன் 10
உள்ளூர் ஆளுகை நிறுவனத்தால் வட மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறை வவுனியா பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும் என மாகாண உள்ளூராட்சிஆணையாளர் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

---

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 14.05.2016 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் பொன்னம்பலம் சிவவதனி**

அவர்களின் அந்தியேட்டிக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.06.2016) சனிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் 13.06.2016 திங்கட்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெறும். அத்தருணம் அவரது இல்லத்துக்கு தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காளிகோயிலடி,
கைதடி கிழக்கு,
கைதடி.

சி.பொன்னம்பலம் குடும்பத்தினர்
(ஓய்வுபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை பரிசோதகர்)
பொன்.சிவகரன் (ஆசிரியர்)
(கை/1045) (11.18)

---

## முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம்
20.02.1942

மறைவு
22.06.2015

அமரர் திருமதி
**பார்வதி சுப்பையா**

ஆண்டொன்று மறைந்து விட்டதம்மா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றென்றும்
மனதை விட்டு அகலாது

முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று(10.06.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.66.முகத்தான்குளம்,
செட்டிகுளம்.

குடும்பத்தினர்
077 088 96[illegible]

---

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
**செல்லையா சிவப்பிரகாசம்**

தோற்றம்
12.12.1943

மறைவு
03.06.2014

திதி: சஷ்டி

நிஜமாக நீங்கள் மறைந்து ஈராண்டுகள் ஆனதுவோ
நீங்கள் இல்லாமனை பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைந்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம் காலங்கள் ஓடிக்கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் உள்ளத்தில் என்றென்றும்...

சியாமளா மில் ஒழுங்கை,
மீசாலை வடக்கு,மீசாலை.
(சி/52) (11.18)

குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நினைவழியா நினைவலைகள்...





திதி:
10.06.2016

அமரர் சின்னத்துரை கனகசபை
(ஓய்வுநிலை இராணுவ அதிகாரி)

அமரர் விசாலாட்சி சிதம்பரப்பிள்ளை

ஆண்டுகள் பதினாறு ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள் இத்தனை ஆண்டுகள் கழிந்தும் ஓவியமாய் எம் நெஞ்சில் உங்கள் முகம்....

"ஈஸ்வரி இல்லம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(கை/2018) (11.18)

க.பரமேஸ்வரி (மனைவி), சு.பரமேஸ்வரன் (பேரன்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## 25வது அகவையில் 8ஆம் மாத நினைவலைகள்



**மகேந்திரன் அமிழ்தன்**

அன்னை மடியில் 10.06.1991
இறைவனின் கரங்களில் 16.10.2015

எம் உயிரில் கலந்த உறவே
எம் பாசத்தின் இருப்பிடமே
எம் ஆருயிர் தம்பி
உன் எதிர்கால கனவுகளின் சுமையோடு
நீ எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்றது ஏன்?
நீ மறைந்து மாதங்கள் எட்டு ஆனாலும்
எல்லாமே கனவுபோல் இருக்குதடா?
விழிகளில் கண்ணீர் காயவில்லை
உன் 25வது ஜனன தினத்தில்
உன் நினைவுகளுடன் பயணிக்கின்றோம்

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுவேளை தேவையற்று வீதியில் கூடினால் கைது

## நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அறிவுறுத்து

கரணவாய், ஜூன் 10
இரவு 9 மணிக்குப் பின்னர் தேவையற்று வீதிகள் மற்றும் சந்திகளில் ஒன்றுகூடுவோர் மற்றும் இரவு நேரங்களில் நடமாடுவோர் உடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர் என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பியந்த அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய், துன்னாலை மற்றும் கரவெட்டி போன்ற பகுதிகளில், இரவுவேளைகளில் ஆடு, மாடு மற்றும் கோழிகள் திருடப்படுவதுடன், திருடப்படும் கால்நடைகள் இந்தப் பகுதிகளூடாக வேறு இடங்களுக்குக் கடத்தப்படுகின்றன என அந்தப் பகுதி மக்களால் பல முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இரவு வேளைகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள் குழுச் சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் மக்களால் முறையிடப்படுகின்றது.

> இரவு 9 மணிமுதல் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். பிரதான வீதிகள் மட்டுமன்றி கிராமங்களுக்கும் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அண்மையில் கரணவாய்ப் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்தச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய சந்தேகநபர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது பொலிஸ் பிரிவில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார், இரவு 9 மணி முதல் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். பிரதான வீதிகள் மட்டுமன்றிக் கிராமங்களிலும் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளின்போது 9 மணிக்குப் பின்னர் அநாவசியமான முறையில் சந்தேகத்துக்கிடமாக நடமாடுவோர் மற்றும் குழுக்களாக ஒன்றுகூடி நிற்போர் உடன் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படுவர். மறுநாள் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை வல்வெட்டித்துறைப் பொலிஸாரும், விசேட வாகனத்தின் மூலம் விசேட சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-108)

## ஓய்வூதிய நிதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் ஏழாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் தலைவர் வி.சக்திவேல் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட முகாமைத்துவத் திறன் அபிவிருத்திக் கூட்டத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக தி.சுதந்திரபாலனும், உப தலைவராக பொ.கமலநாதனும், செயலாளராக க.கதிரமலையும், உப செயலாளராக எஸ்.எஸ்.மன்மதராசாவும், பொருளாளராக செ.சிவலோகநாதனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக சு.விஜயநாதன், த. சிவரஞ்சன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-ஜ-7)

# சந்தைக்குள் பெண்ணிடம் பணம் திருட முயன்ற பெண்

## கடைச் சிப்பந்தி கண்டதால் தலைதெறிக்கத் தப்பி ஓட்டம்

சாவகச்சேரி, ஜூன் 10
பொருள்கள் வாங்கச் சந்தைக்குச்சென்றபெண்ணிடம் மற்றொரு பெண் பணத்தைத் திருட முற்பட்டுள்ளார். எனினும் கடைச் சிப்பந்தி கண்டு சத்தமிட்டதால் அங்கிருந்து தலைதெறிக்கத் தப்பியோடி வெளியே தயாராக நின்ற ஓட்டோவில் ஏறிச் சென்றுவிட்டார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

சந்தையில் பொருள்கள் வாங்குவதற்காக வீட்டிலிருந்து புறப்பட்ட பெண், முதலில் வங்கிக்குச் சென்று பணம் எடுத்துக் கொண்டு சந்தைக்குள் சென்றுள்ளார்.

அங்குள்ள கடை ஒன்றில் பொருள்களைப் பார்த்துக் கொண்டுநின்ற அவரின் கைப்பையில் இருந்து பணத்தை எடுக்க முயற்சித்துள்ளார் மற்றொரு பெண். வங்கியிலிருந்தே இந்தப் பெண் பின் தொடர்ந்து வந்தார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அதனை அங்குள்ள கடைச் சிப்பந்தி கண்டு சத்தமிட்டுள்ளார். அதனால் அந்த இளம்பெண் கைப்பையிலிருந்து எடுத்த பணத்தையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளார். அங்கு நின்றவர்கள் திருட முற்பட்ட பெண்ணைத் துரத்தியபோது அவர் சந்தைக்கு வெளியே நின்ற ஓட்டோவில் ஏறித் தப்பிச் சென்று விட்டார்..

அதேவேளை, இதே இளம் பெண் கடந்த மாதம் சந்தைக்குள் உள்ள கடையொன்றில் பொருள்கள் வாங்குவது போல நடித்து, வெளியில் வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் ரூபா பெறுமதியான முறுக்குப் பிழியும் 2 உரல்களைத் திருடிச் சென்றவர் எனவும் அங்கு நின்றிருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தலைக்கவசம் அணிந்த நிலையில் வந்த இரு பெண்கள் கடையில் பொருள்கள் வாங்குவது போல நடித்து, கடையில் பணியில் நின்ற பெண் உள்ளே சென்ற போது கடையில் வெளியே வைக்கப்பட்டிருந்த இரண்டு முறுக்கு உரல்களையும் எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றிருந்தனர் என்றும், அவர்களில் ஒருவரே நேற்றுத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர் எனவும் அங்கு நின்றவர்களால் தெரிவிக்கப்பட்டது. ற-ஜ-4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலாலி பாதுகாப்புத் தலைமையகத்தின் விசேட அனுமதியுடன், கோப்பாய் நாவலர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள், பலாலி விமான நிலையத்துக்கு அண்மையில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர். பாடசாலை அதிபர் கே.தர்மசீலனின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க விசேட அனுமதியை வழங்கியிருந்தார். இந்தச் சுற்றுலாவில் 50க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ந-ஜ-5-107)

## தென்மராட்சி பிரதேச கிளையில் அதிக அங்கத்தவர்

சாவகச்சேரி, ஜூன் 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவு அங்கத்தவர்களைக் கொண்ட கிளையாகத் தென்மராட்சிப் பிரதேச பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியக் கிளை தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியப் பொதுச் சபைக் கூட்டத்தில் தென்மராட்சிக் கிளைக்கான விருது வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தை வடமராட்சி பருத்தித்துறைக் கிளையும், மூன்றாவது இடத்தை வலிகாமம் மேற்கு சங்கானைக் கிளையும் பெற்றுக் கொண்டன. (ந-ஜ-9)

## சாரதிப் பத்திரம் இல்லாதவருக்கு ரூபா 50,000 தண்டம் மணலும் பறிமுதல்

சாவகச்சேரி ஜூன் 10

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய இருவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை 51 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சாரதி அனுமதிப் பத்திரம், வாகனவரி காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனத்தில் மணல் எற்றி வந்த சாரதிக்கு 31 ஆயிரத்து 500 ரூபாவும், மற்றைய சாரதிக்கு 20 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

இரு வாகனங்களில் இருந்தும் கைப்பற்றப்பட்ட மணலையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேவேளை–சாரதி அனுமதிப் பத்திரமில்லாத ஒருவருக்கு வாகனத்தை வழங்கியமைக்காக வாகன உரிமையாளர் நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டார். அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ந-ஜ-9)

# வடக்கு - கிழக்கு இணைப்பு தமிழ் மக்களின் வேணவா

## பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸிடம் சிவில் அமைப்புக்கள் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட – கிழக்கை இணைக்கும்படி கோருவது மக்களின் வேணவா அடிப்படையிலா? – என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் சிவில் அமைப்புகளிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள சிவில் அமைப்புக்கள் தமிழ் மக்களின் விருப்பப்படியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு – கிழக்கு இணைப்பை வலியுறுத்துகின்றது என்று விளக்கமளித்துள்ளன.

திருகோணமலைக்கு நேற்று முன்தினம் பயணித்த பிரிட்டன் தூதுவர்அங்குள்ளசிவில் அமைப்புக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்கு பிரிட்டன் தூதுவர் தெரிவித்ததாவது–

தற்போதைய அரசு நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றது. ஆனால் நல்லிணக்கமென்பது முக்கியமானது. இதனைக் கவனத்தில் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். அவதானித்து வருகின்றோம்.

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் சென்று மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கற்றறிந்தோருடன் கலந்துரையாடி நல்லிணக்க முன்னெடுப்புக்கள் பற்றி அவதானித்து வருகின்றோம்.

ஐ.நா. சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட இணை உடன்படிக்கையின் அடிப்படையில் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை பிரிட்டன் அரசு அவதானிப்பதுடன் கவனம் செலுத்தியும் வருகின்றது.

வடக்கு, கிழக்கிலுள்ள அதிலும் போருக்குப் பிந்திய நிலமைகளை நாம் நன்கு அறிந்து கொண்டுள்ளோம். மக்களின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி மக்கள் பிரதி நிதிகளின் வாயிலாக அறியக் கூடியதாகவும் உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடகிழக்கு இணைய வேண்டும் என்று கோருகின்றது. போர்க்காலச் சூழ்நிலைக்குப் பின் வடக்கு – கிழக்கில் மீள்கட்டுமானம், மீள்குடியேற்றம் தொடர்பில் அரசு எந்தவித முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது என்பதை அறியும் நோக்குடனேயே எமது இந்தப் பயணம் அமைந்துள்ளது.

எமது பயணத்தில் கிளிநொச்சி, திருகோணமலை குறிப்பாக சம்பூர் நிலைமைகளைத் தீர்க்கமாக அதானித்து வந்துள்ளோம். வட அயர்லாந்து, கம்போடியா, பெரு ஆகிய மூன்று நாடுகளிலும் ஏற்பட்ட நல்லிணக்கம், அமைதி ஆகியவற்றை உதாரணங்களாகக் கொண்டு இலங்கையிலும் நல்லிணக்கத்தையும் அமைதியையும் உண்டாக்க ஆதரவு கொடுப்பதுடன் அழுத்தம் தரவும் நாம் முயன்று வருகின்றோம் – என்றார்.

சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், திருமலையில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றம் குறித்து எடுத்துக் கூறினர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு – கிழக்கு இணைப்புக்குத் தமிழ் மக்களின் வேணவா அடிப்படையில் தான் வலியுறுத்துகின்றது என்பதையும் தெரிவித்துள்ளனர். (ந-ஜ-5)

## ஆரம்ப நிகழ்வு

வலி.வடக்கு, ஜூன் 10

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக ஆரம்ப நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகப் பொருளாளர் லயன் செ.மகாதேவாவின் கந்தரோடை இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா.தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக லயன் தேவா பீற்றர், லயன் சீமாட்டி ஜசிந்தா தம்பதியினரும், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் லயன்பி.மகேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விருந்தினர்கள் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக கூட்ட மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு புதிய நிர்வாகத் தொடக்க நிகழ்வுகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஜ-25)

## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் அடுத்த மாதம் 3ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. (ஜ-ரி4)

★ ★ ★

சாவகச்சேரி, ஜூன் 10

சாவகச்சேரிபெருங்குளம்அம்பலவாணவீரகத்திப்பிள்ளையார்ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ந-ஜ-9)

## தாய்லாந்து சுற்றுலாவுக்குச் சென்றவர் சாவு

மன்னார், ஜூன் 10

தனியார் நிறுவனத்தின் வருடாந்த சுற்றுலாவுக்காக வெளிநாடு சென்ற வியாபார முகாமையாளரான குடும்பத் தலைவர் ஒருவர் விபத்தில் உயிரிழந்தார் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

மன்னாரில் பிறந்து திருகோணமலையில் வசித்தவரான அ. நிர்மலராஜன் (வயது-37) எனும் வியாபார முகாமையாளரே உயிரிழந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான நிர்மலராஜன் கடந்த சனிக்கிழமை தாய்லாந்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

இவரது சடலத்தை இலங்கைக்கு எடுத்து வருவதற்கு குறித்த நிறுவனம் ஏற்பாடுகளை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது. (ந-ஜ-21)

# இளைஞர் சேவை கூ. சங்கம் மீண்டும் முல்லையில்

## 30 ஆண்டுகளின் பின்னர் இயங்குகின்றது

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவில் கடந்த 30 வருடங்களாக இயங்காதிருந்த இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் மன்றப் பணிப்பாளர் திருமதி சறோசா குகனேசதாஸன் இதைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழிற் பயிற்சி பெற்றுத் தொழிலை எதிர்பார்த்துள்ள இளைஞர்களுக்காக, இளைஞர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தேசிய இளைஞர் மன்றத்தால் உருவாக்க உள்ளோம்.

தேசிய மட்டத்தில் இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கம் என்றஒன்றை உருவாக்கி, அதனை மாவட்ட மட்டத்தில் வரையறுக்கப்பட்ட முல்லை. மாவட்ட இளைஞர் கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரில் இயங்க உள்ளோம்.

அதற்காகக் கிராம மட்டங்களிலிருந்து அங்கத்துவம் பெறப்படும் அந்தக் கிராமங்களிலிருந்து பிரதேச மட்டத்தில் இயக்குநர் சபை உருவாக்கப்பட உள்ளது.

இவ்வாறு மாவட்டத்தில் உள்ள 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தலைவர், செயலாளர் உட்பட 9 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

பிரதேச செயலகப் பிரிவு ரீதியான தெரிவின் மூலம் 7 இளைஞர்களும், 4 உத்தியோகத்தர்களுமாக 11 பேர் தெரிவு செய்யப்படுவர்.

இந்த உத்தியோகத்தர்களைக் கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவு செய்வார். இதற்கு மாவட்ட உதவிப் பணிப்பாளர் தலைவராகச் செயற்படுவார்.

இளைஞர் சேவை உத்தியோகத்தர் எடுக்கின்ற தீர்மானங்கள் அனைத்தையும், நடைமுறைப் படுத்தி, இளைஞர் கூட்டுறவுச் சங்கம் இளைஞர்களுடைய சகல அபிவிருத்திகளையும் மேற்கொள்ளும்.

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு இயங்கிய இளைஞர் கூட்டுறவுச் சங்கம் தற்போது மீண்டும் இயங்க வைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் இளைஞர்களுக்குக் கடன்களை வழங்க உள்ளோம்.

தற்போது ஏ-9 வீதியில் எமது காணியில் உற்பத்தி நிலையம் ஒன்றை உருவாக்க உள்ளோம். அதில் யுவதிகளுக்கான தையலுக்கு ஒரு பகுதியும், உற்பத்திகளுக்கு இன்னொரு பகுதியும் அமைக்கவுள்ளோம். அதே இடத்தில் விற்பனை செய்யக் கூடியதாகவும் நடைமுறைப் படுத்த உள்ளோம்.

இப்படியான செயற்பாடுகளுக்கு அனைத்து ஆர்வலர்களினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்– என்றார். (ந-ஜ-21,500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலி.தென்மேற்கு வீதிகள் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
மக்களின் நீண்ட காலக் கோரிக்கையைத் தொடர்ந்து வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் சேதமடைந்த நிலையில் உள்ள பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதன் முதற் கட்டமாக சுமார் 130 லட்சம் ரூபா செலவில் இரு வீதிகள் புனரமைக்கப் படவுள்ளன.

"நெல்சிப்" திட்டத்தின் கீழ் 8.5 மில்லியன் ரூபா செலவில் 1.4 கி.மீ நீளமான நுணசை வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதேபோல் மாகாணத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 4.8 மில்லியன் ரூபா செலவில் 680 மீற்றர் நீளமான பிரான்பற்று ஆலய வீதியின் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அதேவேளை, மானிப்பாய் பட்டினத்தில் கனகசபை வீதியிலிருந்து செல்லமுத்து விளையாட்டு மைதானத்துக்குப் பக்கமாகச் செல்லும் லோட்டன் வீதியை இணைக்கும் ஒரு கி.மீ நீளமான வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேல் புனரமைக்கப் படாதுள்ளது என்றும், இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-115)

### மது ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள்

குருநகர், ஜூன் 10
மது ஒழிப்பு மற்றும் புகைத்தலுக்கு எதிர்ப்புத் தினமான கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருநகர் கலாசார மண்டபத்தில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியால் நடத்தப்பட்டது.

குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குருநகர் ஜே/69 கிராம சேவையாளர் எஸ்.யூலன், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரிகள் எஸ்.யசிதரன், எஸ்.உமாசுதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

அதில் குருநகர் ஜே/69 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த இளைஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (ற-ஜ-51)

## சட்டைக்குள் மட்டத்தேள் எனக்கூறி முதியவரிடம் ரூ. 10,000 கொள்ளை

### திருநெல்வேலிப் பகுதியில் நூதனக் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 10
திருநெல்வேலிப் பகுதியில் முதியவர் ஒருவரிடம் தந்திரமாகப் பணம் திருடப்பட்டுள்ளது. முதியவர் தனது ஓய்வூதியப் பணத்தை இழந்ததுடன், அடுத்த மாத ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதிலும் சிக்கலை எதிர் கொண்டுள்ளார். இது குறித்து அவர் கிராம சேவகரிடம் முறையிட்டுள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் வசிக்கும் முதியவர் தினமும் அருகில் உள்ள சனசமூக நிலையத்துக்குச் சென்று பத்திரிகை வாசிப்பதை வழக்கமாகக் கொண்டவர். கடந்த திங்கட்கிழமையும் வழமைபோன்று அங்கு சென்றுள்ளார். அந்தசமயம் அங்கு வேறு எவரும் இருக்கவில்லை.

அப்போது மோட்டார் சைக்கிளில் இளைஞன் ஒருவன் வந்துள்ளான். அவனும் பத்திரிகை வாசிப்பது போன்று முதியவருக்கு அருகில் நின்றுள்ளான். திடீரென ஐயா உங்கள் சட்டையில் மட்டைத்தேள் ஊருகின்றது. உங்கள் சட்டைப் பைக்குள் சென்றுவிட்டது என்று பதற்றத்துடன் கூறியுள்ளான்.

பதற்றமடைந்த முதியவர் தனது சட்டைப் பையில் இருந்த பணப்பையை மேசையில் வைத்து விட்டு மட்டத்தேளைத் தேடியுள்ளார். அந்தச் சமயம் பார்த்து அந்த இளைஞன் முதியவரின் பணப்பையை எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடிவிட்டான்.


அந்தப் பணப்பையில் முதியவரின் ஓய்வூதியப் பணமான 10 ஆயிரம் ரூபாவும், முதியவரின் தேசிய அடையாள அட்டையும் இருந்துள்ளன.

முதியவரின் அடையாள அட்டை தொலைந்துள்ளதால் ஓய்வூதியப் பணத்தைப் பெறுவதில் அவர் சிக்கலை எதிர்நோக்கியுள்ளார். இது தொடர்பில் அவர் தனது பகுதி கிராம சேவகரிடம் முறையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-101)

## நிலாவரைக் கிணற்றை சுத்தப்படுத்த நடவடிக்கை

### யாழ். மாவட்ட செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 10
நிலாவரைக் கிணற்றில் காணப்படும் நீரை மாசுபடுத்தும் அனைத்துப் பொருள்களும் அகற்றப்படும். அத்துடன் கிணற்றுக்குள் எவரும் விழாத வண்ணம் பாதுகாப்புத் தடை ஏற்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. - இவ்வாறு யாழ்.மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் நிலாவரைப் பகுதியில் அமைந்துள்ளது 152 அடி ஆழம் கொண்ட நிலாவரைக் கிணறு. அந்தக் கிணறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பில் புதைபொருள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது- என்றும் மாவட்ட செயலர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த கிணற்றின் ஆழத்தைக் கருத்தில் கொண்டு கடந்த காலங்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அண்மையில் முதியவர் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்தார். அதையடுத்து கடற்படையினரின் உதவியுடன் குறித்த சடலம் மீட்கப்பட்டது. அதையடுத்து கிணற்றை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு உத்துழைப்புத் தருமாறு கடற்படைத் தளபதிக்கு வேண்டுகோள் விடுத்தோம்.

அதை ஏற்ற கடற்படைத் தளபதி வடமாகாணக் கட்டளைத் தளபதியை எமது இடத்துக்கு அனுப்பி அதற்குரிய விவரங்களைப் பெற்றிருந்தார். இதன் பிரகாரம் கடந்த இரு நாள்களாக முதல் கட்டப் பணியாகக் குறித்த கிணற்றின் அடியில் உள்ள பொருள்கள் இனங்காணப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாகக் கிணற்றுக்குள் இருக்கும் கழிவுப் பொருள்கள் அகற்றப்படுவதுடன் துப்புரவுப் பணி இடம் பெறவுள்ளது. அத்துடன் குறித்த கிணற்றின் நீர் குடிதண்ணீருக்கு உகந்ததா எனவும் சோதனைகள் இடம் பெறும். அதன் ஆய்வின் பெறுபேற்றின் அடிப்படையில் அடுத்த கட்டப் பணிகள் இடம் பெறும். இவற்றைக் கடற்படையினரே மேற் கொள்ளுகின்றனர்.

இந்தக் பணிகள் விரைவில் முடிவுறுத்தப்படும். அதன் அடுத்த கட்டமாக முழுமையாகப் பாதுகாப்புக் கம்பித் தடை அமைப்பதுடன் கழிவுப் பொருள்களும் உட்செல்லாத வாறு தடுக்கப்படும். இது குறித்து வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-101)

### அபராதம் செலுத்த தவறிய பெண்ணுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி ஜூன் 10
அபராதத் தொகையைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தத் தவறிய பெண் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த பெண்ணொருவர் கசிப்பு வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஒரு லட்சம் ரூபா அபராதம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பணம் செலுத்த வசதியில்லை எனத் தெரிவிக்கப்பட்டதால், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு, அபராதத் தொகை செலுத்தக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

குறித்த கால அவகாசத்தில் அவர் அபராதத் தொகை செலுத்தத் தவறியிருந்தார். இந்த வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, குறித்த பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-ஜ-9)

### தூண் விழுந்து ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
நண்பர்கள் 5 பேர் ஒன்றாகச் சேர்ந்து தூக்கிய சிமெந்து தூணை ஒருவர் திடீரென கைவிட, தொடர்ந்து மற்றைய வர்களும் கைவிட்டதால் கடைசியாகத் தாக்குப் பிடித்து நின்றவரின் காலின் மேல் அது விழுந்து நசித்தது.

காலில் படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டையில் கந்தசுவெவாய்க்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் 19 வயதுடைய ஒருவரே படுகாயமடைந்துள்ளார். (ற-ஜ-4,107)

### ஓட்டோ குடை சாய்ந்து தாயும் மகனும் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த தாயும், மகனும் காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து முழங்காவில் ஏற்றம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவரும் முதலில் முழங்காவில் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற-ஜ-107)

## சின்னடம்பன் கிராமத்துக்கு மின் இணைப்பு

வவுனியா, ஜூன் 10
வவுனியா நெடுங்கேணிக்கு அண்மையில் உள்ள சின்னடம்பன் கிராமத்துக்கு நேற்று முன்தினம் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சின்னடம்பன் கிராமம் உள்ளது. விவசாயத்தை நம்பி 1980 ஆம் ஆண்டு 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்தோம். ஆயினும் போர் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமை போன்ற காரணங்களால் கிராமத்தில் இருந்து பலர் வெளியேறியுள்ளனர்.

தற்போது பூர்வீகக் குடிகளாக 40 குடும்பங்களும், அண்மையில் குடியேறிய 20 குடும்பங்களும் வாழ்கின்றோம். எமது பிரதேசங்களுக்கு அண்மையாக யானைகளின் நடமாட்டமும் காணப்பட்டது. மின்சாரம் எமக்கு இதுவரை காலமும் வழங்கப்படாததால் இருட்டின் மத்தியில் பெரும் சிரமத்துடனேயே வாழ்ந்தோம்.

தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இங்கிருந்து வெளியேறியவர்களும் மீளத் திரும்புவார்கள்- என்று கிராம மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

அதேவேளை, தற்போது பூந்தோட்டம் இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் சுமார் 150 குடும்பங்களை இந்தக் கிராமத்தில் மீள் குடியமர்வு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்கும் திட்டம் எதுவுமில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

சலாவ இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பாகிஸ்தானுக்கு விற்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தன என்று வெளியான செய்திகளை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன நிராகரித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், சலாவ முகாமில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள், பாகிஸ்தானுக்கு விற்கத் திட்டமிடப்பட்டிருந்ததா? என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"அரசிடம் அத்தகைய திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. அவ்வாறு எதையாவது செய்வதானால், அதற்கு அமைச்சரவையின்அனுமதிபெறப்படவேண்டும். அமைச்சரவைக்குத் தெரியாமல், இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதானால், அது முன்னைய அரசின் காலத்தில் மட்டும்தான் சாத்தியமாகும்''- என்றார் அமைச்சர்.



இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்ததாவது-

சலாவ சம்பவத்தால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை. இது இராணுவத்தின் பலத்தையோ, நாட்டின் இராணுவ வலிமையையோ பாதிக்காது.

சலாவ இராணுவ முகாம் சன அடர்த்தி குறைந்த பகுதிக்கு மாற்றப்படும். இரண்டு ஆண்டுகளுக்குமுன் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இராணுவ முகாம்களில் வெடிவிபத்து ஏற்படுவது ஏனைய நாடுகளிலும்கூட வழக்கமானது. இராணுவ முகாம்கள் மிகக் கவனமாகப் பராமரிக்கப்படுகின்றன. எனினும் சிறிய தவறு இது போன்ற பெரிய வெடிப்புகளுக்குக் காரணமாகி விடுகிறது- என்றார்.

(ற-ஐ-5)

# தற்கொலை அதிகம் நடப்பதில் இலங்கைக்கு 4 ஆவது இடம்

கொழும்பு, ஜூன் 10

அதிகம் தற்கொலை இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது என்று உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையை மேற்கோள் காட்டி சுகாதார அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

உலக நாடுகளில் காணப்படும் மக்கள் தொகைக்கு ஏற்ப அந்த நாடுகளில் இடம்பெறும் தற்கொலை வீதம் ஒரு லட்சம் பேருக்கு 11 வீதமானவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கையில் அது ஒரு லட்சம் பேருக்கு 28.8 வீதமானோர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு 50 பேர் மதுபானம் மற்றும் போதைப் பொருள்கள் பாவனையுடன் தொடர்புடையவர்கள். இதுவே அவர்களைத் தற்கொலைக்குத் தூண்டும் காரணியாகக் காணப்படுகின்றது என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நாட்டிலுள்ள மக்களில் 10 பேரில் ஒருவர் ஏதோ ஒருவகை யில் மன நோயால் பாதிக்கப்பட்டவர் எனவும், இவர்களில் சிகிச்சை பெற்றுக் கொள்பவர்கள் நூற்றுக்கு 20 வீதமானவர்களே எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(ற-ஐ-5)



புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான மக்கள் கருத்தறியும் குழு, தனது இறுதி அறிக்கையை நேற்றுமுன்தினம் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தது. இந்த நிகழ்வு கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்றது.
(ற-5)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 10

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் கலா நிதி தங்கமுத்து ஜயசிங்கம் தெரி வித்தார்.

தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டதையடுத்து, ஏட்டிக்குப் போட்டியான இரண்டு கவனவீர்ப்புப் போராட்டங்கள் கடந்த மாதம் 26ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்றன.

தமிழ் மாணவர்களால் வந்தாறுமூலை வளாகத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு தொடர்பான படங்களை, தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்திருந்த தமிழ் மாணவன் மீது, சிலர் தாக்குதல் நடத்தினர்என்றுபொலிஸ்நிலையத்தில் முறையிடப்பட்டது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மீது, நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி தமிழ் மாணவர்கள் வளாகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இரு சிங்கள மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தால் கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் விரிவுரைகளில் பங்கெடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடையை நீக்கக் கோரி, அன்று வளாகத்தின் பிரதான வாயிலை மூடிச் சிங்கள மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டம் காரணமாக சுமார் 3 மணித்தியாலங்கள் விரிவுரையாளர்கள்உட்படவரும்வளாகத்துக்குள்ளிருந்து வெளியேற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இதன் பின்னர் இடைநிறுத்தப்பட்ட கல்வி நடவடிக்கைகள், நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

தாக்குதலை மேற்கொண்டனர் என்று சந்தேகிக்கப்படும் இரு சிங்கள மாணவர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணை தொடர்கிறது. மாணவர்களின் பதில் அறிக்கையும் கோரப்பட்டுள்ளது. விசாரணைகள் முடியும் வரை அந்த மாணவர்களுக்கான வகுப்புத் தடை நீடிக்கப்பட்டுள்ளது- என்றார் உபவேந்தர்.

(ற-ஐ-5)

# தம்மிக்க திஸநாயக்கவின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க திஸநாயக்கவுக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியினர் சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேற்றுமுன்தினம் கையளித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் மே மாதம் 5 ஆம்திகதிஇடம்பெற்ற11அமைச்சுக்களுக்கான 55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு தொடர்பான நிதி அமைச்சின் பிரேரணை மீதான வாக்கெடுப்பில்இடம்பெற்றமோசடி தொடர்பிலேயே நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது என்று மகிந்த அணியினர் தெரிவித்தனர்.

வாக் கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 33 வாக்குகளும், எதிராக 31 வாக்குகளும் அளிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. அதன் பின்னணியில் சர்ச்சை எழுந்திருந்தது. இது குறித்து விசாரணை செய்ய எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நால்வர் அடங்கிய குழுவை நியமித்தார் சபாநாயகர் கரு ஜயசூரிய.

இந்தக் குழு ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கையில், பிரேரணைக்கு ஆதரவாக 31 வாக்குகளும், பிரேரணைக்கு எதிராக 31 வாக்குகளும் அளிக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு எதிராக மகிந்த ஆதரவு அணி நம்பிக்கையில் லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளது.

(ற-ஐ-5)

# சர்வதேச சமுத்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் தலைமையில் நடைபவனி

கொழும்பு, ஜூன் 10

சர்வதேச சமுத்திர தினத்தை முன்னிட்டு, சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட நடைபவனி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சமுத்திர சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்குடன் "தூய்மையான சமுத்திரம் ஆரோக்கியமான உலகம்'' என்ற கருப்பொருளின் கீழ் சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகாரசபையும், மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல்துறை அமைச்சும் இணைந்து இந்த நடைபவனியை ஒழுங்கு செய்திருந்தன.

ஜனாதிபதியின் தலைமையில் விகாரமகாதேவி திறந்த கலையரங்கின் அருகாமையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி கொழும்பு காலி முகத்திடல் வரை இடம்பெற்றது.

சமுத்திரசூழலின்முக்கியத்துவம் தொடர்பாக உலக மக்களுக்கு அறிவூட்டும் நோக்குடன், ஐக்கிய நாடுகள் சபையால் 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி உலக சமுத்திர தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச்சமுத்திரதினம் இலங்கையிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அந்தத் தினத்தை முன்னிட்டு கரையோரப் பகுதிகளைச் சுத்தம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் வருடாந்தம் வெளியிடப்படும் "த் சமுதுர" சஞ்சிகையின் முதற்பிரதியும் இதன் போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மகாவலி அபிவிருத்தி சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர் செனவிரத்ன, சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரோஹன பெரேரா அகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குச் சேவை செய்ய சொகுசு மாளிகை ஏற்றதல்ல

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 10

சாதாரண பொதுமக்களைப் பிரிந்து சொகுசு மாளிகையில் வாழ்ந்து கொண்டு, மக்களுக்கு உண்மையான சேவையைச் செய்ய முடியாது.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரி பால சிறி சேன தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் கோல்டன் பூங்கா ஆகியன பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்கு நேற்று முன்தினம் திறந்து விடப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வில் பாடசாலை மாணவன் ஒருவன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விழாவில் நாட்டின் அனைத்து மாகாணங்களையும்



பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் கண்டி மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகளையும் பார்வையிடும் வாய்ப்பைப் பாடசாலை மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெற்றுத் தருவேன் - என்று கூறினார். "உங்கள் வதிவிடமாக ஜனாதிபதி மாளிகையை ஏன் தெரிவு செய்ய வில்லை?" என்று மாணவன் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

"வரலாற்று ரீதியிலான முக்கியத்துவம் மிகுந்த கோட்டையான ஜனாதிபதி மாளிகை இந்த நாட்டு மக்களின் சொத்து. ஆகையால் அதனைப் பார்வையிடும் வாய்ப்பைப் பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்" என்றும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். (ற-ஜ-5)

# கோத்தாவைக் கட்சிப் பதவிக்கு கொண்டுவரும் எண்ணமில்லை

## சீறுகின்றார் சந்திரிகா



கொழும்பு, ஜுன் 10

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கட்சியின் இரண்டாவது பதவிக்குக் கொண்டு வருவது குறித்து அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ள கருத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு அல்ல. நான் கட்சியின் தலைவராக இருந்திருந்தால் ஜோன் செனவிரத்னவிடம் விளக்கம் கோரியிருப்பேன்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சுதந்திரக் கட்சியில் அவ்வாறான பதவியை வழங்க எந்த விதமான தீர்மானமோ, பேச்சோ இடம் பெறவில்லை என்று ஜனாதிபதி என்னிடம் குறிப்பிட்டார். நான் கட்சியின் தலைவராக இருந்திருந்தால் அமைச்சர் ஜோன் செனவிரத்னவிடம் விளக்கம் கோரி நடவடிக்கை எடுத்திருப்பேன்" - என்று அவர் கூறியுள்ளார். (ற-ஜ-5)

# ஒலிவாங்கி செயலிழந்தது சதிச் செயலல்ல

கொழும்பு, ஜுன் 10

நாடாளுமன்றத்தில் ஒலிவாங்கிகள் அனைத்தும் செயலிழந்தமை சதிச் செயல் அல்ல என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஒலிவாங்கிகள் செயலிழந்தமை தொடர்பில் கூட்டு எதிரணியினர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களால் கவலையடைகின்றோம். தொழிநுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்ட இந்தச் சம்பவத்தை அரசியலாக்கியுள்ளனர்.

நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் இருந்த இந்த ஒலிவாங்கிகளைத் திருத்தும் பணிகளுக்காக அரசு 125 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. அதற்கனை கேள்விப் பத்திரம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது - என்று அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-5)

# தமிழக மீனவர்கள் கடத்தப்படவில்லை

## முதலமைச்சர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை மறுக்கிறது கடற்படை

கொழும்பு, ஜுன் 10

தமிழக மீனவர்கள் கடத்திச் செல்லப்படுகின்றனர் என்று முதலமைச்சர் ஜெயலலிதா முன்வைத்துள்ள குற்றச் சாட்டைக் கடற்படையினர் முற் றாக மறுத்துள்ளனர்.

கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்கின்றன. ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி தமிழக மீனவர்கள் நால்வர் கடற்படையால் கைது செய்யப்பட்டமை தொடர்பிலேயே ஜெயலலிதா இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

கடந்த மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் இதுவரை தமிழக மீனவர்கள் 15 பேர் இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், 91 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் பல தடவைகளாகப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதும், கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கைகள் தொடர்கின்றன என்று ஜெயலலிதா தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு இராஜ தந்திர ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஜெயலலிதா முன்வைத்துள்ளார்.

"இலங்கை எல்லைக்குள் வரும் எந்தவொரு வெளிநாட்டு மீனவர்களையும் கைது செய்வதற்கான அதிகாரம் கடற்படைக்கு உள்ளது. சர்வதேசக் கடல் எல்லைச் சட்டத்துக்கு உட்பட்டே தமிழக மீனவர்களும் கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் கடத்தப்படவில்லை" - என்றார் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி. (ற-ஜ-5)

# சலாவ இராணுவ முகாம் வெடி விபத்து நான்கு தரப்புக்களால் விசாரணைகள்

கொஸ்கம சலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்துத் தொடர்பாக நான்கு தரப்புகளால் சமாந்தரமான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

விசாரணைகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்காக, நான்கு தரப்புகளால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முப்படைகளின் மூத்த அதிகாரிகளைக் கொண்ட குழுவால் ஒரு விசாரணை முன்னெடுக்கப்படும். இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட, இராணுவ நீதிமன்றம் ஒன்றாலும் விசாரிக்கப்படும். அதைவிட குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையும் இடம்பெறுகிறது. நீதிமன்ற விசாரணையும் முன்னெடுக்கப்படும்.

தீயணைப்பு ஒத்திகை ஒன்றின் போது தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி வெளியிட்ட கருத்து, அவருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது.

உண்மையான காரணம் என்ன என்பது விசாரணைகளின் முடிவில்தான் தெரியவரும் - என்றார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு எதற்காக இந்த விசாரணையில் ஈடுபடுத்தப்படவில்லை என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரிகேடியர் ஜெயவீர, மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் இராணுவ நீதிமன்றத்துக்கு, இராணுவத்தின் எல்லா படைப்பிரிவுகளினதும் உதவியையும் கோரும் அதிகாரம் உள்ளது - என்றார். (ற-ஜ-5)

# சேதமடைந்த வீடுகளைக் கண்டுகொள்ளாத அரசியல்வாதிகள்

சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடி விபத்தால் சேதமடைந்த எமது வீடுகளைப் பார்க்க எந்தவொரு அரசியல்வாதியும் இதுவரையில் வரவில்லை. தற்காலிக வீடொன்றில் வசிப்பதற்கு ஒருதகரத்துண்டையாவது எவரும் எங்களுக்குத்தரவில்லை. என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

"நாம் பல வருடங்கள் சம்பாதித்து சேமித்து வைத்த சொத்துக்கள் அனைத்தும் அழிந்து போயின. பக்கத்தில் இருக்கும் இராணுவக் கிராமத்தைப் பற்றி மாத்திரமே இராணுவத்தினர் குறைகளைக் கண்டறிகின்றனர். அரச அதிகாரிகள் வாகனங்களில் வந்து ஊடகக் கண்காட்சியை நடத்தி விட்டுச் செல்கின்றனர். தற்காலிகமாக இருப்பதற்கு ஒரு வீட்டையேனும் யாரும் இதுவரை செய்து தரவில்லை" - என்று தெரிவித்துள்ளனர். (ற-ஜ-5)

# சாதாரண வாகனங்களில் அமைச்சர்களால் பயணிக்க இயலாதாம்!

மக்களுக்குப் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதற்காக வாகனங்களில் விலை குறைக்கப்படமாட்டாது. வாகனங்கள் விற்கப்படும் விலையின் அடிப்படையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. அதற்காகச் சாதாரண வாகனங்களை எம்மால் வாங்க முடியாது.

இவ்வாறு அமைச்சரவையின் இணைப் பேச்சாளர்களான அமைச்சர் ராஜித மற்றும் கயந்த கருணாதிலக ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர்கள், அமைச்சர்களின் வாகனக் கொள்வனவுக்கு 118 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே மேற்படி பதில் வழங்கப்பட்டது.

பிரதியமைச்சருக்கு [illegible] கோடி ரூபா, அமைச்சருக்கு [illegible] கோடி ரூபா என்று 118 கோடி ரூபா செலவில் வாகனங்களைக் கொள்வனவுசெய்ய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. நாட்டின் கடன் சுமை அதிகரித்துள்ளது. வீண் செலவுகளைக் குறைக்க வேண்டும் என்று நல்லாட்சியை ஏற்படுத்திய அரசு, வாகனமொன்றுக்குப் பல கோடி ரூபாவைச் செலவழிக்க வேண்டுமா? என ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர்கள் தெரிவித்ததாவது:

அமைச்சர்கள் என்ற வகையில் அவர்களின் நாளாந்த கடமைகள் அதிகமாகும். மேலும் ஒரு நாளைக்குப் பல இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது. மக்களுக்குப் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதற்காக வாகனங்களின் விலை குறைக்கப்படமாட்டாது. வாகனங்கள் விற்கப்படும் விலையின் அடிப்படையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. அதற்காகச் சாதாரண வாகனங்களை எம்மால் வாங்க முடியாது.

உதாரணமாக இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் உள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் சாதாரண வாகனங்களில் செல்வது கடினம். கொழும்பில் உள்ள ஒருவருக்கு இதைப்பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. குறித்த பகுதிகளுக்குச் சாதாரண வாகனங்களில் சென்று பாதையில் வாகனத்தை நிறுத்தி வைத்துவிட்டு நடந்துசெல்ல முடி யாது. அந்தப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமாயின் பொருத்தமான வாகனங்கள் கட்டாயம் தேவை.

அமைச்சர் என்ற வகையில் ஒரு நாளில் பிரயாணத்தில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றோம். இதனால் வாகனங்கள் கூடுதலாகப் பாவனைக்குள்ளாகின்றன. குறிப்பாக நான்கு வருடங்களுக்கு மேல் ஒரு வாகனத்தைப் பாவிக்க முடியாத நிலை உள்ளது. எமது பாதுகாப்பு மிக முக்கியமாகும்.

எமது நாட்டிலேயே இந்த விடயமெல்லாம் ஒரு பிரச்சினையாகப் பேசப்படுகின்றது. ஆனால் ஐரோப்பிய நாடுகளிலுள்ள அமைச்சர்களுக்கு இது ஒரு விடயமேயில்லை. மக்களும் பெரிதுபடுத்துவதில்லை - என்று கூறியுள்ளனர். (ற-ஜ-5)

> "மக்களுக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதற்காக வாகனங்களில் விலை குறைக்கப்படமாட்டாது. வாகனங்கள் விற்கப்படும் விலையின் அடிப்படையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றது. அதற்காக சாதாரண வாகனங்களை எம்மால் வாங்க முடியாது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெனிவாவில் இலங்கை அரசின் மாய்மாலங்கள் உயரும்...!

அசாதாரண சூழல் உண்டாகும்போது, மக்களைப் பாதுகாக்கும் பொருட்டே வடக்கில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அசாதாரண நிலைமையின்போது, இராணுவ முகாம்கள் அருகில் இருந்தால் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையும். அதனூடாக, பொதுமக்களது உயிர், உடைமை இழப்புகளைத் தவிர்க்க இயலும்.

மேற்கண்டவாறாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார், இராணுவத்தினரின் ஊடகப் பேச்சாளர், ஜயநாத் ஜயவீர.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்போந்த கருத்தை எடுத்துரைத்தார்.

அது ஒருபுறமிருக்க--

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் முப்பத்திரெண்டாவது கூட்டத் தொடர், இந்த மாதம் பதின்மூன்றாம் நாள் ஆரம்பமாக உள்ளது.

அங்கு, மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், வாய் மூல அறிக்கையைச் சமர்ப்பிக்க உள்ளார்.

அந்த நிகழ்வு, இலங்கை அரசின் மனித உரிமை மீறல் குறித்து, அக்கு வேறு ஆணி வேறாக, உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த இரட்டை வேடப்போக்கை, சபையில் போட்டுடைக்கும் என்று ராஜதந்திரிகள் பலர் எதிர்பார்க்கிறார்கள் என்று ஆரூடம் பரவி உள்ளது.

இலங்கை தொடர்பான விவாதம் 29 ஆம் திகதியன்று ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாகவே ஜெனிவாவில் மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெறும் காலப்பகுதி இலங்கையில் பரபரப்புமிக்க ஒன்றாக அமையும்.

உள்ளக விசாரணைப் பொறிமுறை, சொந்த இடங்களில் மீள்குடியேற்றம், தடுப்புக்காவல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம், வடக்கில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளுதல் என்பவை அக்கறைக்கு உரிய விடயங்களாக வாய் மூல அறிக்கையில் வெளிப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் உண்டு என அறியப்படுகிறது.

அதற்கு பூட்டுப் போடும் பாணியில்--

வடக்கில் இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு வாய்ப்பூட்டுப் போடும் வகையில், அமைச்சர் மங்கள சமரவீர விளாசித் தள்ளுவார் என்று 90 சதவீதம் தகவல்கள் பறந்து கொண்டிருக்கின்றன.

ஜெனிவாவில், இலங்கை அரசு சார்பில் வாய் மாய்மாலங்கள் உயர்ந்து எழும் என்று எதிர்பார்க்கலாம்.

"சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்ற நிலையே முகிழ்த்து எழுகிறது எனவும் கொள்ளலாம்.

# வெள்ளை வானில் கடத்தப்பட்டவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவில்

மூலம்: கிரவுண்ட் வியுஸ்
தமிழில் : ரஜீபன்

யாழ்ப்பாணம் நுணாவிலைச் சேர்ந்த இராசதுரை ஜெயந்தன் கடந்த மாதம் வெள்ளை வானில் கடத்தப்பட்டார். சில நாள்கள் தேடலுக்குப் பின்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தடுப்பில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

கடந்த ஏப்ரல் 10ஆம் திகதி பொலிஸாரெனத் தம்மைக் குறிப்பிட்ட சீருடை அணியாத சிலர் அவரை அழைத்துச் சென்றனர். அவ்வாறு அவரை அழைத்துச் சென்றவர்கள், ஜெயந்தனை பூஸாவுக்கு அல்லது வவுனியாவுக்கு வந்தால் பார்க்கலாம் என அவரது குடும்பத்தினரிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஜெயந்தனுடன் உரையாடிய பின்னரே அவர் உயிருடன் இருப்பதும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் அவரது குடும்பத்தினருக்குத் தெரிய வந்துள்ளது.

உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்; தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தோன்றுகின்றது. அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார், அவரை தடுத்து வைப்பதற்கான உத்தரவு மே 9ஆம் திகதி வரையே வழங்கப்பட்டுள்ளது என ஜெயந்தனின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், சட்டத்தின்கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அவரை இன்னமும் அதிகாரிகள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் அவர் தனது சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்கான அனுமதியும் வழங்கப்படவில்லை. மேலும் அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்து அதிகாரிகள் ஜெயந்தனின் குடும்பத்தினருக்குத் தவறான தகவல்களை வழங்கி வந்துள்ளனர்.

இதுதவிர, அவரது குடும்பத்தவர்களுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள்களை அதிகாரிகள் கொண்டு சென்றுள்ளனர்.

ஜெயந்தன் 2009ஆம் ஆண்டு ஓமந்தையில் இராணுவத்தினரிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து 2011 வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்த புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் தற்போதுள்ள இடத்தில் வாழத் தொடங்கினர். 1996இல் அவர்கள் இந்த இடத்திலிருந்தே இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெயந்தன் விடுவிக்கப்பட்ட பின்னரும் புலனாய்வுப் பிரிவினர் அவரைத் தேடிப் பல தடவைகள் அந்த வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

குறிப்பாக, அவர் விடுதலை செய்யப்பட்ட முதல் ஆறு மாதங்களில் பல தடவைகள் அவர்கள் இவ்வாறு அவரை விசாரித்திருந்தனர். எனினும், பின்னர் அவர்கள் இவ்வாறு அவரை விசாரிப்பதை நிறுத்தியிருந்தனர். போர் முடிவடைந்த பின்னர் ஜெயந்தனின் இரு சகோதரர்களும் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

> ஜெயந்தன் விடுவிக்கப்பட்ட பின்னரும் புலனாய்வுப் பிரிவினர் அவரைத் தேடிப் பல தடவைகள் அந்த வீட்டுக்குச் சென்றுள்ளனர். குறிப்பாக, அவர் விடுதலை செய்யப்பட்ட முதல் ஆறு மாதங்களில் பல தடவைகள் அவர்கள் இவ்வாறு அவரை விசாரித்திருந்தனர்.

### சீருடையின்றி வந்தவர்கள்

குறிப்பிட்ட தினம் - அன்று ஜெயந்தன் தனது வீட்டு வேலியைச் சரிசெய்து கொண்டிருந்த வேளை சீருடை அணியாத நால்வர் அவரின் வீட்டுக்கு வந்துள்ளனர். அவர்களுடன் சிறிது நேரம் உரையாடிய பின்னர் ஜெயந்தன் அவர்களைத் தனது வீட்டின் முன் வாசலுக்கு அழைத்து வந்துள்ளார். அவர்களுடன் சிங்களத்தில் உரையாடியுள்ளார். ஜெயந்தனின் தாயாரும், மனைவியும் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்காத அந்த நபர்கள், ஜெயந்தனுடன் மாத்திரம் உரையாடியுள்ளனர்.

அவர்கள் தனது மகனுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளை மகனின் கைகளை இறுக்கமாகப் பிடித்திருந்ததால் அவர்களது நோக்கம் குறித்து தனக்கு சந்தேகம் ஏற்பட்டதாக ஜெயந்தனின் தாயார் தெரிவிக்கின்றார்.

அவர்கள் யார் என ஜெயந்தனின் குடும்பத்தவர்கள் கேள்வி எழுப்பியவேளையும் ஜெயந்தன் குற்றமிழைத்தவர் போன்று அவரது கையை அவர்கள் இறுக்கமாகப் பிடித்திருந்ததாகக் குடும்பத்தினர் தெரிவித்தனர். பின்னர் ஜெயந்தனிடம் தாங்கள் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளதாகவும் குடும்பத்தினரை அங்கிருந்து விலகிச் செல்லுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

கதிரையொன்றில் ஜெயந்தனை இருத்திய அவர்கள் அதிலிருந்து எழமுடியாதவாறு இறுக்கிப் பிடித்துள்ளனர். ஜெயந்தனின் சகோதரர், அவர்கள் தாங்கள் யார் என்பதை நிரூபிக்காமல் அவ்வாறு செய்யமுடியாது எனத் தெரிவித்தவேளை அவரை அங்கிருந்து செல்லுமாறு அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

எனினும், ஜெயந்தனின் குடும்பத்தவர்கள் தொடர்ச்சியாக அவர்கள் யார் எனக் கேள்வி எழுப்பியவேளை தாங்கள் பொலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸிலிருந்து வந்தவர்கள் என அவர்கள் தெரிவித்துள்ளனர். ஜெயந்தனின் தாயார் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பிய வேளை அவர்கள் தாங்கள் சீருடையில்லாமல் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணைக்குப் பின்னர் ஜெயந்தனின் வீட்டை சோதனையிட்ட அவர்கள் 5 கையடக்கத் தொலைபேசிப் பெட்டிகள் மற்றும் அந்த கையடக்கத் தொலைபேசிகளுக்கான வாரண்டி அட்டைகள் என்பவற்றை வெளியில் கொண்டுவந்துள்ளனர்.

அதன் பின்னர் ஜெயந்தனின் தொலைபேசி உரையாடல்கள் குறித்து பதிவுகளை மேற்கொண்ட அவர்கள், ஜெயந்தனின் கைத்தொலைபேசியைத் தவிர ஏனையவற்றை மீள வழங்கியுள்ளனர்.

ஜெயந்தனின் கைகளைக் கட்டிய அவர்கள், அவரது மனைவியிடம் ஒரு வாரத்துக்குத் தேவையான ஜெயந்தனின் ஆடைகளைத் தருமாறு கோரியுள்ளனர்.

ஜெயந்தனின் தாயார் அவர்களின் நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பியவேளை, ஜெயந்தன் என்ன குற்றம் செய்தார் என்பது அவரது குடும்பத்தவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், தான் என்ன குற்றமிழைத்தார் என்பது ஜெயந்தனுக்குத் தெரியும். அதனைத் தெரிவிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### வெள்ளை வான் வந்தது

இதன் பின்னர் அந்த நபர்களில் ஒருவர் கையடக்கத் தொலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டதைத் தொடர்ந்து வெள்ளை நிற வான் ஒன்று வந்துள்ளது. அதில் மேலும் மூவர் காணப்பட்டுள்ளனர். அதேவேளை, மேலும் இருவர் மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு வந்துள்ளனர். வானில் வந்த ஒருவரிடம் ஆயுதங்கள் காணப்பட்டுள்ளன.

சீருடையில் காணப்பட்ட அவர்கள் அனைவரும் வீட்டைச் சுற்றிவளைத்து நின்றனர். அவர்களில் இருவர் ஜெயந்தனுடைய மற்றும் அவரது சகோதரருடைய மோட்டார் சைக்கிள்களைக் கொண்டுசென்றுள்ளனர்.

அவ்வாறு செல்வதற்கு முன்னதாக அவர்கள் இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின்னர் அரியாலைக்கு வருமாறு (அரியாலையில் உள்ள அம்மன் கோவில் ஒன்றுக்கு அருகில்)குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளனர்.

### ஜெயந்தனைத் தேடும் நடவடிக்கை

அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னர் ஜெயந்தனின் குடும்பத்தவர்கள் பொலிஸ் நிலையம் சென்று அங்கு முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர். ஹயஸ் வானில் வந்தவர்கள் பொலிஸார் என அறிமுகப் படுத்திக்கொண்டு ஜெயந்தனைக் கொண்டு சென்றதாக தெரிவித்த அவர்கள், அந்த வாகனத்தின் இலக்கத்தகட்டின் விவரங்களையும் வழங்கியுள்ளனர்(69-1010) தங்கள் வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள்களை அவர்கள் எடுத்துச்சென்றதையும் பொலிஸாரிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தங்களுக்குள் விவாதித்த பொலிஸார், கடத்தியவர்கள் தாங்கள் பொலிஸார் எனத் தெரிவித்துள்ளதாலும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்து சந்திக்குமாறு உத்தரவிட்டுள்ளதாலும் தாங்கள் முறைப்பாடுகளைப் பதியமுடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

ஜெயந்தனின் குடும்பத்தினர் அரியாலையிலுள்ள குறிப்பிட்ட வீட்டுக்குச்சென்றவேளை அங்கு தங்கள் வீட்டுக்கு வந்த நபர் ஒருவரைக் கண்டுள்ளனர். அது ஒரு சேதமடைந்த வீடு. பொலிஸ் நிலையம் என்பதற்கான அறிவுறுத்தல் பலகைகள் எதுவும் இல்லை என ஜெயந்தனின் குடும்பத்தவர்கள் தெரிவிக்கின்றனர். தங்கள் வீட்டிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களை அவர்கள் கண்டுள்ளனர்.

ஜெயந்தனின் குடும்பத்தவர்கள் அங்கு காத்திருந்த வேளை அவர்களின் வீட்டுக்கு ஏற்கனவே வந்த குறிப்பிட்ட வெள்ளை ஹயஸ் வான் வந்துள்ளது.

அதிலிருந்து இறங்கிய கடத்தல்காரர் ஒருவர் ஜெயந்தன் உள்ளேயிருப்பதாகவும் அவருடன் பேச முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். எனினும், வானுக்கு கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்ததால் ஜெயந்தன் உள்ளேயிருக்கின்றார் என்பதை உறுதிசெய்ய முடியாத நிலை காணப்பட்டது,

மேலும் கடத்தல்காரர்களில் ஒருவர் அரியாலையில் எதுவும் செயமுடியாது எனவும் வவுனியாவுக்கு வருமாறும் கோரியுள்ளார். ஜெயந்தனின் இரண்டு வயது மகள் தந்தையைப் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என அவரது குடும்பத்தினர் கோரிய வேளை அவர்கள் அதற்கும் அனுமதி மறுத்துள்ளனர்.

அதன்பின்னர் அவர்கள் 11ஆம் திகதி வவுனியாவுக்குச் சென்றுள்ளனர். வவுனியாவில் கண்டி வீதியில்தம்ரோதளபாடக்கடைக்கு அருகிலுள்ள வீடொன்றுக்கு வருமாறு கடத்தல்காரர்கள் ஜெயந்தனின் குடும்பத்தவர்களைக் கேட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பகுதி பொலிஸ் நிலையமொன்றுக்கு அருகில் காணப்பட்டதாகவும், பல வீடுகள் இருந்ததாகவும் ஜெயந்தனின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்கள் போன்றவற்றை அங்கு காணமுடிந்துள்ளது.

அங்கு ஜெயந்தனின் குடும்பத்தவர்கள் தங்கள் வீட்டுக்கு வந்த நபர் ஒருவரைக் கண்டுள்ளனர். அவர் நீங்கள் ஜெயந்தனை பார்க்கவா வந்துள்ளீர்கள் என வினவியுள்ளார். அதன் பின்னர் மற்றுமொரு நபரிடம் சிங்களத்தில் உரையாடிய அவர், பின்னர் ஜெயந்தன் அங்கு இல்லை அவரை பூஸாவுக்குக் கொண்டுசென்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். அவரை பூஸாவுக்குச் சென்று பார்க்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

### மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீடு

இதன் பின்னர் ஏப்ரல் 12ஆம் திகதி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவர் ஜெயந்தனை கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவில் சந்தித்துள்ளதைத் தெரியப்படுத்தியுள்ளார். மனித உரிமை ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் வழமையான வருகையொன்றின் போதே அவர் ஜெயந்தனைப் பார்த்துள்ளார்.




## தடம்மாறிய ஆசிரியர் கீதம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினரின் ஆசிரிய மாநாடு கடந்த 6,7ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தமது உரையில், அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருந்த ஆசிரிய கீதத்தின் முதன்மை பற்றி நயம்பட எடுத்து உரை ஆற்றியிருந்தார்.

ஆசிரியர் கீதத்தை இயற்றி இசையமைத்த அடையாறு தமிழ்நாடு இசைக்கல்லூரி சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவனைப் பாராட்டியதுடன் அவருக்குத் தமது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்திருந்தார்.

1985இல் இயற்றப்பட்ட இந்த ஆசிரிய கீதத்துக்கு அப்பால் இன்னொரு தரம் வாய்ந்த ஆசிரிய கீதம் உருவாக முடியாது என்பது மாற்றுக்கருத்துக்கு இடமில்லாத தொன்று.

புறக்கண் பார்வை இல்லாவிடினும் ஞானக்கண் பார்வையுடன் ஆசிரியர் இயற்றிய இந்த ஆசிரிய கீதம் யாழ்ப்பாணக் கல்வி வலய ஆசிரிய மாநாட்டு அழைப்பிதழில் தடம் மாறி கடைசி இரு பந்திகளும் அச்சிடப்பட்டிருந்தமை மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும். கீதத்தைப் பார்த்தாலே பந்தி அமைப்பு இலகுவாக விளங்கக் கூடியதாக இருந்தும் சம்பந்தப்பட்டவர்கள் இந்தத் தவறுக்கு எப்படித் துணைபோனார்கள்..?

பொய்யற்ற கீரன்
யாழ்ப்பாணம்

## வீதித் திருத்தம் தொடர்பானது

பெருங்குளம் சந்தியில் இருந்து மட்டுவில் மகா வித்தியாலயம் செல்லும் நேர் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் என அனைவரும் காலையிலும் மாலையிலும் பள்ளத்தில் விழுந்து எழும்பியேசெல்கின்றனர். சைக்கிள் கூடைக்குள் வைக்கும் கைப்பைகளும் பள்ளத்தில் சைக்கிளை விட்டு மேலே ஏறும்போது கிழே விழுந்து உள்ளிருக்கும் பெறு மதியான பொருள்களும் உடைகின்றன.

இது சம்பந்தமாக சாவகச்சேரி நகர சபை உரிய கவனம் எடுக்கவில்லை. ஆனால் சோலைவரி, கட்டட வரி, மதில் கட்ட அனுமதிக் கட்டணம் என்று பல வகையான வரிகளை அறவிடும் நகர சபை மக்களுக்கான இந்த வீதியைத் திருத்த ஏன் தாமதம் செய்கின்றது?

இந்த வீதியானது 5 வருடங்களுக்கு மேலாக இதே நிலையில் காணப்படுகின்றது. தயவு செய்து இந்த வீதியைத் திருத்தித் தரும்படி உரிய அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம்.

கல்வயல் பிரதேச மக்கள்

## எமது வீதிகளைப் புனரமைத்து வழங்குவார்களா?

சங்கானை மேற்குப் பகுதியில் உள்ளது புனித பூமியாம் எமர் கலட்டி எனும் கிராமம் இக் கிராமத்தில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றோம். எமது கிராமத்தை சில உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமலும் இருக்கலாம்.

எமது வீதிகள் அனைத்தும் குட்டையும் சொறியுமாகவும் கிடங்கும் முடங்குமாகவும் காட்சி அளிக்கின்றன. சில வேளைகளில் காவல் துறையினர் எமது கிராமத்துக்கு வருவது என்றால் சுட அந்த வீதியின் ஏதோ ஒரு மூலையில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அவ்வழி யால் நடந்துதான் வருவார்கள். பல வருடங்களுக்கு முன்னர் தார் ஊற்றப்பட்டு இப்போது கற்கள் எல்லாம் ஆணி போல் தளைத்து அவ் வீதியால் எவருமே செல்ல முடியாத நிலைமையில் காட்சி அளிக்கின்றன.

எவருமே ஏன் என்று கூடக் கேட்க மாட்டாத அளவுக்கு எமது வீதிகள் உள்ளன. மழை காலம் என்றால் எமது வீதிகள் அனைத்திலும் வெள்ளம் தேங்கி நிற்கும். சில வேளை முழங்காலுக்கு மேல் வெள்ளம் தேங்கி நிற்கும். நாம் அன்றாடம் உழைத்துத் தான் எமது சீவியத்தை நடத்துகிறோம். அவ்வேளையில் நாம் வெளியில் செல்வது என்றால் கூட மிகவும் கஸ்டமாகத்தான் இருக்கும். எனவே தான் எமது நிலைமையை உயர் அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட மக்கள்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.



# பெற்றோரின் அதீத தலையீட்டால் சீனாவில் விவாகரத்து அதிகரிப்பு

## ஆய்வு ஒன்றில் தகவல்

பிஜிங், ஜூன் 10

சீனாவில் தற்போது விவாகரத்துச்செய்வோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. அதற்கு பெற்றோரின் தலையீடுகளே காரணம் என்று ஆய்வொன்று கூறுகின்றது.

ஷிங்கி மாகாணத்தில் 25 வயதில் இருந்து 34 வயதுக்கு இடைப்பட்ட தம்பதியரில் பாதிப் பேர் விவாகரத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். குறித்த வயதில் பியூஜியன் மாகாணத்தில் 40 சதவீதமானோர் விவாகரத்துச் செய்துள்ளனர். இதற்குக் காரணம் ஒரே ஒரு பிள்ளையை மட்டும் அவர்கள் பெறுவதே. ஒரு பிள்ளையை மட்டும் பெற்றிருக்கும் பெற்றோர் பிள்ளைகளின் மண வாழ்க்கையில் அதிக அக்கறை காட்டுவதும், குடும்ப வாழ்வு தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்துவதும் திருமண முறிவுக்குக் காரணமாக அமைகின்றது என்று அந்த ஆய்வு கூறுகின்றது.

பெற்றோரால் ஏற்படுத்தும் அழுத்தங்கள் திருமணத்திற்கு முன்னரே முரண்பாடுகளையும் மன முறிவையும் தோற்றுவித்து விடுகின்றன. உதாரணமாகத் திருமண அலங்காரம், ஆடைத் தெரிவு, திருமணக் கொண்டாட்டங்களுக்கான செலவு என்பவற்றில் இருந்தே பிணக்குகள் உருவாக ஆரம்பித்து விடுகின்றன என்று அங்குள்ள நீதிபதி ஒருவர் குறிப்பிடுகின்றார்.

விவாகரத்து வழக்குகளில் 60 சதவீதமானவை கணவன் மீது சந்தேகம் கொள்வதன் அடிப்படையில் அமைந்தவையாகும். ஆண் ஆதிக்கம் என்ற குற்றச் சாட்டில் பெண்களால் தொடுக்கப்படும் வழக்குகளும் அதிகம் என்று குறித்த ஆய்வு கூறுகின்றது.

இந்த ஆய்வு விவாகரத்துத் தொடர்பான உலக நிலையை எடுத்துக்காட்டுகின்றது என்று சமூக - விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் வு-சியோயங் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலை அழுத்தம், பொருளாதாரச் சூழல் என்பன குடும்பத்தை நடத்துவதை சவாலாக்கியுள்ளன. இதற்கு முந்தைய சந்ததியினரும் இந்த அழுத்தத்துக்கு முகம் கொடுத்தனர். அதனால் பலர் பிந்திய திருமணங்களைச் செய்கின்றனர். இளம் வயதில் திருமணங்கள் செய்பவர்கள் விவாகரத்துச் செய்து தனியே வாழ்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிகரித்து வரும் விவாகரத்துகளால் சகிப்புத் தன்மையற்ற தனிமையான வாழ்க்கை முறை உருவாகியுள்ளது. திருமணத்துக்குப் பின்னர் தனி வீட்டில் வாழத் திட்டமிடும்போது புதிய வீட்டுக்கான தொகையை பெற்றோரிடம் இருந்து பிள்ளைகள் எதிர்பார்க்கின்றனர். இந்த வகையில் பெற்றோரின் ஆதிக்கம் இளம் தம்பதியினரிடையே உள்நுழைகின்றது. வேறுபட்ட இரு சந்ததியினரிடையே பல பிணக்குகள் தோற்றம் பெறுகின்றன - என்று குடும்பநல அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

(ற-ரி4)

# ஆப்கன் படை... கடத்திச் சுட்...

குண்டூஸ், ஜூன் 10

தலிபான்களால் கடத்தப்பட்டவர்களில் 12 ஆப்கன் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் உடல்கள் நேற்றுமுன்தினம் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இரு மாதங்களுக்கு முன்னர் காஸ்னி மாகாணத்தில் 40 பேர் கடத்தப்பட்டனர். அவர்களில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 12 பேரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களின் உடல்கள் அண்டர் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தலிபான்கள் தரப்பில் எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. ஆயுதக் குழுக்களால் பொது மக்கள் கடத்தப்படுவது கண்டனத்துக்குரியது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ற-ரி4)





வெனிசுலாவில் இடம்பெற்றுள்ள பொருளாதார உணவு நெருக்கடிக்...
அறிமுகப்படுத்தியுள்ளார். அதற்கு ஆதரவு வழங்குவதற்காகப் பொதுமக்...

# சிறுமியின் உயிரைப் பறித்த தூக்கத்தில் நடக்கும் நோய்

அங்காரா, ஜூன் 10



தூக்கத்தில் நடக்கும் நோயால் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசித்து வந்த சிறுமி தூக்கத்தில் நடந்து சென்று 50 அடி உயரமான கட்டத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

16 வயதான குலே எர்டம் என்ற சிறுமியே உயிரிழந்தார். அடுக்கு மாடிக் குடியிருப்பின் கீழ்ப் பகுதியில் இறந்த நிலையில் காலையில் சிறுமியின் உடல் காணப்பட்டது. சிறுமிக்கு குறித்த நோய் இருப்பதைப் பெற்றோர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர். மருத்துவ அறிக்கையிலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சோம்னோபுலிசம் எனும் இந்த நோய் உலகில் மில்லியன் கணக்கானோரிடம் காணப்படுகின்றது. இந்த நோயால் ஏற்படும் விபத்து உயிரிழப்புகள் அதிகரித்துச் செல்கின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

(ற-ரி4)

## ஈராக்கில் 22 பேர் சாவு

பக்தாத், ஜூன் 10

ஈராக்கில் பக்தாத் நகரில் இடம்பெற்ற இரட்டைக் கார்க் குண்டு வெடிப்பில் 22 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர்.

சந்தைப் பகுதியிலும், இராணுவச் சோதனைச் சாவடியிலும் கார்க் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றன என்று ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

பலூஜாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக ஈராக் இராணுவப் படைகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளதை அடுத்தே பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற-ரி4)

# அதிர்ந்த நிலத்தால் உருவாகியது நிலப...

நியூசிலாந்தின் மடாடா கடற்கரைப் பகுதியில் எரிமலை மூலம் புதிய நிலப்பரப்பு உருவாகியுள்ளது. அதனால் புதிய எரிமலை தோற்றம் பெறலாம் என்றும், தொடர் நில அதிர்வுகள் ஏற்படலாம் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இது குறித்து ஆய்வாளர் அயன் ஹாம்லிங் கூறியதாவது:

154 சதுரபரப்பு மைல்கள் அளவுக்கு புதிய நிலப்பரப்புக் கிடைத்துள்ளது. 2003ஆம் ஆண்டில் இருந்து 2011ஆம் ஆண்டு வரை ஆயிரக்கணக்கான நில அதிர்வுகள் பதியப்பட்டுள்ளன. இந்த அதிர்வுகள் ரெக்ரோனிக் தகடுகளின் அமைவிடப் படுத்தலால் ஏற்பட்டுள்ளன. மேற்பரப்பை மக்மா (எரிமலைக் குழம்பு) வந்தடைய 6 மைல்கள் தூரம் ... லெழும்ப வேண்டும்.- என்றார்.

மடாடா பகுதியில் 650 குடும்பங்கள் வ... கின்றன. அங்கு இடம்பெறவுள்ள அ... வுகள், வெடிப்புகளில் இருந்து மக்களை... பாதுகாக்கும் நடவடிக்கையை ... கொள்ள வேண்டும் என்று விஞ்ஞா... கள் எச்சரித்துள்ளனர். (ற-ர...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# டயினர் 12 பேர் டடுக் கொலை



# 15 வயதுச் சிறுவன் வயிற்றில் 200க்கும் மேற்பட்ட ஆணிகள்

## சீனாவில் விநோத சம்பவம்





பீஜிங், ஜூன் 10
சீனாவில் ஜியாங்சி மாகாணத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவனின் வயிற்றில் இருந்து 200க்கும் மேற்பட்ட ஆணிகள், கற்கள், காசுகள் எனப் பல பொருள்கள் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளன.

15 வயதான இந்தச் சிறுவன் சில நாள்களாகக் கடும் வயிற்று வலியால் அவதிப்பட்டான். முதலில் பெற்றோர் சாதாரண வலியாக இருக்கலாம் என்று நினைத்து மருந்துகளை வழங்கினர். ஆனால் வலி கடுமையானதை அடுத்து கடந்த திங்கட்கிழமை வைத்தியசாலையில் சிறுவனைச் சேர்ப்பித்தனர்.

அங்கு சிறுவனின் வயிற்றை ஸ்கான் செய்து பார்த்த மருத்துவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

சிறுவனின் வயிற்றில் 200 க்கும் மேற்பட்ட ஆணிகள், கற்கள், காசுகள் மற்றும் குச்சிகள் உள்ளடங்கலாக சுமார் ஒன்றரைப் பவுண்ட் எடை கொண்ட பொருள்கள் இருந்தன. அதையடுத்து அவை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

இதுவரை இவ்வாறான ஒரு சம்பவத்தைக் காணவில்லை என்று மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்தனர். பிக்கா எனும் நோய் இவ்வாறான அசாதாரணமான பொருள்களை உண்பதற்கான உணர்வை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். (ற-ரி4)



நக்கடிக்குத் தீர்வாக அந்த நாட்டு ஜனாதிபதி நிக்லஸ் – மடுரோ மக்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை ாதுமக்கள் தலைநகர் கரக்காஸில் நேற்று முன்தினம் ஒன்று திரண்டனர். (ற-ரி4)

# 25 ஆண்டுகள் கடந்தும் மறக்காத சிம்பான்சிகள்

## காப்பாற்றியவரைக் கண்டதும் ஆரத் தழுவி மகிழ்ந்தன



வொஷிங்டன், ஜூன் 10
தம்மைக் காப்பாற்றி பயிற்சிகள் வழங்கியவரை 25 ஆண்டுகளுக்குப் பின்னர் சந்தித்த சிம்பான்சி குரங்குகள் அவரைக் கட்டித்தழுவி தமது அன்பை வெளிப்படுத்தியுள்ளன. இந்த நெகிழ்ச்சியான சம்பவம் அமெரிக்காவின் லூசியானாவில் அமைந்துள்ள சிம்பான்சி காப்பகத்தில் நடந்துள்ளது.

25 வருடங்களுக்கு முன்னர், ஈரல் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட குரங்குகள் மீட்கப்பட்டுக் காப்பகத்தில் வளர்க்கப்பட்டன. விலங்கு நடத்தையியலாளரான லிண்டா கொப்னர் குரங்குகளுக்குப் பயிற்சிகளை வழங்கினார். 4 வருடங்கள் பயிற்சி கொடுத்த லிண்டா பின்னர் காப்பகத்தை விட்டு விலகிச் சென்றார்.

தற்போது கிட்டத்தட்ட 25 வருடங்களுக்குப் பின்னர் குறித்த காப்பகத்துக்கு மீண்டும் சென்றுள்ளார். தனது பயணத்தை ஆவணப் படுத்துவதற்காக ஒளிப்படக் கருவிகளையும் கொண்டு சென்றார். சிம்பான்சிக்களை அவர் சந்தித்தபோது இரு சிம்பான்சிகள் லின்டாவைக் கண்டதும் கைகளை விரித்து ஆரத் தழுவின. தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி[illegible] "இந்தக் குரங்குகள் 6 வரு[illegible]களாக ஆராய்ச்சிக்குப் பய[illegible]படுத்தப்பட்டுவந்தன. இவற்[illegible] நாம் மீட்டு மறுவாழ்வு அ[illegible]தோம். அதன் பிரதியுபகார[illegible] நன்றியைத் தெரிவிக்[illegible]றன" – என்று நெகிழ்ச்சியு[illegible] தெரிவித்தார் லிண்டா.

சிம்பான்சி குரங்குகளுக்[illegible] மனிதர்களுக்கும் இடை[illegible] 98.8 சதவீத டி.என்[illegible] பொருத்தம் உண்டு. அத[illegible] மனிதர்களுக்கான தடுப்[illegible] மருந்துச் சோதனைகளு[illegible] சிம்பான்சிகள் பயன்படு[illegible]பட்டுவருகின்றன. இ[illegible]றான சோதனைகள் க[illegible] ஆண்டு முதல் அமெரி[illegible]வில் நிறுத்தப்பட்டன. [illegible]டன் சிம்பான்சிக்கள் அ[illegible]குரிய இனமாகவும் அ[illegible]கப்பட்டுள்ளன. (ற[illegible]

லம்

தூரம் மே
றார்.
ங்கள் வசிக்
ுள்ள அதிர்
ுமக்களைப்
யை மேற்
விஞ்ஞானி
(ற-ரி4)

# புனித பயணத்துக்கு இஸ்ரேல் திடீர் தடை



ஜெருசலேம், ஜூன் 10
ரம்ழான் மாதத்தைக் கடைப்பிடிக்க புனித பயணம் மேற்கொள்ள அனுமதி கோரிய 83 ஆயிரம் பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் அனுமதி வழங்கமறுத்துள்ளது.

இஸ்ரேல் இராணுவத் தலைமையகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள வணிக வளாகத்தில் இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர். அதையடுத்தே இஸ்ரேல் அரசு இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. புனித மாதத்தை முன்னிட்டு பயணிக்க அனுமதி கோரியிருந்த 83 ஆயிரம் பேரின் பயணங்களுக்கான அனுமதி [illegible] கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து, இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 207 பலஸ்தீனியர்கள், 28 இஸ்ரேலியர்கள், 2 அமெரிக்கர்கள், வேறு நாடுகளைச் சேர்ந்த 2 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 4

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது. பிறந்த எண் 4 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

**உடல் ஆரோக்கியம்**
இந்த நான்கு எண்காரர்கள் நடுத்தர மான உயரம் உடையவர்கள். வட்ட வடிவமான முகத்தோற்றமும், சற்றுப் பருமனான உடல் அமைப்பும் உண்டு. ஆழ்ந்த கண்கள் இருக்கும். தலைமுடி கருமையாகவும், அதேசமயம் அழுத்த மாகப் படியாமல், சற்றுச் சுருண்டும் காணப்படும்.
அதிகமான நோய்கள் இவர்களை அணுகாது. உணவு விடயத்தில் மட்டும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால், ஆரோக்கியம் உறுதி!

**அதிர்ஷ்ட தினங்கள்**
ஒவ்வொரு மாதத்திலும் 1, 10, 19 ஆகிய தினங்களும், கூட்டு எண் 1 வரும் தினங்களும் மிகவும் அதிர்ஷ்டமான வையே. 28ஆம் திகதி நடுத்தரமான பலன்களையே கொடுக்கும். அதே போன்று 9, 18, 27ஆகிய திகதிகளும் கூட்டு எண் 9 வரும் தினங்களும் நல்ல பலன்களையே கொடுக்கும்.
அதேபோன்று 4, 13, 22, 31 ஆகிய திகதிகள் தாமாகவே நல்ல பலன் களைக் கொடுக்கும். ஆனால் புதிய முயற்சிகளில் ஈடுபட்டால் தோல்வியே மிஞ்சும். அதே போன்று 8, 17, 26 ஆகிய திகதி களும் கூட்டுஎண் 8 வரும் தினங் களும் துரதிர்ஷ்ட மானவை. 7, 16, 25ஆகிய திகதிகளும் துரதிர்ஷ்ட மானவைதான்.

**அதிர்ஷ்ட நிறங்கள்**
நீலநிறம் மிகவும் சிறந்தது. நீலக் கோடுகள் குறைந்தபட்சம் இருக்க வேண்டும். மஞ்சள் நிறமும் அதிர்ஷ்ட மானது. இலேசான பச்சை, நீலம் உடைகளும் நல்லதுதான். கறுப்பு நிற ஆடைகளைத் தவிர்க்கவேண்டும்.

**முக்கியக் குறிப்பு**
சர்வ வல்லமை படைத்த இராகு வானவர், எந்த ஒரு நிகழ்ச்சியானாலும் சரி, தன்னுடைய இஷ்டப்படியேதான் நடத்துவார். எனவே 4ஆம் திகதி பிறந்த அன்பர்கள் தங்களுடைய வாழ்க்கையில், எதிர்பாராத மாற்றங் களைச் சந்திக்க வேண்டி வரும். அந்த மாற்றங்களை எல்லாம் நன்மைக்கே என்று மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு செயற்பட்டால், அதிர்ஷ்டங்கள் பின்பு தாமே வந்து சேரும்.

**பண்புகள்**
இவர்கள் கரகரப்பாகப் பேசுவார்கள். கண்டிப்பும், அதிகாரமும் நிறைந்து பேசுவார்கள். இவர்களுக்குத் துணிச் சலும், பலமும் அதிகம். பொலிஸ், போர் வீரர்கள் போன்று உடல்வாகு அமையும். அடிக்கடி இவர் களுக்குச் சோதனைகள் ஏற் படும். அதைக் கண் கலங்கா மல், செயற்பட்டு வெற்றி அடை வார்கள். இளமையிலேயே திரு மணம் நடக்க வாய்ப்பு உள்ளது! குடும்ப பாரத்தைச் சுமக்கவேண் டிய சூழ்நிலைகள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையேஅன்னியோன்னியம் ஏற்படும்! தெய்வ பக்தியும் இருக்கும்.

**13 ஆம் திகதி பிறந்தவர்கள்**
இவர்கள் துன்பங்களையே அனு பவிக்கப் பிறந்தவர்கள் என்பார்கள். உண்மை அதுவன்று! சோதனை இல்லையேல் சாதனை இல்லை. இவர்களது இளமைக் காலப் போராட் டங்கள் எல்லாம் பிற்காலத்து வசதியான வாழ்வுக்கு அடித்தளமாக அமைந்து விடும். காரணமில்லாமல் பலருடைய எதிர்ப்பையும், விரோதத்தையும் சம்பாதிக்க வேண்டி வரும்.
இவர்கள் எவருக்கு உதவுகிறார்களோ, அவர்களே இவர்களுக்குத் துரோகம் செய்வார்கள்.
கடலில் அலை ஓய்வதில்லை. அதைப் போன்றுதான் இவர்களது பிரச்சினை களும். இருப்பினும் தங்களின் கடும் உழைப்பால் பேரும் புகழும், பெரும் செல்வமும், மிகச் சிறப்பாகத் தேடிக் கொள்வார்கள்.
எதிர்பாராமல் வரும் துன்பங்களெல் லாம் எதிர்பாராமலேயே விலகி ஓடும். ஆணவம் கொண்டு செயலாற்றினால் துன்பம் நிச்சயம். நேர்மையும், கடுமை யான உழைப்புமே இவர்களை உயர்த்திவிடும்.

**22ஆம் திகதி பிறந்தவர்கள்**
அதிக நண்பர்களும், நல்ல பேச்சு சாமர்த்தியமும் உண்டு. நிர்வாகத்திற மையும், பிடிவாதமும் உண்டு. எப் படியாவது பணம் சம்பாதிக்க வேண் டும் என்று குறுக்கு வழியில் துணிந்து இறங்கி விடுவார்கள். பின்பு அதனால் பிரச்சினைக்குள்ளாவார்கள். இவர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண் டியது அவசியம். இல்லையெனில் இவரைச் சேர்ந்தவர்களே கவிழ்த்து விடுவார்கள். வீம்புக்காகச் சில செயல் களில் ஈடுபட்டால், தோல்விகளே மிஞ்சும். அரசியல், சினிமா, போட்டி, பந்தயங்களில் அதிர்ஷ்டங்கள் உண்டு. தீய நண்பர்களைத் தெரிந்து அவர்களை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

**31ஆம் திகதி பிறந்தவர்கள்**
சுய திருப்தியே இவர்களுக்கு முக்கிய மாக இருக்கும். பணம் இவர்களைத் தேடி வர வேண்டுமே தவிர, இவர்கள் பணத்தைத்தேடினால் கிடைக்காது. தீவிரத் தன்மையும் அதிகாரம் செய்வதும் இவர்களது குணம். உலக சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். மனோசக்தி மிகுந்தவர்கள். ஆன்மிகம், சோதிடம், வேதாந்த ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உண்டு. எதிரிகளைத் துணிவுடன் சந்திப்பார்கள். உலகத்தில் உள்ள பல விடயங்களையும் இவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். மற்ற மனிதர் களை உடனே எடை போடும் சாமர்த்தி யம் உண்டு. அரசியலில் ஈடுபட்டால் நல்ல பதவிகள் கிடைக்கும்.

# துலாம்பரமான ஞாபக சக்திக்கு விளாம்பழம்

கே.எஸ்.சிவஞானராஜா



யாழ்ப்பாணத்தின் மூலதன மாக அமைவது கல்வியே. இரண்டவாது பட்சம் பாதுகாப்பு. மூன்றாவதாகவே கடின உழைப்பு வேண்டப்படுகிறது. உழைப் பும் அளவுக்கு மிஞ்சிப்போனால் அது ஆரோக்கியமானதாக இருக்காது. ஆகவே யாவற்றையும் சமச்சீராக வைத் திருக்கப் பெரும் வரம் அளிப்பது விளாம் பழமாகும். ஆன்மிகமாயினும், அரசி யலாயினும், குடும்பமாயினும், படிப் பாயினும், உணவாயினும், காதலாயி னும், ஆசையாயினும் எவற்றையும் அளவோடு, அழகாக வைத்திருக்க உதவுவது விளாம்பழமாகும். உடலை யும், உள்ளத்தையும் சீராகவும், நேர்த்தி யாகவும், பேறாகவும் கைவசமாக்கு வதில் விளாம்பழம் ஏனைய பழங்களிலும் பார்க்க முதல் இடம் வகிக்கிறது.

**வேதிப்பொருள்**
விளாம்பழத்தின் ஓடு, சதை, விதை, இலை, பட்டை, பிசின்,. வேர் யாவுமே மனிதனுக்கு வாழ்வளிப்பவையாகும். பழத்தில் மிகுந்த புரதம், விற்றமின் பி, சி உள்ளன. விதையில் ஒலியிக் பால்மிடிக், ஸ்ட்டாரிக் அமிலங்களும், இலைகளில் சபோரின், வைடெக்ஸின் வேதிகளும், பட்டையில் பெரோனோன், பெரோனோ லைட்டு, டேரைகைன் மூலங்களும் காணப்படுகின்றன. மனிதர்களுக்கு மட்டு மல்ல மிருகங்களுக்கும் குறிப்பாக யானைக்கு அதிவிசேடமானதாகும். இறைவனுக்கு நிவேதனமாகப் படைத் தால் இறைவனும் சாப்பிடுவார். நாமும் சாப்பிடலாம் அல்லவா!

**ஞாபகசக்தி**
பொதுவாக எல்லோருக்குமே ஞாபக சக்தி வாய்ப்பதில்லை. காரணம் அதை மேம்படுத்துவதற்குரிய உணவுகளை யாம் உண்பதில்லை. முள்ளுகளுடைய மரங்களின் பழங்களை உண்போமாக இருந்தால் ஞாபகசக்தி மேம்படும். சிறப்பாக தோடம்பழம், வில்வம்பழம், எலுமிச்சம்பழம், விளாம்பழம், மாதுளம் பழம், ஈச்சம்பழம் யாவும் மறதியை விரட்டி, ஞாபகசக்தியைத் திரட்டித் தரும். குறிப்பாக முன் பள்ளியிலிருக்கும் பிள்ளைகளுக்கு மறக்காமலும் மறுக்காமலும் கொடுக்க வேண்டிய பழம் விளாம்பழமாகும்.

**இதயம்**
இதயத்துக்கு வேண்டிய பலத்தை அளிக்கும் தன்மையைக் கொண்டது இந்தக் கனி. இருதயத் துடிப்பை மாறா மல் கொள்ளாமல், கூடாமல் குறை யாமல் பாதுகாப்பதில் விளாம்பழம் தலைமை தாங்குகிறது. சுண்ணாம்புச் சத்தும், விற்றமின் பி ஆகியன இருதயத் துக்கு இதமளிப்பனவாகும். இதயம் இதமாகும்போது அறிவுக்குப் பலம், ஆளுமைக்கு வளம், செரிமானத்துக்குச் சுகம், சேமத்துக்கு வரம் என்று சகல சௌபாக்கியத்தையும் விளாம்பழம் வஞ்சகமின்றி வாரி வழங்கும்.

**எலும்புகள்**
இரும்புச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும், விற்றமின் ஏயும் நிறைந்திருப்பதால் எலும்புகள் பலமடையும். கல்சியம் இதில் திருப்திகரமாக இருப்பதால், எலும்புகளின் நடவடிக்கைகள் தளர்ச்சி யடைவதில்லை. ஆஸ்டியோ பெரோசிஸ் என்ற எலும்பைத் தாக்கும் நோய் தூர வில கிச் செல்லும். பற்கள் மிகவும் கெட்டி யாகக் காணப்படும்.

**வசியம்**
ஓடும், சதையும், விதையும் சேர்ந்ததாக மருந்துபோல உண்டுவரின் பெண் வசியம், பெண்ணாசை, காமம், மோகம், வீரியம் யாவும் அமைதிபெறும்.

**பித்தம்**
பித்தத்தால் ஏற்படும் தலைவலி, பார்வை மங்கல், வாந்தி, மயக்கம், வாய்க்கசப்பு, கபாலக்குத்து, இளநரை, கைகால் கிறு கிறுப்பு, பசியின்மை யாவுமே விளாம் பழத்தை உண்ண சுகம் வரும். மேலும், அல்சர், வறட்சி, வறட்டுத்தோல், முடிஉதிர்வு, சமியாக்குணம், எல்லாமும் அறவே நீங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழிவுகள் தொடர்பான விழிப்புணர்வு முன்பள்ளிகளிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும்

வி.பி.குமார்

யாழ்.மாநகரசபைப் பகுதியில் காணப்படும் வீடுகளின் கிணறுகளுக்கு மிக நெருக்கமாக மலசல கூடங்கள் அமைந்துள்ளன. ஒரு வீட்டின் மலசல கூடம் மற்றைய வீட்டின் கிணற்றை ஒரு மதிலால் பிரிக்கின்றது. இவ்வாறான நிலமையை மாநகர சபையின் அநேக இடங்களில் காணலாம்.

இத்தகைய மலசலகூடங்கள் சீல் பண்ணப்படாமல் இருப்பதனால் மழை காலங்களில் மலக் கழிவுகள் நிலத்தடி நீருடன் கலக்கின்றன. பெருமளவான உணவுச் சாலைகளின் கழிவு நீர் நிலத்திற்குள் நேரடியாகவே விடப்படுகின்றது.

யாழ்ப்பாண கரையோரப் பகுதிகளான றெக்கிளமேசன் கிழக்குத் தெற்கு பகுதிகள் கழிவு நீர் மற்றும் திண்மக் கழிவுகளால் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. நகரத்தின் பிரதான வாய்க்கால்களில் கழிவு நீர் இறுதியாகச் சென்றடையும் இடமாகவும் இப்பகுதிகள் விளங்குகின்றது. இப்பகுதி செறிவான குடியிருப்புப் பகுதிகளை கொண்டிருப்பதனால் அதிகளவு கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. எங்கும் பியர் பேணிகள், சொப்பிங் பை, வெற்று தண்ணீர் போத்தல்கள் என்பன கழிவு நீர் வாய்க்கால்களில் கொட்டப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதிகளவு குடியிருப்புக்கள் காணப்படும்போது அதிக கழிவுகள் உருவாகின்றன. மேலும் யாழ். நகரின் பிரதான வாய்க்கால்கள் சேரும் குளங்கள் மிகவும் மோசமான நிலையிலுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் விடப்படுவதால் சுத்திகரிப்பு நிலைய மேற்பரப்பில் தேங்கும் எண்ணெய்ப்படிவுகள் மழை காலங்களில் நிலத்துடன் சேருகின்றன.

திண்மக் கழிவுகளைக் கையாளும் பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களைச் சார்ந்ததாகும். இந்த மாவட்டத்தில் உள்ள மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை என்பன கழிவகற்றலை மேற்கொள்வதில் பெரிய சவால்களை எதிர்நோக்குகின்றன. யாழ்.மாநகர சபை தனது எல்லைப் பகுதியில் கழிவுகளைத் தரம் பிரிக்காமலே சேகரிக்கின்றது. சேகரிக்கப்படும் கழிவுகள் காக்கை தீவில் கொட்டப்படுகின்றன.

அவை மிருகங்களால் சிந்தப்படுவதுடன் எரியூட்டப்படுவதனால் எங்கும் புகை மண்டலமாக காட்சியளிக்கின்றது.

நகரத்தில் உருவாகும் கழிவுகளை ஒவ்வொருநாளும் அகற்றுவதில் மாநகர சபை பெரியளவில் சிரமங்களை எதிர்நோக்குகின்றது.

கழிவுகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் போதாமையினால் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் கழிவகற்றலை மேற்கொள்ள முடியாமலுள்ளது. மாநகர சபையின் நிதி மற்றும் ஆளணி உபகரண வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் சிறப்பான முறையில் கழிவகற்றலை மேற்கொள்வது சவாலாக இருக்கின்றது.

ஆயினும் இந்தச் சபை அவ்வப்போது சில செயற்பாடுகளை மேற்கொண்ட வண்ணமே உள்ளது.

ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் நிதி மற்றும் ஆளணி உபகரண வசதிகள் தொடர்பில் சிரமங்களை எதிர்கொள்வதனால் இதுவரையில் பொருத்தமான திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த முடியாமலுள்ளது. யாழ்ப்பாண வைத்தியசாலையின் ஆபத்துக் கழிவுகள் தவிர்ந்த திரவக்கழிவுகள் நேரடியாகவே கடலுக்குள் விடப்படுகின்றன. நகரத்துக்கென கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இன்மையே இதற்கு முக்கிய காரணமாகும்.

இவ்வாறு உருவாகும் கழிவுகள் சுற்றுச் சூழலியல் ரீதியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றன. இவை நேரடியாக மண்ணை மாசுபடுத்துவதுடன் மோசமாக நிலத்தடி நீரையும் மாசுபடுத்துகின்றன. குறிப்பாக மலசல கூடக் கழிவுகள் மற்றும் கழிவு நீர் என்பன நிலத்தடி நீருடன் கலப்பதால் மாநகர சபையின் எல்லைப் பகுதிகளில் நிலத்தடி நீரில் பக்றீரியாக்கள் காணப்படுகின்றன.

இவை வயிற்றோட்டத்துக்குக் காரணமாகின்றன. வாய்க்கால்களிலுள்ள கழிவு நீர் டெங்கு நுளம்புத் தாக்கத்துக்கு வாய்ப்பாக அமைகின்றன.

பிளாஸ்ரிக், உலோகக் கழிவுகள், பெயின்ற் வகைகள் சூழலுக்கு மிகவும் ஆபத்தை விளைவிக்கின்றன. உணவுச்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நேரடியாக நிலத்துக்குள் விடப்படுவதனால் நிலத்தடி நீருடன் விரைவாகக் கலக் கின்றன.

திண்மக் கழிவுகள் காபனீரொட்சைற், மெதேன் உள் ளிட்ட வாயுக்களை வளி மண்டலத்தில் சேர்கின்றது.

இவை தனியே எம் சுற்றாடலை மாசுபடுத்துவது மட்டுமன்றி சில நோய்த்தாக்கத்துக்கும் இட்டுச் செல்கின்றன. யாழ். நகரிலுள்ள பெரும்பாலான உணவுச்சாலைகள் கழிவு நீர் வாய்க்காலுக்கு அருகிலேயே அமைந்துள்ளன. சுகாதார ரீதியில் இது பெரும் அச்சுறுத்தலாகும்.

திண்மக் கழிவுகளை நிரந்தரமாக முகாமைப்படுத்துவதற்கு நாங்கள் எல்லோரும் கைக்கொள்ளவேண்டியவை யாதெனில், எமது நடத்தையில் மாற்றம் கொண்டுவரவேண்டும், நாங்கள் மாறுகின்ற அதே வேளை அடுத்த சந்ததியை சரியான முறையில் விழிப்பூட்ட வேண்டும். இதற்காக நாம் முன்பள்ளி மாணவர்களிடத்தில் விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களும் தங்கள் முன்பள்ளிகளில் கழிவகற்றல் கூடைகளை நிற அடிப்படையில் தரம் பிரித்து வைத்து பிள்ளைகளால் வீசப்படும் கழிவுகளை அதற்குள் போடப் பழக்க வேண்டும். இதை முன்பள்ளி ஆசிரியர்கள் உணர்வு ரீதியாகப் பழக்கவேண்டும். இதை நாம் முன்பள்ளியில் விதைக்கும்போது சமூகத்தில் அது விருட்ச மாகும். கழிவுகளைக் கண்ட இடங்களில் வீசும் மனப்பாங்கு உடைந்து போய் பாதுகாப்பான கழிவகற்றல் என்ற நிலைக்கு அவர்கள் உந்தப்படுவதுடன் அவர்கள் தம் சந்ததிக்கும் இதனை எடுத்துச் செல்வார்கள்.

இதேபோன்று பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் பதின்மூன்று வரை ஒவ்வொரு வகுப்பறையிலும் கடதாசிக்கழிவுகள், உணவுக்கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள் என தரம் பிரித்து வர்ண அடிப்படையில் மூன்று கூடைகள் வைக்கப்பட்டு கழிவுகள் மாணவர்களால் அதனுள் போடுவது பார்க்கப்படுவதுடன் பாடசாலைக்காக வைக்கப்பட்ட பெரிய கூடையில் அவ்வாறான ஒழுங்கு முறையில் போடப்பட வேண்டும்.

வகுப்புக்களின் தூய்மையாக்கத்துக்கு எப்படி மாணவர்கள் பிரிக்கப்படுகின்றார்களோ அதேபோல கழிவகற்றலுக்கும் மாணவர்கள் பொதுவாக நியமிக்கப்படவேண்டும். இது அதிபர், ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் இது மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலைகள் உற்பத்தித் திறன் மேம்பாட்டில் கழிவகற்றலை பிரதான விடயமாக வளர்ப்பதுடன் பாடசாலையின் பிரதான ஒழுங்கு விதியாகவும் கொண்டுவர வேண்டும்.

அரச அலுவலகங்களிலும் கிளை ரீதியாகக் கடதாசி கழிவுகள், உணவுக் கழிவுகள், பிளாஸ் ரிக் கழிவுகள் என தரம் பிரித்து வர்ண அடிப்படையில் மூன்று கூடைகள் வைக்கப்பட வேண்டும். மேற்படி மூன்று அடிப்படையிலான பெரிய கூடைகள் வைக்கப்பட்டு கிளைரீதியாக இருக்கும் கூடைகளிலிருந்து பெரிய கூடைக்கு தர அடிப்படை யிலேயே சேர்க்கப்பட வேண்டும். இங்கு அலுவலர்கள் காலை உணவோ அல்லது மதிய உணவோ உண் ணும்போது சாப்பிட்டு முடிந்த வுடன் உணவின் மீதியை உணவுக் கழிவுக்குள்ளும் மதிய உணவுக்கான கடதாசியை கடதாசிக் கழிவுக்குள்ளும் போடும்போது உணவுக் கழிவை இலகுவாக அகற்ற முடியும். பொலித்தீன் கழிவை இலகுவாகக் கையாள முடியும். எல்லா இடங்களிலும் உணவுக் கழிவை மதிய உணவுக்கான கடதாசியுடன் சேர்த்து கூடைக்குள் வீசுவதனால் அவற்றை அகற்றுவது மிகவும் கடினமாகவுள்ளது. இதே போன்று அலுவலக நிகழ்வுகளின் போது தேநீர் பரிமாறப்படும் போது சில்வர் பேணிகள் பயன்படுத்தப்படவேண்டும். பயன்படுத்திய பின் அவற்றைக் கொதிக்க வைத்த நீரில் கழுவி மீளவும் பயன்படுத்தலாம். கொழும் பின் முதன்மை உணவுச் சாலைகளில் இதனை நாம் காணலாம்.

கட்டுரையாளர்,
ஒரு சுற்றுச் சூழலியல் ஆய்வாளராவார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊக்கம் தந்த சிலந்தி

அப்போது ஸ்கொட்லாந்து தேசம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. அந்த நாட்டுக்குரிய அரசன் முதலாவது றொபேர்ட் எதிரிகளால் விரட்டப்பட்டுக் காட்டுக்குள்ளே ஓடி ஒளிந்திருந்தான். பின்னர் அவன் நாட்டுக்கு வெளியே சென்று போர் வீரர்களை எல்லாம் திரட்டி ஆங்கிலேயரோடு போரிட்டான். படைபலம் போதாமையால் தோல்வியுற நேர்ந்தது. மீண்டும் மீண்டும் தன்னால் ஆனவரையில் முயன்று நாட்டுப் பற்று உள்ளவர்களை எல்லாம் திரட்டிப் படையெடுத்தான். எவ்வளவு முயன்றும் பகைவர்களை விரட்டித் தாய் நாட்டை மீட்க முடியவில்லை.

ஒவ்வொருமுறை அவன் படையெடுத்தபோதும், ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டு ஓடினான். கடைசியில் அவனுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டு விட்டன. இனித்தன்னால் தாய்நாட்டை மீட்க முடியாது என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அந்த முயற்சியையே கைவிட்டு விடலாமா என்றுகூட அவனுக்குத் தோன்றியது. றொபேர்ட் இந்த மாதிரியான தோல்வி மனப்பான்மையோடு படுத்திருக்கும்போது அவன் இருந்த வீட்டுச் சுவர் மூலை ஒன்றிலே வலை பின்னிக்கொண்டிருந்த சிலந்திப் பூச்சி அவன் கண்களில் பட்டது. உயரத்தில் வலை பின்னிக் கொண்டிருந்த அந்தச் சிலந்திப் பூச்சி எப்படியோ தவறிக் கீழே விழுந்து விட்டது. கீழே விழுந்த அந்தச் சிலந்திப் பூச்சி என்ன செய்கிறதென்று அரசன் கவனித்துக் கொண்டிருந்தான்.

மேலேயிருந்த சிலந்தி வலையிலிருந்து அந்தப் பூச்சியின் வாய்வரை ஒரு மெல்லிய நூலாம்படை தொங்கிக் கொண்டிருந்தது. அந்த வெண்ணிறமான நூலாம்படையையே ஏணியாகக் கொண்டு அந்தச் சிலந்திப் பூச்சி உயரத்தில் இருந்த தன் வலைக்கு ஏறிச் செல்ல முயன்று கொண்டிருந்தது. அரசன் அதைக் கவனித்துக் கொண்டேயிருந்தான். சிறிது தூரம் ஏறிய சிலந்திப்பூச்சி திடீரென்று தலைகுப்புற தரையில் விழுந்தது. நூலிலும் மெல்லியதான அந்த நூலாம்படையைத் தன் கால்களால் பற்றிக்கொண்டு செல்லும் அந்தப் பூச்சி தவறி விழுந்தது, வியப்புக்குரியதல்ல. ஆனால், அது தவறி விழுந்து விட்டோமே என்று சும்மாயிருந்து விடாமல் இரண்டாவது முறையாகவும் ஏறத் தொடங்கியது.



சிறிது உயரம் சென்றதும் மீண்டும்அந்தச் சிலந்திப் பூச்சி தவறி விழுந்தது. எத்தனை முறை விழுந்தாலும் அந்தச் சிலந்திப்பூச்சி மீண்டும் மீண்டும் ஏறவே முயன்று கொண்டிருந்தது. ஒன்பது முறை முயன்றும் அந்தச் சிலந்திப்பூச்சியால் உயர இருந்த வலையை அடைய முடியவில்லை. பாவம் அது பத்தாவது முறை ஏறத் தொடங்கியது.

“அறிவில்லாத சிறு பூச்சி ஏற முடியாத வழியில் ஏற முயன்று கீழே பலமுறை விழுந்த பின்பும் சிந்தனையில்லாமல் மீண்டும் ஏறுகிறது. ஏனோ இந்த வீண் முயற்சி?” என்று இரங்கினான் மன்னன்.

பத்தாவது முறையாக ஏறிய அந்தச் சிலந்திப்பூச்சி மிகவும் எச்சரிக்கையாக மெல்ல மெல்ல ஏறி முக்கால் வாசி உயரத்தைக் கடந்து விட்டது. இதுவரை சலிப்புடன் கவனித்து வந்த மன்னன் உற்சாகமாகக் கவனிக்கத் தொடங்கிவிட்டான். மெல்ல மெல்ல, அங்குலம் அங்குலமாக அது மேலே ஏறிக்கொண்டிருந்தது. இன் னும் சில அங்குல இடைவெளிதான் இருந்தது. “ஆண்டவனே இவ்வளவு உயரம் ஏறி விட்ட சிலந்தி, மீண்டும் விழுந்து விடக்கூடாதே” என்று கடவுளை வேண்டிக் கொண்டான் அரசன். ஆனாலும், இன்னும் அரை அங்குல உயரம் தான் இருந்தது வலை. ஆ! அதையும் பிடித்து விட்டது சிலந்திப் பூச்சி. இனி விழவே விழாது. அது தன் இருப்பிடத்தை அடைத்து விட்டது. வெற்றி! வெற்றி நீ தான் வீரன்!” தன்னை மறந்து கூச்சலிட்டான் மன்னர். இதைப் பார்த்துச் சிந்தித்த அரசன், வலிமை மிக்க ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு சலியாத உள்ள உறுதியுடன் போரிட்டான். பகைவர்கள் பறந்தனர். நாடு விடுதலை அடைந்தது.

## வரலாற்றில் இன்றைய தினம்

1624 - பிரான்ஸ், நெதர்லாந்து இடையில் கம்பைன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

1786 - பத்து நாள்களின் முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் டாடு ஆற்றின் மீது நிலச் சரிவால் உருவாகிய அணை உடைப்பெடுத்ததால் சீன சிச்சுவான் மாகாணத்தில் 100,000 பேர் சாவு.

1793 - பாரிஸில் யார்டின் டெஸ் பிளான்ற்ஸ் நூதனசாலை திறந்து வைக்கப்பட்டது. ஓர் ஆண்டின் பின்னர் இது முதலாவது பொது மிருகக்காட்சிச் சாலையானது.

1829 - ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் மற்றும் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் இடையே முதலாவது படகோட்டப் போட்டி லண்டன் கேம்ஸ் நதியில் இடம்பெற்றது.

1838 - மியால் கிறிக் படுகொலை: 28 ஆஸ்திரேலிய பழங்குடி இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர்.

1886 - நியூசிலாந்தில் தறவேறா எரிமலை வெடித்து 153 பேர் சாவடைந்தனர். மலை உச்சியில் 17 கி.மீ நீளமான பிளவு ஏற்பட்டது. பிரபலமான பிங்க் மற்றும் வெள்ளைத் தரைத்தோற்றமும் 3 மாத தொடர்ச்சியான எரிமலை வெடிப்பால் அழிவடைந்தது.

1898 - ஸ்பானிய அமெரிக்கப் போர்: கியூபாத் தீவில் அமெரிக்கக் கடற்படை தரையிறங்கியது.

1935 - 1932 இலிருந்து மோதிக் கொண்ட பொலிவியா மற்றும் பராகுவே இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது.

1940 - இரண்டாம் உலக மகா போர்: ஜேர்மனியப் படைகளிடம் நோர்வே சரணடைந்தது.
பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம் மீது இத்தாலி போர்ப் பிரகடனம் செய்தது.

1944 - பிரான்ஸ் ஒர்டோர் சர் கிளேனில் ஆண்கள் பெண்கள் சிறுவர் உட்பட 642 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
கிரேக்கம் டிஸ்ரோமிவில் ஆண், பெண், சிறுவர் உட்பட 218 பேர் ஜேர்மன் துருப்புகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

1945 - புரூணையை விடுவிக்க புரூணை குடாவில், ஆஸ்திரேலியப் படைகள் தரையிறங்கின.

1967 - ஆறு நாள் போர் முடிவு. போர் நிறுத்தத்துக்கு சிரியாவும், இஸ்ரேலும் இணங்கின.

1977 - அப்பிள் 11, முதலாவது தனிப்பட்ட கணினி (P.C) விற்பனைக்கு இடப்பட்டது.

1980 - தென் ஆபிரிக்காவில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் போராட வேண்டுமென சிறையிலுள்ள அதன் தலைவர் நெல்சன் மண்டேலா வேண்டுகோள் விடுத்தார்.


1990 - இரண்டாம் ஈழப்போர் ஆரம்பம்.

1999 - கொசோவாவிலிருந்து சேர்பியப் படைகளை விலக்கிக் கொள்ள ஸ்லோபோடன் மிலோசவிக் சம்மதித்ததையடுத்து, நேட்டோ தனது விமானத் தாக்குதலை நிறுத்திக் கொண்டது.

2004 - தமிழ்க் கூட்டமைப்பையும், ஹெல உறுமயவையும் சந்திக்க வைக்க, ரணில் விக்கிரமசிங்க பிரயத்தனம்.


2004 - உலக அமைதிப் படையை உருவாக்க ஜி–8 நாடுகளின் மாநாட்டில் தீர்மானம்.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சி.சதுர்த்திகன்,
தரம் – 3,
யாழ்ப்பாணக் கல்லூரி.

உதயன் சிறுவர் பகுதியில் ‘வர்ணம் தீட்டுவோம் வாங்க’ என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை துதிப் பாடல்களை சிந்தித்து சிறந்து வாழ்வோம்

காரை.எம்.பி.அருளானந்தன்

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகள் இருக்கும். ஒவ்வொரு பிரச்சினை தீரவும் இறைவனைத் தனிப்பட்ட மந்திரங்களைச் சொல்லி குறிப்பிட்ட வடிவில் வணங்குவது கூடுதலாகவும் விரைவாகவும் பயன்தரும் என்பது ஐதீகம்.

பிறப்பின் போதே இறப்பும் நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. என்றாலும் அவரவர் முன் வினைகளுக்கு ஏற்ப இரண்டும் அமையும். அதேசமயம் இறப்புப் பயம் அடிக்கடி நினைவுக்கு வந்து சிலரை வாட்டும். ஆயுள் நிலைக்க வேண்டுமே என்ற அச்சம் தொடர்ந்து வந்து பயமுறுத்தும். அத்தகைய அச்சம் நீங்கவும் ஆயுள் நீடிக்கவும் சொல்ல வேண்டிய மந்திரங்கள் நிறையவே உண்டு.

காலனுக்கு காலனாக மாறி தன் பக்தனைக் காத்தவன் கருணாமூர்த்தியான ஈசன். எனவே மகா பரம்பொருளை வணங்குவது இறப்புப் பயம் நீக்கி மனோபலம் காட்டும் என்பது ஐதீகம்.

"நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களைவாய் நெடுங்களம் மேயவனே"

நெடுங்களம் விளங்கும் ஈசனே! உன் திருவடிகளைப் பணிந்து உன்னையே தஞ்சம் எனப் பற்றிக் கொண்ட மார்க்கண்டேயனுக்காகக் காலனை உதைத்தவனே! உயர்வான உனது திருவடிகளை பூவும் நீரும் கொண்டு வழிபடும் அடியவர்களான எமது துன்பத்தையும் நீக்கி அருள்வாயாக.

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற உயர்வான இந்தப்பதிகத்தைப் பாடி இடப வாகனனை வழிபட அச்சம் விலகி ஆயுள் கூடும். சோமவாரத்தில் அதாவது திங்கட்கிழமைகளில் அருகில் உள்ள சிவாலயம் சென்று வணங்கி வர, வாட்டும் பயம் விலகி வாழ்நாள் நீடிக்கும்.

ஆறுமுகனை வழிபடுவது ஆயுளை வளர்க்கும் என்கிறது கந்தபுராணம்.

"அஞ்சேல் என அபயக்கரம் நீட்டும் முருகனை
சூலம் பிடித்து எம் பாசம் சுழற்றித் தொடர்ந்து வரும்
காலன் தனக்கொரு காலும் அஞ்சேன் கடல் மீதெழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமரன் ஆறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே"

ஆலகால நஞ்சை உண்டு அமரர்களைக் காத்த ஆதி சிவனின் மைந்தனான ஆறுமுகனின் அபயக் கரமும் திருக்கை வேலும் எனக்குத்துணை நிற்கும். எனவே காலனைக் கண்டு ஒருகாலும் நான் அஞ்சமாட்டேன்.

கந்தபுராணத்தில் வரும் எளிமையான இந்தப் பாடலைப்பாடி கந்தனை வணங்கிட கவலையை உண்டாக்கும் இறப்புப் பயம் நீங்கும். குமரன் அருளால் ஆயுள் குறையாது நீடிக்கும்.

செவ்வாய்க்கிழமைகளில் செவ்வேளின் ஆலயம் சென்று வழிபட இறப்புப் பயம் மனதை விட்டு அகலும். ஈசன் காலகாலனாக விளங்கும் திருக்கடவூரில் அவரது இடப்பாகம் அபிராமி என்ற திருநாமத்தோடு உறைகிறாள் ஈஸ்வரி. அவளை வழிபடுவோர் எவரும் ஆயுள் இறுதி குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்கிறார் அபிராமிப்பட்டர்.

"இழைக்கும் வினைவழியே சுடும் காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமனைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பேன் ஓடி வந்தே
அனைத்துயிர்க்கும் தந்தையான ஈசனின் மனம் கவர்ந்த அன்னையே"

எளியேனது முன் வினைகளையொட்டி காலன் எனை அழைக்க வரும்போது நான் தாயே உன் அடைக்கலம் என்று உன்னையே சரணடைவேன் நீ விரைந்து வந்து அஞ்சேல் எனக் கூறிக் காத்திடுக.

அபிராமி அந்தாதியின் 33ஆவது பாடலான இதனை நேரம் கிடைக்கும் போதெல்லாம் சொல்லி அம்பிகையை வணங்கிவர ஆயுள் பலம் கூடும். அச்சம் மனதைவிட்டு ஓடும்.

இத்தகு தெய்வீக அருட்பாடல்களை மனதில் சொல்லிவர வாழ்விலே இறப்புப் பயம் போக்கி வாழும் மகத்தான சூழல் தோன்றும். இந்த இறை துதிகளை எந்நாளும் சொல்லுவோம்! இன்பமே சூழ வாழ்வோமாக!

# தமிழர் தொடர்பில் கரிசனை வேண்டும்...! அலட்சியம் வேண்டாமே..!

இந்த நாட்டின் பூர்வீகக்குடிகளாகத் தமிழர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்குரித்தான கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள்,மொழித் தனித்துவம் அதன் அடையாளம் என்பவற்றின் அடிப்படையிலே சமத்துவம் பெறவேண்டியவர்கள். ஒரு தனித்துவ இனமாக அத்தனை உரித்துக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள். தமது அபிலாசைகளை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், தங்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்கவும், அந்தச் செயல் நிலைகள் முனைப்புப் பெறும்போது, நின்று நிதானித்து அந்த விடயங்களைக் கேள்விக்குட்படுத்தவும் உரித்துடையவர்கள்.இதனை எவரும் மறுத்துவிட முடியாது.

கடந்து வந்த அரசுகளின் விட்டுக் கொடுப்புக்கள் அற்ற போக்குக் களையப்படவேண்டும். அத்தகைய நீண்ட நெடிய அழிவின் பாதைகள் வழியே பயணிக்கின்ற தமிழர்களுக்குச் சரியான தீர்வுகளை வழங்க நல்லாட்சி அரசு முன்வரவேண்டும். இதுவரை காலமும் செய்து வந்த எதேச்சதிகாரத்தையும்,ஏளனப்போக்கையும் தவிர்த்து தமிழர்களின் வேண்டுதல்களையும், கோரிக்கைகளையும் விரைந்து தந்து விட திடசங்கற்பம் பூணவேண்டும். அனுபவத்தின் வழி பலதை இவர் கள் புடம்போட்டுப் பார்க்கவேண்டும். ஒருபோதும் முடியாது என்ற போக்கை இனியும் தொடராது அதிலிருந்து நல்வழிப் படவேண்டும்.

நல்லிணக்கமும் இன சமத்துவமும் நிலைபெற வேண்டுமெனில் இந்த விடயங்கள் தொடர்பிலும் தமிழ் மக்கள் தொடர்பிலும் கரிசனை வேண்டும். அலட்சியம் வேண்டாமே..!

உருவத்தில் சிறியவனாக இருக்கிறான் என்பதற்காக அவனை ஏளனம் செய்யக்கூடாது. அவன் வேறு விடயங்களில் வல்லவனாக இருப்பான் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

மிகப்பெரிய காடு. அங்கே சிங்கம் ஒன்று வசித்து வந்தது.தன்னுடைய பலத்தாலும், தோற்றத்தாலும், கர்ஜனையாலும் காட்டில் வசித்து வந்த அனைத்து மிருகங்களையும் பயமுறுத்தி வந்தது.பயமுறுத்தி வைத்திருந்தது. பயம் காரணமாக எந்தவொரு மிருகமும் சிங்கத்துக்கு அருகில் செல்வதில்லை. சிங்கத்தைக் கண்டால் தூர விலகியே இருந்தன. ஆனாலும் ஈ எங்கும் பறந்து திரிந்தது. பயமின்றிச் சிங்கத்தின் மீது வந்து அமர்ந்தும் கொண்டது. இதன் செயற்பாடுகள் சிங்கத்திடம் கோபத்தை இயல்பாகவே வரவழைத்து விட்டது.கோப மேலீட்டால் சிங்கம் கர்ஜனை செய்தது. உன்னை என் பற்கள் கொண்டு கடித்துக் குதறு வேன், நகங்களால் விறாண்டுவேன், நசுக்கிப் பொசுக்கி விடுவேன் என்றுரைத்தது.

இதனைச் செவிமடுத்திருந்த ஈ பின்வருமாறு பதிலளித்தது. நீ பலசாலியாய் இருக்கலாம்..உன்னைப் பார்த்து காட்டிலுள்ள ஏனைய மிருகங்கள் பயந்து நடுங்கலாம். ஆனால் நான் எதற்கும் அஞ்சமாட்டேன். இன்னும் சொல்லப்போனால் நீ எனக்கு எச்சரித்துச் சொன்னபடியே உனக்கான பாடத்தைப் புகட்டுவேன். உன்னையே நீ பற்களால் கடித்துக் கொள்ளவும், நகங்களால் விறாண்டிக் கொள்ளவும் செய்வேன் என்றது.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சிங்கம் கோபமடைந்தது. உன்னால் முடிந்தால் அதைச் செய் என்று சவாலும் விட்டது. ஈ பறந்து வந்தது. சிங்கத்தின் முதுகில் அமர்ந்து கொண்டு அதைக் கடித்தும்விட்டது. ஈ யின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த சிங்கம் தன் பற்களைக் கொண்டு முயன்றது.ஆனாலும் ஈ பறந்துவிட்டது. ஈ பறந்துவிட சிங்கத்தின் முயற்சிகள் அதற்கே வினையாக முடிந்தன. தன் முதுகைத் தானே கடித்துக் கொண்டது.

ஈ சிங்கத்தின் முகத்தில் அமர்ந்து கொண்டது. அதை விரட்டத் தன் கால் நகங்களால் முயன்றது.இப்போதும் ஈ பறக்க.. சிங்கம் தன் நகங்களால் தன் முகத்தையே விறாண்டிக் கொண்டது. இப்படியே பலதடவைகள் சிங்கத்துக்கும் ஈ க்குமான போராட்டம் தொடர்ந்தது. சிங்கத்தினால் ஈயைப் பிடிக்கவோ நசுக்கவோ முடியவில்லை. இறுதியில் ஈ வென்றது. சிங்கம் அதிக துன்பமடைந்தது. தான் உடலளவில் வீரமாய் இருந்தாலும்.. சிறு ஈ தன்னை இம்சைப்படுத்தி விட் டதே என்ப தனை உணர்ந்து கொண்டது. தன் இயலாமையை எண்ணி வெட் கப்பட்டது.

உருவத்தைக் கண்டு யாரையும் எடை போடக் கூடாது என்பதனை இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். பெரிய தேர் ஓடக் காரணமாய் இருப்பது சிறிய அதன் அச்சாணியே என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதைத்தான் வள்ளுவரும்...

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க் கச்சாணி யன்னார் உடைத்து..! என்றுரைத்துள்ளார்.

ஆக,அரசு இனியும் தமிழர்களைச் சிறுபிள்ளைத் தனமாக எண்ணியபடியே இருந்து விடமுடியாது. பயங்கரவாதம் என்ற நாமம் சூட்டி அவர்களுக்கிருந்த பலத்தை அழித்துவிட்டோம். எதைச் சொன்னாலும், எதைக் கொடுத்தாலும் எதிர்க்கருத் தின்றி அமைதியாக ஏற்றுக் கொள்ளவேண்டும். [illegible] அந்தப் போக்கிலிருந்து [illegible] வரவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிக்க வந்த ஓவியர்

கலைத்துறையில் பல தொழில்நுட்பக் கலைஞர்கள் உள்ளனர். அந்த வரிசையில் ஓவியக் கலையும் ஒன்று. நட்சத்திரங்களை மட்டுமல்லாமல் பட காட்சிகளையும் தத்ரூபமாக வரைந்து இயக்குநர்களுக்கு தருவார்கள் ஓவியர்கள். கமல் ஹாசனைப் பல மாதிரிகளில் ஓவியமாக வரைந்து, அவருக்கே அதை பரிசாக அளித்தவர் ஏ.பி.ஸ்ரீதர். இவர் 'மையம்' படத்தையும் தயாரித்திருக்கிறார். தற்போது 'ஆந்திரா மெஸ்' படத்தில் நடித்து வருகிறார். இவர் வெளிநாடுகளில் பிரபலமாக உள்ள தந்திர ஓவியக்கலையை இந்தியாவுக்குக் கொண்டு வந்தவர்.








**பெப்ரவரி 14 காதலர் தினம்... நவம்பர் 14 குழந்தைகள் தினம்... (சரியாக 10 மாதம் இடைவெளி பாருங்க...யாயாயாய.. யயய.......) மனிதன் எதைச் செய்தாலும் ஒரு காரணமாகவே செய்வான்..**






**தமிழ் ரீச்சர்: "அவள் நடந்து சென்றாள்" இந்த வாக்கியத்தை ஆச்சிரியக்குறியுடன் மாற்றுங்கள் பார்ப்போம்.**

**மாணவன்: "டேய் மச்சான், நிஜமா-டா!"**

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 7 | | | | | 8 |
| | | | | | | | 4 | |
| | 2 | | | | 9 | 5 | | 1 |
| | | | 1 | | | 7 | 8 | |
| 7 | 4 | | | 6 | 2 | 3 | 5 | |
| | | | | | | | | |
| | 6 | 7 | | 4 | | | | |
| | | | | 3 | | | 2 | |
| | 3 | 9 | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 8 |
| 1 | 8 | 9 | 3 | 2 | 6 | 7 | 5 | 4 |
| 3 | 6 | 5 | 7 | 8 | 4 | 1 | 2 | 9 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 8 | 7 | 6 |
| 2 | 7 | 8 | 6 | 3 | 9 | 5 | 4 | 1 |
| 6 | 4 | 1 | 8 | 7 | 5 | 9 | 3 | 2 |
| 3 | 3 | 7 | 2 | 9 | 3 | 6 | 1 | 5 |
| 9 | 5 | 2 | 1 | 6 | 3 | 4 | 8 | 7 |
| 8 | 1 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தமிழ் @vinkasTamil

**கல்யாணம்**
**ஒரு பெண் கடைசியாக அழும் தருணம்**
**ஒரு ஆண் கடைசியாகச் சிரிக்கும் தருணம்**
#நகைச்சுவை


**மேடம்:** நம்பிக்கையுடன் செயற்படுவது அவசியம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய, கடின உழைப்பு தேவைப்படும். மிதமான பணவரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணம் வெளிநடப்பு அறிந்து மேற்கொள்வது நல்லது.


**இடபம்:** எண்ணத்தில் புதுமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். வழக்கு விவகாரத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும்.


**மிதுனம்:** தொடர்பு இல்லாத பணியில் ஈடுபட நேரலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.


**கடகம்:** செயல் நிறைவேற குடும்பத்தினர் உதவுவர். தொழில், வியாபாரம், வளர்ச்சி பெறும். தாராள பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்குவர்.


**சிங்கம்:** உறவினரின் அன்பு கண்டு, மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், சீரான வளர்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். விச ஜந்துக்களிடம் இருந்து விலகுவது நல்லது.




**கன்னி:** பலரும் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில், விற்பனை அதிகரித்து புதிய சாதனை படைப்பீர்கள். வருமானம் திருப்திகரமாகும். ஆரோக்கியம் பலம்பெறும்.


**துலாம்:** உறவினரின் உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணி சிறப்பாக நிறைவேறும். ஆதாயம் பலமடங்கு உயரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.


**விருச்சிகம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறுகளை, தாமதமின்றிச் சரி செய்வது அவசியம். சுமாரான அளவில் வருமானம் இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.


**தனுசு:** முக்கிய பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிலுவைப்பணியை நிறைவேற்றுவது அவசியம். வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.


**மகரம்:** புதிய வாய்ப்பு மூலம் வளர்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.


**கும்பம்:** சாதனை நிகழ்த்தும் விதத்தில் பணியாற்றுவீர்கள். தொழிலில், விற்பனை வியப்பூட்டும் வகையில் அமையும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.


**மீனம்:** நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். வருமானம் சுமாராக இருக்கும். மனைவியின் அன்பும் ஆலோசனையும் கிடைக்கப் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

வைகாசி-29
சனிக்கிழமை – 11.06.2016
திதி: ஸப்தமி பி.இ.04.23 வரை
நட்சத்திரம்: மகம் பி.ப.01.27 வரை
ராகுகாலம்: 08.52-10.22 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை



## கவரிங் நகைகள் வாங்கும் போது



- நாம் எவ்வளவுதான் தங்க நகை வைத்திருந்தாலும், விதவிதமான கவரிங் நகைக்குப் பல நூறுகள் செலவு செய்து வாங்கத்தான் செய்கிறோம். ஆடைக்கு ஏற்ற நிறங்களில் கற்கள் வைத்தும், எனாமல் எனப்படும் நிறச் சேர்ப்பு செய்தும் இவை வருவதால் பெண்களிடையே இதுபோன்ற நகைகளுக்கு அதிக மவுசு உண்டு.
- அப்படி வாங்கிய கவரிங் நகை சில நாள்களில் கறுக்கத் தொடங்கிவிடும். இதனை வாங்கிய கடையில் கொடுக்கவும் முடியாது, நாம் அணிந்து கொள்ளவும் முடியாது. இப்படி வீணாகிப் போவதைத் தடுக்க ஒரு நல்ல திட்டம் உள்ளது.
- புதிதாக கவரிங் நகை வாங்கியவுடன், நிறமில்லாத நெயில் பொலிஷ் வாங்கி அதனை உங்கள் நகை மீது தடவி வைக்கவும்.
- இப்படிச் செய்வதால் நகை தண்ணீரில் பட்டு வெளுத்துப் போவது தவிர்க்கப்படும். எப்பொழுதும் பளிச்சென்று இருக்கும். பொதுவாக தங்க நகைகளைவிட கவரிங் நகைகளை பத்திரமாக பாதுகாத்தால், அதிக நாள்களுக்கு வைத்திருந்து அணிந்து கொள்ளலாம்.
- கவரிங் நகைகளை தங்க நகையுடன் சேர்த்துப் போடாவே கூடாது. இது தங்க நகை யையும் சேர்த்துப் பாழாக்கிவிடும். கவரிங் நகையும் கெட்டுப்போகும். கவரிங் நகைகளை அணிந்து விட்டு எடுத்து வைக்கும் பொழுது அதனை நன்றாக மெல்லிய பருத்தித் துணியால் துடைத்து பெட்டியில் வைக்கவும். இப்படி செய்வதால் கவரிங் நகையில் ஊறி இருக்கும் உங்கள் வியர்வை அகற்றப் படும். நகை கறுக்காமல் இருக்கும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 800 | 1000 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 460 | 300 | 800 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | 600 | – |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | – | – |
| சீலா | 300 | 600 | 400 | 500 | 600 | 300 | – |
| விளை | 650 | 600 | 400 | 500 | 500 | 700 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 450 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 600 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 400 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 250 | 380 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 300 | 250 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 220 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 400 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 150 | 160 | 120 | – | 40 | 80 |
| கத்தரி | 220 | 100 | 240 | 240 | 240 | 200 | 100 | 180 |
| கரட் | 200 | 160 | 160 | 220 | 240 | 250 | 100 | 140 |
| மரவள்ளி | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | 40 | 50 |
| பயிற்றை | 180 | 240 | 240 | 150 | 80–160 | 240 | 150 | 160 |
| பாகல் | 200 | 240 | 240 | 300 | 200–240 | 120 | 120 | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 120 | 1 20 | 100–120 | – | 60 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 100 | 90 | 80 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 160 | 170 | 160 | 200 | 100 | 140 |
| பூசணி | 50 | 50 | 80 | 70 | 80 | 60 | 15 | 80 |
| தக்காளி | 180 | 170 | 240 | 240 | 200 | 240 | 140 | 160 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 | 50 | 80 | 35 | 40 |
| கீரை | 50 | 50 | 50 | 20 | 40–50 | 40 | 25 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30–40 | – | 20 | 12 |
| பச்சை மிளகாய் | 600 | 450 | 700 | 700 | 500–600 | 600 | 400 | 550 |
| புடோல் | 100 | 80 | 100 | 120 | 100–120 | 120 | 30 | 100 |
| கோவா | 180 | 160 | 180 | 180 | 180 | 240 | 90 | 140 |
| வெண்டி | 120 | 120 | 120 | 120 | 200 | 160 | 50 | 60 |
| போஞ்சி | 300 | 280 | 140 | 240 | 240 | 300 | – | 240 |
| லீக்ஸ் | 200 | 100 | 200 | 240 | 240 | 240 | 100 | 180 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 40 | 30 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 110–120 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 200 | 200–240 | 200 | 350 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 | 240 | 280–300 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 170 | – | 160 | – | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 130 | 240 | 160 | 240 | 200 | 150 | 200 |



## உருளைக்கிழங்கு சோமாசி



### தேவையான பொருள்கள்

கோதுமை மா – அரைக் கப்
ரவை – 1 கரண்டி
அப்பச் சோடா – 1 சிட்டிகை
வெண்ணெய் அல்லது எண்ணெய் – 1 கரண்டி
உப்பு – தேவையான அளவு,
சீனி கால்க்கரண்டி
எண்ணெய் – பொரிக்க (தேவையான அளவு)

### உள்ளுடன் செய்ய...

உருளைக்கிழங்கு – 2
முந்திரி – 5
உப்பு – தேவையான அளவு
கறிவேப்பிலை – 2 கரண்டி

### சரக்குப் பொருள்

சிவப்பு மிளகாய் – 3
கறுவாப் பட்டை – 1 துண்டு
சீரகம் – அரைக்கரண்டி
சோம்பு அரைக்கரண்டி

### செய்முறை

உருளைக்கிழங்கை வேக வைத்து, தோல் உரித்து மசித்துக் கொள்ளவும். சரக்குச் சாமான் களை நன்கு வறுத்து பொடி யாக்கிக் கொள்ளவும். அதனு டன் மசித்த உருளைக்கிழங்கை யும் நன்கு கலந்து கொள்ளவும். கோதுமை மா, ரவை, அப்பச் சோடா, எண்ணெய், உப்பு மற் றும் சீனி சேர்த்து பிசைந்து 10 நிமிடம் ஊற வைக்க வேண்டும். மேல் மாவை நீள வாக்கில் இட்டுக் கொள்ளவும். நடுவில் உள்ளுடனை வைத்து மடித்துக் கொள்ளவும். ஓரங்களை தண் ணீர் தொட்டுக் கொண்டு பிரியா மல் சேர்க்கவும். மிதமான சுவாலை யில் பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். இப்போது உருளைக் கிழங்கு சோமாசி தயார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்





## இன்ஸ்டகிராமின் புதிய வசதி

இன்ஸ்டகிராம் செயலியைத் திறக்காமலேயே படங்கள் மற்றும் காணொலிகளைப் பதிவேற்றம் செய்யும் புதிய வசதியை ஐ போன் பயன்பாட்டாளர்களுக்காக இன்ஸ்டகிராம் ஏற்படுத்தியுள்ளது.

முகப் புத்தகம், ருவிட்டர் போன்று பிரபலமான சமூக வலைத்தளமான இன்ஸ்டகிராம் படங்கள் மற்றும் காணொலிகளைப் பதிவேற்றம் செய்வதற்கென்றே தனித்துவமாக உருவாக்கப்பட்டது. அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் மிகவும் பிரபலமான இன்ஸ்டகிராம் சமூக வலைத்தளம் தற்போது இந்தியாவிலும், இலங்கையிலும் மிக வேகமாக பிரபலமாகி வருகிறது.

இந்த நிலையில், ஐ போன் பயன்பாட்டாளர்களை மகிழ்விக்கும் வகையில் புதிய வசதியை இன்ஸ்டகிராம் ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக இன்ஸ்டகிராம் வழியாக படங்களையும், வீடியோக்களையும் பதிவேற்றம் செய்ய அதன் செயலியைத் திறந்து, அதன் வழியாகவே பகிர முடியும். ஆனால் ஐ போன் பயன்பாட்டாளர்கள் செயலியைத் திறக்காமலேயே இனிப் படங்களைப்பகிர முடியும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## நைட் விசன் கமராவுடன் புதிய தொடுதிரைப் பேசி

டேனிஷ் உற்பத்தியாளரான லுமிகோன் டி 3 என்ற தொடுதிரைப் பேசியை அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த தொடுதிரைப் பேசி தற்போது நிறுவனத்தின் வலைத்தளம் வழியாகக் கறுப்பு, ஓரேஞ்சு, தங்கம் மற்றும் வெள்ளை வண்ண வகைகளில் கிடைக்கின்றது. இதில் நீர் மற்றும் தூசு போன்றன உட்செல்லாத வகையில், கடல் தரத்திலான 316 துருப்பிடிக்காத இரும்பு வடிவமைப்பைக் கொண்டுள்ளது.

இதன் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக, இரு அகச் சிவப்பு பிளாஸ்களுடன், 4 மெகாபிக்சல் நைட் வின் கமராவைக் கொண்டுள்ளது. நைட் வின் கமரா கொண்ட உலகின் முதல் தொடுதிரைப் பேசி இதுவாகும்.

# புதிய "இசுறு சிறுவர்" சேமிப்பால் 18 வயதில் 88 லட்சம் கிடைக்கும்

நாட்டின் மிகப் பெரும் தனியார் வங்கியான இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சியின் புதிய இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டத்தின் கீழ், சிறுவர்கள் 18 வயதை அடையும் போது அவர்களது தாய், தந்தையர் பிள்ளைகளுக்கென கஷ்டப்பட்டு சேமித்த பணம் பல லட்சங்களாக அதிகரிக்குமென்பதை அவர்கள் உறுதிப்படுத்தலாம்.

வங்கியின் இரண்டு தசாப்தகால இசுறு கட்டமைப்பிலான சிறுவர் சேமிப்புத் திட்டத்தின் இந்த 6 ஆவது மாற்றத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய இசுறு கணக்கில் இப்பொழுது பயனாளி 18 வயதை அடையும்போது சேமிப்பு 88 லட்சம் ரூபாவாக பெருகியிருக்கும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

சந்தையில் ஒரு முன்னோடி சிறுவர் சேமிப்புத் திட்டமான கொமர்ஷல் வங்கியின் இசுறு சேமிப்பில் மாதாந்த வைப்புத் திட்டம் அல்லது ஒரு ஒட்டு மொத்த தொகை வைப்புத் திட்டம் என்ற இரண்டு விருப்பத் தேர்வுகள் உண்டு. ஒரு பிள்ளைக்கு இசுறு கணக்கை ஆரம்பிக்க விரும்பும் தாய், தந்தையர் அல்லது எந்தஒரு நபரும் இந்த இரண்டு திட்டங்களில் விரும்பியதைத் தெரிவு செய்து கொள்ளலாம்.




இசுறு ஒட்டு மொத்த வைப்புத் திட்டம் முதிர்ச்சி அடையும் போது (பிள்ளை 18 வயதை அடையும்போது) சேர்ந்த தொகை அல்லது உத்தரவாத தொகை, கணக்கு ஆரம்பிக்கப்பட்ட போது பிள்ளையின் வயதைப் பொறுத்து கணக்கிடப்படுகிறது. அதேவேளை இசுறு மாதாந்த சேமிப்புத் திட்டத்திலும் உத்தரவாத தொகை மாதாந்த வைப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியில் தங்கியுள்ளது.

கணக்கு ஆரம்பிக்கப்பட்டபோது பிள்ளையின் வயதுக்கு மேலதிகமாக மாதாந்த வைப்புத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதியும் உத்தரவாதம் செய்யப்பட்ட தொகையும் மாதாந்த வைப்புத் திட்டத்தில் தங்கியுள்ளது.

மாதாந்த வைப்பு விருப்பத் தேர்வின் கீழ் பிறந்த நாளிலிருந்து10 வருடத்துக்கும் இடைப்பட்ட வயதைக் கொண்ட குழந்தைகளுக்கும் இசுறு கணக்கைத் திறக்கலாம். மாதம் 500 ரூபாவின் பெருக்கங்களாக 500 ரூபாவுக்கும் 20,000 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையை 5 அல்லது 10 வருடங்களுக்குச் சேமிப்பதற்குத் தாய் தந்தையர் விரும்பியபடி தீர்மானிக்கலாம்.

பிறந்த ஒரு குழந்தைக்கு 10 வருடகாலச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 20,000 ரூபாவைச் சேமிப்பது என்ற தீர்மானத்துடன் ஆரம்பிக்கப்படும் இசுறு சேமிப்புக் கணக்கில் பிள்ளை 18 வயதாகும்போது 88 லட்சம் ரூபா சேர்ந்திருப்பதற்கான உத்தரவாதம் உண்டு.

கொமர்ஷல் வங்கியின் இசுறு சிறுவர் சேமிப்புதிட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம் என்னவெனில் எதிர்பாராதவிதமாக வைப்பாளரின் அவலச்சாவு சம்பவித்து மாதாந்த வைப்புக்களில் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டாலும் பிள்ளை 18 வயதாகும்போது இறுதி உத்தரவாதத் தொகையை வழங்கும் பொறுப்பை வங்கி ஏற்றுக்கொள்ளும்.

ஒட்டுமொத்த சேமிப்பு வைப்புத் திட்டத்தை விரும்பும் தாய், தந்தை பிள்ளை பிறந்த தினத்திலிருந்து பிள்ளையின் 10 ஆவது பிறந்த தினத்துக்கு முன்னர் எந்தவேளையிலும் 5,000 ரூபாவுக்கும் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் இடைப்பட்ட ஒரு தொகையை வைப்புச் செய்யலாம். பிள்ளை பிறந்தபோது ஒரு மில்லியன் ரூபாவைப்புச் சேமிப்புச் செய்தால், பிள்ளை 18 வயதாகும்போது 57 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை கணக்கு மீதியில் இருப்பதற்கு உத்தரவாதம் உண்டு.

ஒரு நெகிழ்ச்சித் திட்டமான இசுறுவில் தாய், தந்தையர் பிள்ளையின் எதிர்காலத்துக்காகத் தங்களுக்குக் கட்டுப்படியான தொகையைச் சேமிக்கலாம் என்று கொமர்ஷல் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரதிப் பொதுமுகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க தெரிவித்தார். அது ஒரு நீண்ட காலச் சேமிப்புத் திட்டம் என்பதால் நிதிப்பலம், ஸ்திரதன்மை, வங்கியின் மதிப்பு ஆகியன தாய், தந்தையரின் முக்கிய கவனமாகும் என்று முனசிங்க கூறினார். இந்த அம்சங்களில் கொமர்ஷல் வங்கி ஏற்கனவே இலங்கையின் முன்னோடியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டத்தைத் தவிர கொமர்ஷல் வங்கி அருணலு எனப்படும் பிரபல சிறுவர் சேமிப்புக் கணக்கு ஒன்றையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் கணக்குதாரர்களின் கல்வி சாதனைகளுக்கு வெகுமதி வழங்கி வருகிறது.

வணிகம்

தொடர்ந்து 5 வருடங்களாக உலகின் அதி உயர் 1000 வங்கிகளுக்குள் ஒன்றாக இடம்பிடித்துள்ள ஒரேயொரு இலங்கைவங்கியான கொமர்ஷல் வங்கி இலங்கையில் 250 கிளைகளும் 625 காசு இயந்திரங்களையும் (ஏ.ரி.எம்களும்) உள்ள வலையமைப்பைக் கொண்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் இலங்கையில் அதிக பெறுமதியுள்ள தனியார்துறை நிறுவனம் என்றும் வங்கி தரப்படுத்தப்பட்டுள்ளது. (கு)

# டிமோ அக்றி ஏற்பாட்டில் இலங்கையின் மகேந்திரா டிராக்டர் முகவர்கள் மாநாடு

டிமோ நிறுவனத்தின் விவசாய இயந்திரங்கள் விற்பனைப் பிரிவானது அண்மையில் இந்தியாவின் கேரளாவிலுள்ள கொச்சியில் தனது மகேந்திரா டிராக்டர் முகவர்கள் மாநாட்டை நடத்தியிருந்தது.

இலங்கையிலிருந்து 75 இற்கும் மேற்பட்ட மகேந்திரா டிராக்டர் முகவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். கொச்சியிலுள்ள 5 நட்சத்திர ஆடம்பர ஹோட்டலான மரியட் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த மாநாட்டின் மூலமாக டிமோ நிறுவனம் இலங்கைக்கு வெளியில் முதன் முறையாக ஏற்பாடு செய்த நிகழ்வாக அந்த நிறுவனத்தின் விவசாய இயந்திரங்கள் விற்பனைப் பிரிவு சாதனை படைத்துள்ளது.



மேலும் உள்நாட்டிலுள்ள விவசாய துறை சார்ந்த முகவர்களுக்காக இலங்கைக்கு வெளியில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வாகவும் நிச்சயமாக இது அமையும்.

முகவர்களும், டிமோ நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளும் விமானம் மூலமாக கொச்சியை சென்றடைந்து, அழகிய கொச்சி மரியட் ஹோட்டலில் 2 இரவுகளும் 3 பகல் பொழுதுகளும் தங்கியிருந்தனர். மாபெரும் நிகழ்வானது கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஹோட்டலின் பிரதான நிகழ்வு மண்டபத்தில் இடம் பெற்றது.

இலங்கையிலுள்ள மகேந்திரா டிராக்டர் முகவர்கள் டிமோ அக்றி பிரிவின் பணியாளர்கள், டிமோ சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் இந்தியாவின் மகேந்திரா டிராக்டர்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கேரளாவின் பண்டைய கொண்டாட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாமாங்கம் என்ற தொனிப்பொருளில் முகவர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த நிகழ்வும் சிங்கள மொழியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மூன்று பாகங்களைக் கொண்டிருந்தது. பெறுபேற்றுத்திறன் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடையப்பெற்றதன் அடிப்படையில் முகவர்களுக்கான இனங்காணல் அங்கீகாரம், புதிய அர்ஜுன் மற்றும் யுவோ வரிசை டிராக்டர்களின் அறிமுகம் மற்றும் மகேந்திரா டிராக்டர் நடைமுறை வரிசையின் அறிமுகம் என மூன்று பாகங்கள் நிகழ்வில் அடங்கியிருந்தன. புதிய அர்ஜுன் நோவோ ஆனது பல்வேறு வகைப்பட்ட விவசாயத் தேவைகளின் பயன்பாட்டுக்கு வெற்றிகரமாக உதவுவதுடன், புதிய, உயர்-நடுத்தர- குறைந்த இயந்திர பரிமாற்ற முறைமையையும் மேலதிகமான 7 தனித்துவமான வேகங்களைத் தருகின்ற 15எவ்+3ஆர் கியர்களையும் கொண்டுள்ளது. மகேந்திரா யுவோ டிராக்டர்கள் 30-45 குதிரைவலு வரிசையில் கிடைப்பதுடன், உயர் தொழில்நுட்ப கட்டுப்பாட்டுடன் கூடிய வால்வு வடிவமைப்பு மற்றும் 1500 கிலோ பாரம் உயர்த்தும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

டிமோ மற்றும் மகேந்திரா டிராக்டர் நிறுவனத்தின் சார்பில் பல பிரதிநிதிகள் உரையாற்றியிருந்ததுடன், கேரள நடன குழுக்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டி

மக்கள் இருக்கும் இடங்களில் இவ்வாறான ஆயுதக் கிடங்குகளை அமைப்பதால் வரும் பாதிப்பை இதிலிருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வவுனியாவில் நேற்று பத்திரிகையாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட பகுதியில் உள்ள இராணுவ முகாம் தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் பேசியிருக்கின்றேன். இராணுவத்தை முற்றுமுழுதாக அகற்றவேண்டும். இதனை நான் தொடக்கத்தில் இருந்து கூறி வருகின்றேன். ஒரு காலத்தில் இலங்கையின் மீன் தேவையில் மூன்றில் ஒரு பங்கை மயிலிட்டியில் இருந்து வழங்கி வந்தோம்.

ஆனால் தற்போது அதனை முழுமையாக மூடியுள்ளார்கள். இதனை திறக்குமாறு கோரிக்கை விடுத்தபோது, பல காரணங்களைக் கூறிவந்து கடைசியாக ஆயுதக் கிடங்கு அங்கு உள்ளதாகக் காரணம் சொல்லப்பட்டுள்ளது. அதனை மயிலிட்டியில் இருந்து மாற்றுமாறு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவுக்கு நான் கூறியிருந்தேன். அதற்குச் சில காலம் எடுக்கும் என்று ஒரு மாதத்துக்கு முன்னர் சொல்லியிருந்தார்.

கொஸ்கம போன்று இங்கு நடந்துவிட்டால், எங்கள் இடங்கள் எல்லாம் பாழாய்ப் போய்விடும். இவ்வாறு நடந்தது வருந்தத்தக்கது. இருப்பினும் எங்களுக்கு நல்லதொரு படிப்பினை. மக்கள் இருக்கும் இடங்களில் இவ்வாறான ஆயுதக் கிடங்குகளை வைப்பதனால் வரும் பாதிப்பை இதில் இருந்து நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

என்னவாக இருந்தாலும் ஆயுதக் கிடங்கை மயிலிட்டியில் வைத்துக் கொண்டு எங்களுக்கு உரிய இயற்கையான துறைமுகத்தை செயற்பட விடாமல் வைத்திருப்பது அநியாயமானது. ஆகவே இதற்கு நாம் எங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றோம் - என்றார். (த-வ-5-402)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பவதி பத்மநாதன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி பத்மநாதன் 07.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம்- பவளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி -மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் செல்வராசா, துரைராசா(கனடா), தவராசா (ஜேர்மனி), திலகவதி, புனிதவதி, பகவதி (கனடா), உமா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரவிந்தன் (கனடா), ஆதவன் (மஸ்கன்ஸ் Ltd) ஆகியோரின் அன்புத் தாயாரும் லாவன்யா (கனடா), ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அவினாஷின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.06.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் C.C.T.M.S வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு. (j/2006) (12.17.18)

தகவல்:
மகன்.

077 923 8998

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி (பூமணி) கனகராஜா



கொக்குவில் மேற்கு, பொன்னையா லேனைப் பிறப்பிடமாகவும் இல.12, சேர்ச்லேன் , கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (பூமணி) கனகராஜா 07.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா.கனகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நா.கமலாட்சி, க.வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரியும், மஞ்சுளா, வசந்தி, (ஓய்வுநிலை ஆசிரியை - யா/கொ.ஸ்தான சீ.சீ), சண்முகாதேவி, ஆனந்தகுமார ராஜா (சுவிஸ்), சாந்தினி (சுவிஸ்), மாலினி (ஆசிரியை - யா/பெரியபுலம் ம.வி), முகுந்தன் (சுவிஸ்), இராகுலன் ஆகியோரின் அன்புத் தாயும், நவரத்தினராசா, காந்தராசா (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - இலங்கை ரெலிகொம்), பரமானந்தம், சூரியகலா (சுவிஸ்), பாலகுமா்ர் (சுவிஸ்), தர்மானந்தசிவம் (ஓய்வு நிலை தொழில் வழிகாட்டல் அதிகாரி யாழ். வலயம்), சுபாசினி (சுவிஸ்), ஜெயவதனா ஆகியோரின் அன்பு மாமியும், சுகந்தன், மயூரன், சுகிர்தா, சுஜாதா (பிரான்ஸ்), ஆதித்தன் (அபுதாபி), திவாகர் (தபாலதிபர் - பூநகரி), சுதர்சன் (தொழில் நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்), பிரணவதாசன், சங்கீர்த்தன் (கல்வியியற்கல்லூரி - அட்டாளச் சேனை), கானப்பிரியா, நந்தகோபன், நிதர்சன் (சுவிஸ்), அனந்தா (சுவிஸ்), கார்ணிகா (சுவிஸ்), ஞானப்பிரியா (சுவிஸ்), யதார்த்தன் (களனிப் பல்கலைக்கழகம்), நவீனன், நித்திலன், சுயானி (சுவிஸ்), முபிதா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், நிரோஜன், நிலக்சன், நிதுசன், கஜானன் (பிரான்ஸ்), அபிஷா (சுவிஸ்), றியா எமிலியா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, சேர்ச் லேன்,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில். (ஜே. 2009) (13.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

தர்மா - 077 273 0773, மாலினி - 077 181 2280

## மரண அறிவித்தல்

### கந்தையா மாணிக்கவாசகர் (குட்டித்தம்பி)

(தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இந்து இளைஞர் சங்கத் தொண்டர்)



கம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் முதலாம் ஒழுங்கை, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மாணிக்கவாசகர் (குட்டித்தம்பி) 07.06.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதேவன்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - ரத்தினம் பொன்னுப்பிள்ளை (விவாகப்பதிவாளர்) தம்பதிகளின் மருமகனும், நடேஸ்வரியின் அன்புக் கணவரும், டுபாஜினி (லண்டன்), சுபாஜினி (லண்டன்), உதயரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராசா (லண்டன்), சிவரூபன் (லண்டன்), ஷாஜினி (ஆசிரியை - ஜெயந்தினி முன்பள்ளி) ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும், ஆரணன், டனோசன், தர்நிகா, டிஸ்ணு, டினுஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், சின்னத்துரை, சின்னம்மா மற்றும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தங்கம்மா, அன்னம்மா, வைரமுத்து, கார்த்திகேசு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் சத்தியலட்சுமி, பராசக்தி, ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம்.


தகவல்:
குடும்பத்தினர்.

(N/66) (11,17)
077 167 3940, 076 770 4939

### சரவணமுத்து குமாரசாமி

(ஓய்வுபெற்ற சாரதி -இ.போ.ச )

பிறப்பு
18 . 03 . 1938



இறப்பு
07 . 06 . 2016

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கடவைப்புலம், சுன்னாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து குமாரசாமி 07.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, கௌரிதேவி(லண்டன்), சதீஸ்குமார்(வலி தெற்கு பிரதேச சபை சுன்னாகம்), சிறிக்குமார்(லண்டன்), ரவிக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரன், தவராசா(லண்டன்),மேகனா, ஜமுத்திரா(லண்டன்), லக்ஸிமேரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அன்னேஸ்வரி மற்றும் தங்கலக்சுமி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற அருமைநாயகம் மற்றும் சந்திரநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பாலசிங்கம், செல்வராசா மற்றும் சண்முகநாதன், சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும் சஜந்தன், கஜானி, கிசோன், கார்த்திகா, கீர்த்திகா, லவன், லாவண்யா, இன்பராஜ், பவித்திரா, அருளினி, விபுசன், பிரணவன், றொசான்,யரிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் (கடவைப்புலம் சுன்னாகம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடவைப்புலம், சுன்னாகம். (j/2008) (12.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 078 5288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்டச்

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். வவுனியாவிலுள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில், நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை வருவதற்கு முன்னிருந்த காலம் வித்தியாசமானது. இப்பொழுது மக்களே மக்களை ஆளும் காலம். நாங்கள் யாவரும் எமது மக்கள் சார்பில் கடமையாற்றுகின்றோம். இதனை மறக்கக் கூடாது. மக்கள் என்று கூறும் போது, உங்கள் ஒவ்வொருவரினதும் குடும்பங்களும் உற்றார் உறவினர்களுங் கூட அடங் குவர்.

எங்கோ இருக்கும் மத்திக்கோ, சுயநலத்துடன் எம்மை அண்டப் பார்க்கும் மத்தியின் அமைச்சர்களுக்கோ, மற் றையவர்களுக்கோ, நாங்கள் ஜால்ரா தாளம் போட வேண்டிய காலத்தை இப்பொழுது தாண்டிவிட்டோம். வெகுவிரைவில் மாவட்டச் செயலாளர்கள் கூட எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட இருக்கின்றார்கள். எமது மக்களுக்கு எது நன்மை பயக்கும், மத்தியின் எந்தெந்த உள்ளீடல்கள் எமக்குத் தீமை பயக்கும் என்பதை எல்லாம் யாவரும் நன்கு ஆராய்ந்து, உணர்ந்து செயற்பட வேண்டிய காலம் இது–என்றார். (த–வ–5)

## நாடாளுமன்றில்

வேண்டும். பொது நிதி தொடர்பான முழுப் பொறுப்பையும் நாடாளுமன்றம் ஏற்க வேண்டும். ஒவ்வொரு சதமும் மக் களின் தேவைக்காகச் செலவிடப்பட வேண்டுமே தவிர தனிப்பட்ட தேவைக்காகச் செலவிடப் படக்கூடாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகச் சமர்ப் பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நேற்று விவாதம் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர், நாட்டின் நிதிச் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற பெரிய செலவுகள் தற்போது வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் பொது நிதி தொடர்பில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

பொது நிதியைத் தனிப்பட்ட விடயங்களுக்காகப் பயன் படுத்தக் கூடாது. பொது நிதி மக்களுக்குச் சொந்தமானது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடப் பட்டுள்ள சில பெறுமதியான விழுமியங்களை நாம் மதிக்கின்றோம். இருப்பினும் இதற்கு நாம் ஒத்துப்போக முடியாது.

ஒவ்வொரு சதமும் மக்களின் தேவைக்காகச் செலவிடப் பட வேண்டுமே தவிர, தனிப்பட்ட தேவைக்காகச் செல விடப்படக் கூடாது. பொது நிதி தொடர்பில் தனது கடமையைச் செய்வதற்கு நாடாளுமன்றம் கடமைப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செல்லும் இடமெல்லாம் அவருக்கு மரியாதை கிடைக்கின்றது. புதிய அரசின் கொள்கைகள் அணுகுமுறைகள், நாட்டில் சக ல மக்களையும் ஒன்றாக இணைக்க ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளாலேயே, அவருக்குச் சர்வதேசத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண் டும். அதுவே எமக் குள்ள பொறுப் பாகும் – என்றார். (த–வ–5)

## மகிந்த

வுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் ததாவது:

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக நம் பிக் கையில்லாப் பிரே ரணை கொண்டு வருவதற்கு நாட்டில் உள்ள நல்லாட்சியே காரணம். இந்த நாட்டிலுள்ள சட்டங்களை மீறி, நாடாளுமன்ற அதிகாரங்கள், சிறப் புரிமைகளை மீறி நாடாளுமன்றத்துக்குத் தெரியாமல், அங்கீகாரம் பெறாமல் 1.2 ட்ரில்லியன் வெளிநாட்டுக் கடனைப் பெற்றதற்காக முன்னாள் ஜனாதிபதியும் அப்போதைய நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவே நம்பிக் கையில்லாப் பிரே ரணையைக் கொண்டு வந்திருக்கவேண்டும்.

இந்த வெளிநாட்டுக் கடன் தொடர்பில் நிதி தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அறிக்கை கோரவுள்ளேன். நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மகிந்த ராஜபக்ச ஏன் கையெழுத் திடவில்லை? அவரால் இந்த விவாதத்தில் பாங்கேற்று எமது கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியுமா என்று சவால் விடுக்கின்றேன்.

நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறியதற் காகத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள மகிந்த ராஜபக்சவை ஒரு வார காலத்துக்கு இடைநிறுத்தி, உகண்டாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் – என்றார். (த–வ–5)

## இராணுவம்

களை எடுத்துள்ளனர். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அசம்பாவிதங்கள் இராணுவம் இருப்பதால் தான் ஏற்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் வடக்கு மாகாணத்தை விட்டுப் போய்விட்டால், பொலிஸார் எமது பாதுகாப்பைப் பார்த்துக் கொள்வார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன்.

வவுனியாவிலுள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில், வவுனியா – முல்லைத்தீவு – மன்னார் மாவட்டங்களுக்கான துறைசார் கூட்டம் நேற்று இடம் பெற்றது. இதில் கலந்துகொண்ட போதே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:–

இராணுவத்துக்குப் பயந்து, காடுகளையோ, வீடுகளையோ, காணிகளையோ அவர்களிடம் கையளித்தமையால், அது நீண்ட காலப் பாதிப்பை எமது மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதனை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். காணி களைக் கையேற் கும் சட்டத்தின் கீழ், பொது நோக்கத்துக் காகக் காணிகளைச் சுவீகரிக்கலாம் என் பது இராணுவ முகாம் கட்டுவதற் கும் முடியும் என்று சில அலுவலர்கள் தீர்மானித்து, போர் முடிந்த பின்னர் கூட இராணுவம் கேட்டவாறே அவற்றைக் கொடுத்தும் வந்துள்ளனர்.

அதனால் அவர்களுக்கு இராணுவத்தினரின் தோழமையும் உதவிகளும் கிடைத்தது உண்மைதான். ஆனால் அவ்வாறு செய்ததால், நாம் எமது மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டோம் என்பதை மறக்கக் கூடாது.

இப்பொழுது வரும் போதுதான் பத்திரிகையில், இராணுவப் பேச்சாளர் ஜயநாத் ஜயவீர இராணுவத்தை வடக்கு மாகாணத்தில் இருந்து அகற்றி னால் அசம்பாவிதங்கள் நடை பெறும் என்று கூறியிருப்பதைப் பார்த் தேன். வடக்கு மாகாணத்தில் யாரால் அசம்பாவிதங்கள் ஏற்படும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் என்று தெரிய வில்லை. இராணுவம் போர் முடிந்து 7 வருடங்களின் பின்னர் இங்கு தரித்து நிற்பதே எமது பிரச்சினை. எங்கள் காணிகளை எடுத்துள்ளனர். வீடுகளை எடுத்துள்ளனர். வளங்களைப் பாவிக்கின்றனர். வணிகத் தொழில்களை எடுத்துள்ளனர். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

அசம்பாவிதங்கள் இராணுவம் இருப்பதால்தான் ஏற்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் வடக்கு மாகாணத்தைவிட்டுப் போய் விட்டால், பொலிஸார் எமது பாது காப்பைப் பார்த்துக் கொள்வார்கள். அசம் பாவிதங்களும் நடைபெறமாட்டாது என்ற கருத்தை இங்குகூற விரும்புகின்றேன். எமது அலுவலர்களில் சிலர் இராணு வத்துக்குப் பயந்து தமது முறையான சட்டரீதியான செயற்பாடுகளில் ஈடுபடாது, எமக்குப் பாதகமான முறையில் நடந்து கொள்வது வரவேற்கத்தக்கதல்ல.

உங்கள் ஒவ்வொருவரின் பழைய கால நடைமுறைகள், உங்கள் பழைய நட்புக்கள், நேயங்கள், குறைபாடுகள் யாவையும் அப்போதைக்கப்போது எமக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றை வைத்து உங்களைப் பழிவாங்கவோ, இம்சைப்படுத்தவோ நாங்கள் முனையவில்லை. புதிய சூழலுக்கு ஏற்ப உங்களை மாற்றி, மக்கள் சார்பாக நடந்து கொள்ளுங்கள் என்றும், பலவிதமான ஊழல்களுக்கு நீங்கள் பலியாகாதீர்கள் என் றுமே நாங்கள் கூறிவந்துள்ளோம். அதையே இப் பொழுதும் கூறி, தயவு செய்து உங்கள் கடமைகளிலும் மக்கள் நலனிலும் தகுந்த சிரத்தையும் ஊக்கமும் உற்சாகமும் காட்டுங்கள் – என்றார். (த–வ–5)

## நிதி அமைச்சருக்கு

முன்னணியினரும் வாக்களித்தனர். பிரேரணைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன வாக்களித்தன. பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பைப் புறக்கணித்தது. முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச விவாதத்திலும், வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளவில்லை.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்து மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன உரை யாற்றினார். வரவு–செலவு திட்டத்தைச் சமர்ப்பித்தபோது, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பொருளாதாரம் தொடர்பாகத் தவறான புள்ளி விவரங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார் என்று குற்றஞ்சுமத்தினார்.

தற்போது அரச நிதி நிர்வாகத்தில் முறைகேடுகள் இடம் பெற்று வருகின்றன. அத்தியாவசியப் பொருள்கள் மீது அதிக வரி விதிப்பதன் மூலம் நிதி அமைச்சர் பொது மக்களை மேலும் சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நிதி அமைச்சர் மீது நாடாளுமன்றம் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கப்பட்டது. ஆதலால் கருணாநாயக்க தொடர்ந்து அமைச்சர் பதவி வகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார். இதன் பின்னர் நம்பிக்கையில் லாத் தீர்மானம் மீதான விவாதம் சபையில் இடம்பெற்றது. விவாதம் முடிந்த பின்னர் மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக் கப்பட்டது.

பெயர்கூறி வாக்கெடுப்பை நடத்துமாறு தினேஷ் குணவர்த்தன கோரினார். அப்படியே வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. 94 மேலதிக வாக்குகளினால் தோல்வியைத் தழுவியது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வாக்கெடுப்பின் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர், ஆளும் கட்சி உறுப்பினர்கள் வெற்றிக்களிப்பில் கோசங்கள் எழுப்பினர். மகிந்த அணியினரைக் கிண்டல் செய்தனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் உட்பட 28 பேர் நேற்றைய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த–வ–5)

**HOTAL VACANCIES-JAFFNA**
**WALK IN INTERVIEW**

**Receptionists**
(Should be able to speak English & work in Computer in English)
**Accounts Clerk**
(Should be able to speak English & work in Computer in English)
**Stores Clerk**
(Should be able to speak English & work in Computer in English)
**Room Boys**
(Should be able to speak English)

The Successful candidate will be rewarded with attractive remuneration package.
WALK IN INTERVIEW ON 11th June 2016
FROM 10.00 AM TO 3.00PM
PLEASE COME ALONG WITH YOUR CV, CERTIFICATES & NIC COPY
TO
The Director
Jaffna Heritage Hotels Pvt Ltd.
195 Temple Road,Nallur,Jaffna.
Email-gmstpholdingsleisure@gmail.com
021 222 2424

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்**

வட்டாரம் : 04
ஆதன இலக்கம் : 75 (புதிய இலக்கம்)
யாழ் மானிப்பாய் வீதி (பந்தியடி ஒழுங்கை)
கிராம சேவையாளர் பிரிவு : J/130 சுதுமலை

வட்டாரம் 04 யாழ் மானிப்பாய் வீதி (பந்தியடி ஒழுங்கை) ஆதன இலக்கம் 75 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. வலி.தென்மேற்கு பிரதேச செயலகம். மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலையிறை 'சேவன் திடல்' என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 15.8 கொண்ட) இவ்வாதனமானது சுதுமலை தெற்கைச் சேர்ந்த செல்லத்தம்பி குணசேகரம் பெண் பற்றிமா குணசேகரம் ஆகிய இவர்களால் அதேயிடத்தைச் சேர்ந்த இவர்களின் மகன் குணசேகரம் ஜெமல்ராஜ் என்பவருக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.அபர்ணா ஜனார்த்தன் அவர்கள் முகதாவில் 418 ஆம் இலக்க 2016.05.05 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.எஸ். பாலேந்திரன் அவர்களால வரையப்பட்ட 2016/03/145 ஆம் இலக்க 2016. 05.29 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது 'சேவன் திடல் நிலப்பரப்பு 01 குளி 12.18' கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது குணசேகரம் ஜெமல்ராஜ் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 075 999 3769

**தவறிவிட்டது**
உருத்திரபுரேஸ்வரன் ஆகிய எனது 612163030V இலக்கமுடைய தே.அ.அ, சாரதி அனுமதிப்பத்திரம் மூன்று வாகனங்களின் .இன்சூரன்ஸ். ரக்ஸ் அடங்கிய பேஸ் அளவெட்டியிலிருந்து மருதனார்மடம் கைதடி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 345 9984

**பொருளியற் கல்லூரி**
**K.K.S றோட்-இணுவில்**
**I.C.T**
Mr தேவதர்ஷன்
B.sc (Hons) Spl.in Computer Science
சனி-ஞாயிறு புதிய பிரிவுகள்
A/L 2018- 4.00 P.m
A/L 2017-5.00 P.m
Note: BARATHY
சித்தன் கேணியில்
A/L 2018 செவ்வாய்-வெள்ளி
5.00 P.m

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைக்குண்டுத் தாக்குதலில் மூவர் சாவு

கொழும்பு, ஜுன் 10

கொழும்பின் புறநகர்ப் பகுதியான தலங்கம பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 9 வயதான சிறுமி காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,

உயிரிழந்த பெண்களில் ஒருவருக்கு 41 வயது. அவர் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் 54 வயதுடைய ஆண் ஒருவர் தவறான உறவில் ஈடுபட வற்புறுத்தியுள்ளார். இதற்கு அந்தப் பெண் மறுப்புத் தெரி வித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இதன்போது 41 வயதுப் பெண்ணுடன் 74 வயதுப் பெண்ணும் இருந்துள்ளார். கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவ இடத்திலேயே 74 வயதுப் பெண்ணும், 54 வயது ஆணும் உயிரிழந்துள்ளனர். 41 வயதான பெண் கடுமையான காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(த-5)

## இந்திய புடவை வியாபாரி யாழ்ப்பாணத்தில் கைது

சுற்றுலா விசாவில் வந்து புடவைகள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இந்தியர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழகம், சென்னையைச் சேர்ந்த ஒருவர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

வருகை தந்தவர் யாழ். பாசையூர் பகுதியில் உள்ள வீடுகளில் புடவை விற்பனையில் ஈடுபட்டுள்ளார். இதன்போது பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து இரண்டு பொதிகளில் சுடிதார் துணிகள் உள்ளிட்ட புடவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நிலையில் குறித்த இந்திய வியாபாரியை யாழ். நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,106)

## சங்கிலி கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 10

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் பென்ரனுடன் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதனை உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குறித்த சங்கிலி யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)

### 18ஆம் திகதி

உரை நிகழ்த்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மோடி உரையாற்றுவார்.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட 145 மில்லியன் ரூபா நிதியில் துரையப்பா விளையாட்டரங்கு புனரமைக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைக்கவுள்ளார். அன்றைய தினம் சர்வதேச யோகா தினமும் இடம்பெறவுள்ளது. யோகா தினத்தை முன்னிட்டு துரையப்பா அரங்கில் இடம்பெறும் நிகழ்வில் 8 ஆயிரம் மாணவ - மாணவியர் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விலேயே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவிலிருந்து கொண்டு செய்மதித் தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றுவார்.

(த-வ-5-101)

### 5 வயதுச்

கொக்கு விலைச் சேர்ந்த தேவராஜா கீதப்பிரியன் (வயது-5) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

கடந்த 7ஆம் திகதி சிறுவன் சுவாசிக்க முடியாது திணறியுள்ளான். அதனால் அவனைப் பெற்றோர், தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர். யாழ். போதனா வைத்தியசாலைக் குக் கொண்டு செல்லுமாறு அங்கு கூறப்பட்டது.

மறுநாள் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தான்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் பின்னர் சிறுவனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சிறுவனின் வலது பக்க நெஞ்சறையில் சுவாசக் குழாய்க்கு வெளியே - சுவாசக்குழாய்க்கு அருகே ஒரு விதமான திரவக் கட்டி வளர்ந்து வந்துள்ளது. அது பெரிதாகி சுவாசப்பையை அமுக்கிவந்துள்ளது. அந்த நீர்க்கட்டி அமுக்கியதனால் சுவாசிக்க முடியாது சிறுவன் உயிரிழந்திருக்கலாம் என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். பரிசோதனையின் பின்னர் சடலம் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த-வ-4)

### நெல்சிப்

முன்வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இது தொடர்பிலான விசாரணைகள் பல்வேறு தரப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் பளிகக்காரவின் பணிப்பின் பேரில், தலைமைச் செயலாளரினால் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணைக்குழு, 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

நெல்சிப் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது, 6 வகையிலான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. மோசடியான கொடுப்பனவு, மேலதிகப் கொடுப்பனவு, தற்காலிக நிதிக்கையாடல், மேலதிக பட்டியலில் வீதங்கள் மாறுபட்டமை, நட்ட அறவீடு செய்யப்படாமை, நட்ட அறவீடு செய்யப்படாததன் மீது நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற விடயங்கள் முறை கேடுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டன.

இவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகளையும், அத்துடன் தாபனக் கோவை விதிகளுக்கு அமைவான ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு விசாரணைக் குழு பரிந்துரைந்தது. திட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் முதலில் விளக்கம் கோரப்பட்டிருந்தது. இதற்கு நெல்சிப் திட்டத்தை முன்னெடுத்த அதிகாரிகள் பதில் வழங்கியிருந்தனர். இந்தப் பதில்கள் சட்ட உத்தியோகத்தர் மூலம் பரிசீலிக்கப்பட்டன.

இதன் பின்னர், நெல்சிப் திட்டத்தில் நிதிக் கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய இன்னும் சில அலுவலர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

(த-வ-5-101).

### இரணைமடு

பேசினோம்.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்குக்குடிதண்ணீரைக்கொண்டு செல்லும் திட்டத்தைக் கைவிடும் எண்ணம் அரசுக்குக் கிடையாது. இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியே நிதியுதவி அளித்தது. எனவே ஓர் இடைக்காலத் தீர்வாகக் கடல் நீரை குடிதண்ணீராக்கும் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு முன்னெடுக்கவுள்ளளோம்.

இதில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் கடல் பகுதியிலுள்ள மீனவர்கள் குறித்தும் நாம் அக்கறை செலுத்துகின்றோம். இந்த திட்டத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்த சுற்றாடல் அறிக்கையைப்பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்குக் குடிதண்ணீரைக் கொண்டு செல்லும் திட்டத்துக்குக் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இவர்களின் எதிர்ப்பையும் நாம் கவனத்தில் எடுத்துள்ளோம் - என்றார்.

(த-வ-5)

### கடமை

நாடுவதும் தவிர்க்க முடியாததாகிப் போய்விடும் என்று எச்சரித்துள்ளனர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் அதிபர் சேவை தரம் 3 பயிற்சியாளர்கள் 54 பேர் கையொப்பமிட்டு செய்திக்குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளனர்.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அதிபர் சேவைக்கு வடக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட 398 பேருக்குமான பயிற்சி[illegible]ரீதியாகத் தரப்படுத்[illegible] வடக்கு மாகாணத்தில் 8 பயிற்சி நிலையங்களில் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

பயிற்சியின் பின் பொருத்தமான பாடசாலைகள் வழங்கப்பட வேண்டும். இதில் வலயக் கல்வி அலுவலகங்கள் பாரபட்சமாகச் செயற்படுவதோடு, சில வலயங்களில் அதிபர்களிடம் எந்தவிதமான விருப்பத் தெரிவுகளும் கேட்கப்படாமல் பாடசாலைகள் ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்து செயலாளர் ஊடாக அமைச்சுக்கு அனுப்புவதற்கு அவசரமாக முடிவெடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

நியமனம் பெறுகின்ற தரம் 3 அதிபர்களின் சேவை மூப்பு, வதிவிடம், துணையின் தொழில்நிலை, எவையும் இது விடயத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. மேலும், சிலருக்கு அதிபர் பதவியும், சிலருக்கு பிரதி அதிபர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. ஒரே வலயத்தில் வெற்றிடம் உள்ளபோதிலும், ஒரே சேவையில் உள்ளீர்க்கப்பட்டவர்களை விருப்பத்துக்கு மாறாக வெவ்வேறு பதவி நிலைகளில் அமர்த்துவது எந்தவகையில் நியாயமாகும்?

கடமை நிறைவேற்றும் அதிபர்களைக் காப்பாற்றுவதற்காக, பதவிவழி வந்தவர்களை ஓரம்கட்டலாமா? அத்துடன் இந்தப் பாடசாலை நியமனங்கள் ஒரு தற்காலிக ஏற்பாடு என்றே மேலதிகாரிகள் சிலர் தெரிவிக்கும் நிலையில், எமது உண்மையான சேவை நிலையம் எது என்பதையும், அது எப்போது கிடைக்கும் என்பதையும் கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பத்திரிகை வாயிலாகத் தெரியப்படுத்தினால் உதவியாக அமையும். செய்வார்களா?

நிரல் கல்வி அமைச்சின் நியமனத்தில் மாகாண சபையின் அரசியல் தலையீடுகளும் வேண்டத்தகாத வகையில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு நீதியான, சரியான தீர்வுகள் கிடைக்காத பட்சத்தில், எம்மில் பலர் வீதியில் இறங்கிப் போராடுவதும், நீதிமன்றத்தை நாடுவதும் தவிர்க்க முடியாததாகிப் போய்விடும் என்பதை வேதனையோடு கூறிக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (த-வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி

தோற்றம்
24 . 01 . 1923



மறைவு
09 . 06 . 2016

மல்லாகம் பங்களா ஒழுங்கை 'இந்திரப் பிரஸ்த்தத்தைப்' பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி நேற்று (09.06.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் (வித்தியாதரிசி-கொழும்பு) மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அம்பலவாணர் (V.C Charman-Uduvil) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லப்பா (மனேஜர் செல்லப்பா-விக்டோரியா கொலேஜ்-சுழிபுரம்) தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வலக்ஷ்மி (சுபத்தி-லண்டன்-முன்னாள் யாழ்/இராமநாதன் நுண்கலைப் பீட நடன விரிவுரையாளர்), காலஞ்சென்ற கனகலக்ஷ்மி (அசோ) மற்றும் கலாநிதி ரட்னே(நெப்போ-அமெரிக்கா-முன்னாள் யாழ் பல்கலைக்கழக விலங்கியல் விரிவுரையாளர்), ரட்ணகுமார் (வில்லோ-கணக்காளர்-கனடா), ரட்ணபாலா (விஜி-கணக்காளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராமகிருஷ்ணன், சங்கரலிங்கம், வினோதினி, ஜெயந்தி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஜெகநாதன் மற்றும் ராமநாதன் (லண்டன்), யோகநாதன், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2016) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

001 905 501 8512- (கனடா)
021 3007781, 077 5983189,
071 9400706

தகவல்: திருமதி.இ.பாலசிங்கம்
(ஓய்வு பெற்ற நூலகர், பொது நூலகம், சுன்னாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வந்தனர் தரங்க, மகரூவ்




ஒருநாள் ஆட்டங்களுக்கான இலங்கை அணியில் தரங்க, மகரூப் போன்ற அனுபவ வீரர்கள் சிலர் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிந்தவுடன் இலங்கை அயர்லாந்துடன் இரு ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்காகவே இவர்கள் மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். தரங்க, மகரூவ் தவிர தனுஸ்க குணதிலக, சீக்குகே பிரசன்ன, ரண்டிவ் ஆகியோரும் அணியில் இடம்பிடித்துள்ளனர். (ம)

## டோனி 9000



இந்திய அணித்தலைவரான டோனி சிம்பாப்வேக்கு எதிரான தொடரில், ஒருநாள் ஆட்டங்களில் 9 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டுவதற்கு வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.
இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது.
இதுவரை 275 ஆட்டங்களில் விளையாடியுள்ள டோனி 8 ஆயிரத்து 918 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 9 ஆயிரம் ஓட்டங்களைப் பெற அவருக்கு இன்னும் 82 ஓட்டங்களே தேவைப்படுகின்றன. எனவே சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் டோனி குறித்த மைல் கல்லை அடைய அதிகம் வாய்ப்பிருப்பதாகவே கருதப்படுகிறது. (ம)



# மெல்டோனியப் பாவனை செரபோவாவுக்குத் தடை

மெல்டோனியம் என்ற மருந்தைப் பயன்படுத்தியமைக்காக நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை செரபோவாவுக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின்போது வீரர், வீராங்கனைகளிடத்தில் பெறப்பட்ட மாதிரிகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் செரபோவா மெல்டோனியத்தைப் பயன்படுத்தியிருப்பது வெளிப்பட்டது. இரண்டாம் கட்டப் பரிசோதனையிலும் அது உறுதியானதால் மார்ச் மாதத்திலிருந்து அவர் மீது இடைக்காலத் தடைவிதிக்கப்பட்டது. இங்கிலாந்தில், தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவருக்கு இரு வருடங்கள் தடை விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
ரென்னிஸ் உலகில், ஊக்கமருந்தைப் பயன்படுத்தினால் நான்கு வருடங்கள் தடை விதிக்கப்படும் என்பது விதி. ஆனால் செரபோவா விடயத்தில் சிக்கல்கள் மேல் சிக்கல்கள் இருந்தன. ஏனெனில் மெல்டோனியம் கடந்த வருடத்தின் இறுதி நாள் வரை தடை செய்யப்பட்ட மருந்து அல்ல. சில நோய்களுக்கான நிவாரணியாகவும் அது பயன்படுவதால் விளையாட்டு உலகில் அது அனுமதிக்கப்பட்டே இருந்தது.
இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்தே மெல்டோனியம் தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. செரபோவா மெல்டோனியத்தைப் பயன்படுத்தியதாக அறியப்பட்டது ஜனவரி 26ஆம் திகதியே. ஆனால் அவர் எப்போது குறித்த மருந்தைப் பயன்படுத்தினார் என்பதில் இன்றுவரை துல்லியத்தன்மையுடைய தகவல்கள் இல்லை. அதாவது மெல்டோனியம் ஒருவருடைய உடலில் எவ்வளவு காலம் நிலைத்து இருக்கும் என்று இன்று வரை மருத்துவர்களால் உறுதியாகக் கூற முடியவில்லை. இதனால் செரபோவா, தான் கடந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னரே குறித்த மருந்தைப் பயன்படுத்தியதாகவும் இந்த வருடம் அதன் தாக்கம் தனது உடலில் இருப்பதற்குத் தான் பொறுப்பேற்க முடியாது என்றும் வாதிட்டு வந்தார். எனவே அவரின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு நான்கு வருடங்களுக்கு பதிலாக இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இருப்பினும் இந்தத் தடையை எதிர்த்து மேல் முறையீடு செய்யவுள்ளதாக செரபோவாவின் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## லோட்ஸ் மைதானத்தில் ஆமிருக்கு எதிர்ப்புண்டு

### புரோட் தெரிவிப்பு

இங்கிலாந்துக்கு டெஸ்ட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியில் ஆமிர் இடம்பிடித்துள்ள நிலையில், லோட்ஸ் மைதானத்தில் அவருக்கு எதிர்ப்புக்கள் இருக்கலாம் என்று இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளரான புரோட் தெரிவித்தார்.
2010ஆம் ஆண்டு லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டு முறையற்ற பந்துகளை வீசியமைக்காக ஆமிருக்கு தடை விதிக்கப்பட்டது. தடை முடிவடைந்த பிற்பாடு அவர் மீண்டும் பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்துள்ளார். மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடர்களில் ஆமிர் களமிறங்கிய போதிலும் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பது இதுவே முதல்தடவை.
இவரது மீள் வருகைக்கு பலரும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் லோட்ஸ் மைதானத்தில் அவருக்கு எதிர்ப்புக் குரல்களும் இருக்கலாம் என்று புரோட் தெரிவித்தார்.
"ஆமிரின் மீள் வருகையை நான் வரவேற்கிறேன். அவர் ஒரு திறமையான வீரர். ஆனால் லோட்ஸ் மைதானத்தில் அவருக்கு எதிர்ப்புக்கள் இருக்கும் என்றே கருதுகிறேன். ஏனெனில் ஆமிர் சூதாட்டத்தில் ஈடுபட்டது லோட்ஸ் மைதானத்தில் வைத்தே. கிரிக்கெட்டின் தாயகத்தில் ஏற்பட்ட இந்தக் களங்கத்தை அனைவரும் மன்னித்துவிடு வார்கள் என்று எண்ண இயலாது" - என்று புரோட் மேலும் தெரிவித்தார். (ம)

## கொடியேற்றியது கொலம்பியா வரலாற்றுச் சாதனை படைத்து



கோபா அமெரிக்கா கால்பந்துத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது கொலம்பியா.
தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் பராகுவேயை எதிர்கொண்டது கொலம்பியா. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் கொலம்பியா அணியின் சார்பாக கார்லோஸ் முதல் கோலைப் பதிவுசெய்தார். 30ஆவது நிமிடத்தில் ரொட்றிக்கஸ் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை வகித்தது கொலம்பியா. பதிலடி கொடுக்கும் முனைப்பில் களமிறங்கியது பராகுவே. நீண்டநேர போராட்டத்தின் மத்தியில் 71ஆவது நிமிடத்தில் பாராகுவே சார்பாக முதல் கோல் பதிவானது. இருப்பினும் அந்த அணியால் கொலம்பியாவின் ஆதிக்கத்தை தடுத்துவிட முடியவில்லை. இதனையடுத்து 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 100 வருட பழமையைக் கொண்ட கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத்தில் முதல் முறையாக காலிறுதிக்குத் தகுதிபெற்றது கொலம்பிய அணி. (ம)

# யூரோ கிண்ண கால்பந்தாட்டம்: ஐ.எஸ். அமைப்பினரால் அச்சம்

நடப்பு வருடத்துக்கான யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் பிரான்ஸில் இன்று ஆரம்பமாகிறது. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினரால் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால் அதை எப்படி முறியடிப்பது என்று பிரான்ஸ் பொலிஸார் நேற்றுமுன்தினம் போலித் தாக்குதல்களை மேற்கொண்டு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மக்கள் அதிகமாகக் குவியும் இடங்களை தமது இலக்குகளாகக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். 24 நாடுகள் பங்கேற்கும் யூரோ கிண்ணத் தொடர் மிகவும் பிரபலமானது. ஒவ்வொரு ஆட்டத்திலும் 80 ஆயிரம் முதல் 90 ஆயிரம் வரையிலான ரசிகர்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய இடத்தில் தாக்குதல் ஒன்று அரங்கேறினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ச்சேதம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு இருக்கும். இந்த நிலையில் அத்தகைய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் ஏற்படாமல் இருக்கவே பொலிஸார் இத்தகைய பயிற்சியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அது மட்டுமல்லாது, தொடர் பரிஸில் நடைபெறவுள்ளது. பரிஸ் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் ஏற்கனவே ஒரு தடவை தாக்குதல் நடத்தியிருந்தனர். குறித்த தாக்குதலும் கால்பந்தாட்ட மைதானம் ஒன்றில் நடத்தத் திட்டமிடப்பட்டு பின்னர் திடீர் மாற்றம் செய்யப்பட்டு இசையரங்கில் நடத்தியதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த தொடர் தொடர்பான பதற்றம் இரட்டிப்பாகியுள்ளதுடன் நகரம் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (ம)

# கழுகுகளின் கால்பந்தாட்டம்; கொலின்ஸ் முன்னேறியது

கரணவாய், ஜூன் 10
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கரணவாய் கொலின்ஸ் அணி மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து 4 ஆவது நிமிடத்தில் விஷ்ணுவின் உதவியுடன் முதல் கோலைப் பதவு செய்தது கொலின்ஸ். 10ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்து கோல் கணக்கை 1:1 என்று சமநிலை செய்தார் சாரங்கன். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
62ஆவது நிமிடத்தில் விஷ்ணு தனதும், தனது அணியினதும் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். பொம்மர்ஸின் முயற்சிகள் உடனுக்குடன் முறியடிக்கப்பட முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது கொலின்ஸ். (ம-108)

# அரையிறுதியில் சைனிங்ஸ்

கரணவாய், ஜூன் 10
சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் இளங்கதிர் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.
நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் இளங்கதிர், சைனிங்ஸ் அணிகள் மோதின. இதில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இளங்கதிர். ஆட்டநாயகனாக இளங்கதிர் அணியின் பிரசாந் தெரிவானார். (ம-108)

# யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன் ஹொக்கி பெண்கள் தொடரில்


பண்டத்தரிப்பு வீராங்கனை ஒருவரின் பந்துப் பரிமாற்றம் யாழ்ப்பாணக் கல்லூரி வீராங்கனையால் முறியடிக்கப்பட்ட போது

யாழ்ப்பாணம், ஜூன் 10
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட ஹொக்கித் தொடரில் பெண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியனானது.
சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. இரு பாதிகளிலும் எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாததையடுத்து சமநிலைத் தவிர்ப்பு விளாசல்கள் வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. முடிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் குளமங்கால் றோமன் கத்தேலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு விளாசல்கள் வரை சென்ற இந்த ஆட்டத்தில் குளமங்கால் றோமன் கத்தேலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)


யூனியன் கல்லூரியின் வசமிருந்த பந்தை சென். ஜோன்ஸ் வீரர் தட்டிப் பறிக்க முற்பட்டபோது

# கிண்ணம் வென்றது யூனியன் சென். ஜோன்ஸை பந்தாடியது

யாழ்ப்பாணம், ஜூன் 10
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட ஹொக்கித் தொடரில் ஆண்கள் பிரிவில் யூனியன் கல்லூரி சம்பியனானது.
சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்தின் 6ஆவது, 24ஆவது நிமிடங்களில் இரு கோல்களைப் பதிவு செய்து யூனியனை முன்னிலை பெறச் செய்தார் கரன். சென். ஜோன்ஸின் வியூகங்கள் எவையும் பயனளிக்காத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியின் முதல் நிமிடத்திலேயே சென். ஜோன்ஸின் குபேந்திரன் முதலாவது கோலைப் பதிவுசெய்ததும் ஆட்டத்தின் போக்கில் சென். ஜோன்ஸும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைப்புக் காட்டியது. ஆனால் இந்தப் போராட்டம் நீடிக்கவில்லை. யூனியனின் மேர்வின் 7ஆவது நிமிடத்திலும் யதுசன் 10 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய 4:1 என்று முன்னிலை வகித்தது யூனியன். சென். ஜோன்ஸால் மற்றுமொரு கோல் பதிவுசெய்யப்பட்ட போதிலும் யூனியனின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்ய இயலவில்லை. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் சம்பியனானது அந்த அணி.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. இதில் மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், ஜூன் 10

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து மன்னார் அடம்பன் ஐக்கிய அணி மோதவுள்ளது.

**அரியாலை சனசமூக நிலையத்தின் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நசரேத் அணியை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதவுள்ளது.
(ம-23-108)

# நீக்கிலஸ் - கில்லறி: ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், ஜூன் 10
இளவாலை யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சென். நீக்கிலஸ், கில்லறி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.
சென். ஹென்றிஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், முதல் பாதி இரு அணிகளுக்கும் சவாலாக அமைய கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே நிறைவடைந்தது. ஆட்டத்தின் 65ஆவது நிமிடத்தில் சென்.நீக்கிலஸ் அணியின் அமிலன் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவு செய்தார். ஐந்தே நிமிடத்தில் டிலுக்சனின் உதவியுடன் பதிலடி கொடுத்தது கில்லறி. மாற்றங்கள் நிகழாத நிலையில் 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது. (ம-422)

# சைக்கிளோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10
மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீர, வீராங்கனைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான மாகாண மட்ட சைக்கிளோட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளன.
ஆண்களுக்கான சைக்கிளோட்டம் 100 கிலோமீற்றர் தூரம் உடையதாகவும், பெண்களுக்கான சைக்கிளோட்டம் 40 கிலோமீற்றர் தூரம் உடையதாகவும் நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான போட்டி முல்லைத்தீவு சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு ஒட்டுசுட்டான், மாங்குளம் வரை சென்றுமீண்டும்முல்லைத்தீவை வந்தடையும். பெண்களுக்கான போட்டி முல்லைத்தீவு சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் வரை சென்று மீண்டும் முல்லைத்தீவு சந்தியில் நிறைவடையவுள்ளது. (ம-422)


யாழ்.மத்திய கல்லூரி அணி


மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி

யாழ். மாவட்ட துடுப்பாட்டச்சங்கம் நடத்திய 19 வயதுப் பிரிவினருக்கான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இன்று மோதவுள்ளது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆட்டம் நடைபெறும். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆஷஸ் டெஸ்ட் தொடர்களில் பகலிரவு ஆட்டம் வேண்டாம்

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான பழைமை வாய்ந்த டெஸ்ட் தொடரான ஆஷஸ் தொடரில், பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களைச் சேர்க்க வேண்டாம் என இரண்டு அணிகளினதும் தலைவர்களான சிமித், குக் இருவரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அழிந்து வரும் டெஸ்ட் ஆட்டங்களுக்கு புத்துயிரளிக்க பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை ஏற்க வேண்டிய கட்டாயம் உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்கள், அத்தகைய ஒரு மாற்றம் ஆஷஸிலும் ஏற்பட்டால், ஆஷஸின் பழைமைகள் அழிந்துவிடும் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம)



# மொகமட் அலியின் உடல் இன்று அடக்கமாகிறது

அமெரிக்காவின் முன்னாள் குத்துச் சண்டை வீரரான மொகமட் அலியின் உடல் இன்று அடக்கம் செய்யப்படுகிறது.

குத்துச் சண்டையின் ஜாம்பவான், குத்துச் சண்டையின் பிதாமகன் என்றெல்லாம் அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட மொகமட் அலி, பாரிச வாத நோயால் கடந்த சனிக்கிழமை தனது 74ஆவது வயதில் சாவடைந்தார். இவரது சாவுக்கு வெறுமனே விளையாட்டு வீரர்கள் மட்டுமல்லாமல் அரசியல் வாதிகள், சமூக ஆர்வலர்கள், தலைவர்கள், உலகப் பிரபலங்கள் எனப் பலரும் தமது அஞ்சலிகளைத் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் அவரது உடல் இன்று அடக்கம் செய்யப்படுகிறது. இதில் பொதுமக்களும் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

# மரதன் ஓட்டம்

மாங்குளம், ஜூன் 10

மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான முழு மரதன் ஓட்டப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு விஸ்வமடுவில் நடைபெறவுள்ளது.

குறித்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரனுடன் இன்று தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-422)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS Ltd
சனி , ஞாயிறு காலை 9.00-4.00
SLEAS Ltd
சனி 12.30-4.00
ஞாயிறு 10.00-4.00 மணிவரை
Auditor
கணக்காய்வாளர்
பிரதி ஞாயிறு 9.00-4.00 மணிவரை
Gs
சமுர்த்தி
பிரதி சனி பி.ப1.00-4.00 மணிவரை
பிரதி ஞாயிறு 2.00-5.00 மணிவரை
வடமாகாண வரி, நன்நடத்தை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் தெரிவுகளுக்கு
சனி 1.30-5.00 மணிவரை
T.P 077 668 3394
021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமஷல் வங்கி அருகில்)

# பரிஸ்ரெளவ், குக் அசத்தல் இங்கிலாந்து பலமான நிலை



இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் இங்கிலாந்து 279-6 என்ற நிலையில் உள்ளது.

லோட்ஸில் ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கையைச் சமாளிக்கக்கூடிய அடித்தளம் அமைத்தது குக், கேல்ஸ் இணை. இணைப்பாட்டமாக 58 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் கேல்ஸை வெளியேற்றினார் கேரத். கொம்டன், ரூட் அடுத்தடுத்து லக்மலால் வீழ்த்தப்பட்டனர். பத்தே ஓட்டத்துடன் வின்ஸை பவிலியனுக்கு அனுப்பினார் பிரதீப். 84 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது இங்கிலாந்து. குக், பரிஸ்ரெளவ் இணை நீண்ட போராட்டத்தை வெளிப்படுத்தியது. அரைச்சதம் கடந்து 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குக். தொடர்ந்தும் அச்சுறுத்தினார் பரிஸ்ரெளவ். சீரான இடைவெளியில் பதிவான பவுண்டரிகளுடன் பதட்டமில்லாமல் சதமொன்று அரங்கேறியது. நாள் முடிவில் இங்கிலாந்து 279-6 என்றுள்ளது. பரிஸ்ரெளவ் 107 ஓட்டங்களுடனும், வோக்ஸ் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இலங்கையின் சார்பாக கேரத், லக்மல், பிரதீப் மூவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.

**சங்காவுக்குக் கிடைத்த கௌரவம்**

பழைமையான மைதானமான லோட்ஸில், ஆட்டம் ஒன்று நடைபெறுவதற்க்கு முன்பாக முன்னாள் வீரர் ஒருவர் விருந்தினராக அழைக்கப்பட்டு மைதானத்தில் இருக்கும் பெரிய மணி அவரால் ஒலிக்கச் செய்யப்பட்டே ஆட்டம் ஆரம்பமாகும். இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டத்தைச் சங்கா ஆரம்பித்து வைத்தார்.

**சிக்கனமான மத்தியூஸ்**

மத்தியூஸ், தான் வீசிய முதல் ஐந்து பந்துப்பரிமாற்றங்களில் நான்கு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களை வீசியிருந்தார். மட்டுமல்லாது ஒரேயொரு ஓட்டத்தை மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தார். ஆறாவது பந்துப்பரிமாற்றத்தில் குக் அடுத்தடுத்து இரு பவுண்டரிகளைப் பதிவுசெய்தது வேறு கதை.

**களமிறங்கிய குசல் பெரேரா**

ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாக சந்தேகத்தின் அடிப்படையில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தார் குசல் பெரேரா. விசாரணையில் அவர் குற்றமற்றவர் என்பது உறுதியானதும் குசல் மீதிருந்த தடையை நீக்கியது ஐ.சி.சி. இதனால் கடந்த ஆறு மாத காலத்துக்குப் பிற்பாடு அவர் நேற்றைய ஆட்டத்தில்தான் முதல் முறையாகக் களமிறங்கினார்.

**கௌரவிக்கப்பட்ட அலிஸ்டர் குக்**

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனது 10 ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களை நிறைவு செய்தார் குக். மட்டுமல்லாது குறைந்த வயதில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் என்ற சாதனையையும் அவர் நிலை நாட்டியிருந்தார். இந்தச் சாதனைக்காக நேற்று ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் குக் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

(ம)



# இந்தியா – ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடர் பெப்ரவரியில்

இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் அடுத்த வருடம் டெஸ்ட் தொடரொன்று நடைபெற உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நேற்று உறுதிப்படுத்தியுள்ளது. பெப்ரவரியில் நடைபெறவுள்ள இந்தத் தொடரின் ஓர் ஆட்டம் உலகின் அழகான கிரிக்கெட் மைதானமாகக் கருதப்படும் தர்மசாலாவில் நடைபெறவுள்ளது. தர்மசாலாவில் இதற்கு முன்னர் டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பிரேஸிலுக்கு வெற்றி

கோபா அமெரிக்கா கால்பந்துத் தொடரில் நேற்று நடைபெற்ற பிரேஸில், ஹெய்ட்டி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பிரேஸில் அணி வெற்றிபெற்றுள்ளது.

அமெரிக்காவில் தொடர் நடைபெற்று வருகிறது. பிரேஸில், இதற்கு முன்னர் எதிர்கொண்ட ஆட்டத்தில் ஈக்குவடோர் அணியிடம் தோல்வி அடையும் நிலைக்குச் சென்று தப்பிப் பிழைத்திருந்தது. இதனால் இந்த ஆட்டத்தில் அந்த அணியின் மீது அதிக எதிர்பார்ப்புக்கள் இருக்கவே செய்தன. மட்டுமல்லாமல் நெய்மரின் மீள்வருகையாலும் பிரேஸில் பலம் பெற்றிருந்தது. பிலிப்பே பதிவுசெய்ய ஹற்றிக் கோல்களின் உதவியுடன் 7:1 என்ற கோல் கணக்கில் பிரேசில் வெற்றிபெற்றது. (ம)



புதிய கற்கைநெறிகள் ஆரம்பம் | நீங்கள் விரும்பும் நேரத்தில் கற்கலாம்
MS office, *Mobile Phone Repairing, *Computer Technician, *CCTV Technician *Multimedia *AutoCAD, *3D Max Engineering/ Expert-USA, Organ-Keyboard(Srikugan Sir)
*2 நாட்களில் பூர்த்தி செய்வதற்கான உத்தரவாதம்
அனுமதிக்கு முந்துங்கள்.
775520940, 212229464
www.mcai.edu.lk
10% Discount All Credit / Debit Card Payment
கல்வியங்காட்டு சந்தியில் MCAI Campus
Qualified Lectures From American Institute-AICT
The Island Wide leader in ICT

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af
பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
இலவசம்: பாடங்களின், PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..
CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF
யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
உடன் பதியவும் 021 2228093

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.